# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2025

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

**மாளிகாவத்தை, கொழும்பு -10**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2025

**செலவினத் தலைப்பு இலக்கம்: 290**

சுசன்த கஹவத்த
பணிப்பாளர் நாயகம்
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்
011-2472187
dgdfar@gmail.com

| | **பொருளடக்கம்** | **பக்கம்** |
|---|---|---|
| **அத்தியாயம் 01-நிறுவன விவரம் / செயற்பாட்டுச் சுருக்கம்** | | |
| 1.1 | அறிமுகம் | **4** |
| 1.2 | நிறுவனத்தின் நோக்கு,பணிக்கூற்று,குறிக்கோள்கள் | **4-5** |
| 1.3 | பிரதான பணிகள் | **5-7** |
| 1.4 | அமைப்பின் கட்டமைப்பு | **7-10** |
| 1.5 | அமைப்பு விளக்கப்படம் | **11** |
| **அத்தியாயம் 02-முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு** | | |
| 2.1 | 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் முன்னேற்றம் | **13-53** |
| 2.2 | சிறப்பு அடைவுகள் | **53-65** |
| 2.2 | சவால்கள் | **65-66** |
| 2.3 | எதிர்கால இலக்குகள் | **67-68** |
| **அத்தியாயம் 03- 2025 ஆம் ஆண்டின் மொத்த நிதிச் செயலாற்றுகை** | | |
| 3.1 | நிதிச் செயலாற்றுகை அறிக்கை | **69-71** |
| 3.2 | நிதி நிலைமை பற்றிய அறிக்கை | **71-72** |
| 3.3 | பணப்பாய்வு பற்றிய அறிக்கை | **73-75** |
| 3.4 | நிதி அறிக்கைக் குறிப்புகள் | **75-76** |
| 3.5 | வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை | **76** |
| 3.6 | ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | **77** |
| 3.7 | நி.ஒ.208 இன் பிரகாரம் வேறு அமைச்சுக்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு அளிக்கப்படும் ஏற்பாடுகள் | **77-78** |
| 3.8 | நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை | **78** |
| 3.9 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | **79** |
| **அத்தியாயம் 04-செயற்றிறன் குறிகாட்டிகள்** | | |
| 4.1 | நிறுவனத்தின் செயற்றிறன் குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) | **79-84** |
| **அத்தியாயம் 05-நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை** | | |
| 5.1 | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் | **85-89** |
| 5.2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் சாதனைகள் மற்றும் சவால்கள் | **90-92** |
| **அத்தியாயம் 06-மனித வள விவரம்** | | |
| 6.1 | பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம் | **93-95** |
| 6.2 | நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது உபரியின் தாக்கம் | **95-96** |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | **97-113** |
| **அத்தியாயம் 07-இணக்க அறிக்கை** | | **114-120** |

# அத்தியாயம் 01 – நிறுவன விவரம்

## 1.1. அறிமுகம்

கடற்றொழில் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களமானது, 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடிக் கலன்) சட்டம்,1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துதல்,தற்கால நடைமுறைகள் மற்றும் சர்வதேச சமுத்திர சட்டம்,பிரமாணங்களுக்கு அமைவாக செய்ய வேண்டிய திருத்தங்கள் மற்றும் புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகம் செய்வதன் மூலம் கடற்றொழிலை முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் போன்ற பிரதான செயற்பாடுகளை ஆற்றுகின்றது

அவ்வாறே, கடற்றொழிலின் அபிவிருத்தியின் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், அறுவடைக்குப் பின்னரான சேதத்தை இழிவளவாக்குவதற்கு அவசியமான உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு நுகர்விற்கான மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல், மீனவக் குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்வடையச் செய்வதற்காக மீனவர்களையும் மீனவப் பெண்களையும் வலுவூட்டுதல் போன்றனவும் முன்னுரிமையளிக்கப்படும் செயற்பாடுகளாகும்.

## 1.2. நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள

**நோக்கு**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை நிலையான முறையில் பேணியவாறு மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை வலுப்படுத்துவதனூடாக தேசிய பொருளாதாரத்திற்கு உகந்த பங்களிப்பை வழங்குதல்

**பணிக்கூற்று**

கடற்றொழிலின் நிலையான அபிவிருத்தியினூடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வதேச சமுத்திர சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முகாமைத்துவம் செய்தல்.

## 1.2.1. குறிக்கோள்கள்

- உள்நாட்டு,சர்வதேச சமுத்திர சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் நடவடிக்கைகளின் முகாமைத்துவம்,முறைப்படுத்தல்,பேணிக்காத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி
- கடற்றொழில் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
- உள்நாட்டு மற்றும் சர்வதேச கடலில் மீன்பிடித்தலுக்கான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்
- மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல்
- சர்வதேச தரநிலைகளுக்கமைவாக ஏற்றுமதி மீன் உற்பத்திகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- அறுவடையின் பின்னரான வீண்விரயத்தை குறைத்தல் மற்றும் உள்நாட்டு மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல்
- சர்வதேச சட்டங்கள் மற்றும் பிராந்திய பிரமாணங்களுக்கமைவாக கடற்றொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்
- துறைமுக அரச நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குவிதித் தொடரிற்கமைவாக துறைமுக சேவைகளை நடைமுறைப்படுத்தல்
- ஆழ்கடலில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்களின் நடவடிக்கை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிகழ்நிலை முறையில் மீனவ மக்களுக்கும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் உகந்த சேவையை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிகழ்நிலையூடாக கடற்றொழில் துறைக்குரிய தரவுகளை விரைவாகவும் தெளிவாகவும் பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தல்.

## 1.3. பிரதான செயற்பாடுகள்

- கடற்றொழில் நடவடிக்கை ஒழுங்குவிதிகளை உருவாக்கல்,விதித்தல்,புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை உருவாக்கல்,விதித்தல்,புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை உருவாக்கல்,விதித்தல்,புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- கடற்றொழில் கலன்களை பதிவு செய்தல்,அடமானம் மற்றும் கடற்றொழில் நடவடிக்கை உரிமம் வழங்குதல
- உயிர் மீன்களின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள்ஏற்றுமதிக்காக உரிமம் வழங்குதல்

- மீன் மற்றும் மின் உற்பத்திகளின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அந்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குமுறைப்படுத்தல்
- உயர் வணிகப் பெறுமதியுள்ள மீன் மற்றும் நீரியல் வளங்களின் முகாமைத்துவத்திற்கான உரிமம் வழங்குதல்
- வெளிநாட்டு கடற்றொழில் கலன்களுக்கு மீன்களை கரையிறக்குவதன் பொருட்டு உரிமம் வழங்குதல்
- கடற்றொழில் முகாமைத்துவம் தொடர்பான மீனவ மக்களின் அறிவை மேம்படுத்துதல்
- மீன்பிடிக் கலன் உற்பத்தி நிறுவனங்களை பதிவு செய்தல்,முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல
- மீன்பிடி உள்ளீடுகள் விநியோகஸ்தர்களை பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- கடற்றொழில் சங்கங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதன் பொருட்டு வழிகாட்டல்களை வழங்குதல்
- தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை
- கடற்றொழில் தொடர்பான தரவு சேகரித்தல
- வெளிநாடுகளில் கைது செய்யப்படுகின்ற கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்களை மீள இலங்கைக்கு கொண்டு வருதல்
- கடலில் விபத்துக்குள்ளாகும் கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்களை மீள இலங்கைக்கு கொண்டு வருதல்
- ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீன்களை தரப் பரிசோதனைக்கு உட்படுத்துதல்
- மீன்களை பதனிடும் நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் மீன் ஏற்றுமதிக்காக சுகாதாரச் சான்றிதழ் வழங்குதல்
- உள்நாட்டு நுகர்விற்கான மீன் விற்பனை நிலையங்களின் தரத்தை மேம்படுத்தல்
- கடற்றொழிலில் ஈடுபடுகின்ற பல்தினக்கலன்களுக்கு கலன் கண்காணிப்பு உபகரணம் பொருத்துதல்
- கடற்றொழில் கலன் மற்றும் கரைக்கிடையில் வானொலி செய்திப் பரிமாற்ற வசதிகளை பெற்றுக் கொடுத்தல்
- எல்லைகளை மீறிப் பயணிக்கும் மீன்பிடிக் கலன்கள் தொடர்பான அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல்
- நாளாந்த வானிலை அறிக்கை மற்றும் சீரற்ற வானிலை முன்னறிவித்தல்களை தினசரி வழங்குதல்
- கலன் கண்காணிப்பு அமைப்பின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல்களிற்கமைவாக கலன்களை விழிப்புணர்வூட்டுதல்

- சட்டவிரோத வெளிநாட்டு மின்பிடிக் கலன்கள் மற்றும் தொழிலாளர்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களை விழிப்புணர்வூட்டுதல்
- கடற்றொழில் கலன்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக உரிமம் மற்றும் அழைப்புக் குறியீடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்
- கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்கள் தொடர்புறுகின்ற விபத்துக்களில் காப்புறுதிக்காக தகவல்களை உறுதிப்படுத்தி வழங்குதல்
- சர்வதேச கடல் எல்லைகளில் மிதக்கும் கலன்களை காப்பாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- மீனவக் குடும்ப உறுப்பினர்களின் தொழிற்கல்விக்காக பயிற்சித் திட்டங்களை நடாத்துதல
- கடற்றொழிலாளர் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீனவ சமூகத்தை பாதுகாத்தல்
- கடனீரேரி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மீனவக் கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- மீனவப் பெண்களிற்கான மாற்று வருமானமீட்டும் செயற்றிட்டங்கள்

## 1.4. நிறுவன கட்டமைப்பு

கடற்றொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் நிர்வகிக்கப்படுகின்றது. அதன் நடவடிக்கைகளை மிக வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றுவதற்காக மேலதிக பணிப்பாளர் நாயகம் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். திணைக்களத்தின் செயற்பாடுகளை திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பின்தொடர்தலை எளிதாக்குவதற்காக தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகள் 09 பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அவை,

1. முகாமைத்துவப் பிரிவு
2. அபிவிருத்திப் பிரிவு
3. தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு
4. கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு
5. ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு
6. தகவல் தொழில்நுட்பப் பிரிவு
7. நிர்வாகப் பிரிவு
8. நிதிப் பிரிவு
9. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இப்பிரிவுகளின் செயற்பாடுகள் பணிப்பாளர்கள் 07 பேர் மூலமும்,பிரதம கணக்காளர் மற்றும் பிரதம உள்ளக கணக்காய்வாளர் மூலமும் நிறைவேற்றப்படுகின்றன.

தீவின் கரையோர மாவட்டங்களை உள்ளடக்கியதாக 15 மாவட்ட உதவிப்பணிப்பாளர் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு மாவட்டத்தினதும் நடவடிக்கைகள் அம்மாவட்டத்தின் பிரதி/உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் நிறைவேற்றப்படுகின்றது.

மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக 149 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. கடற்றொழில் பரிசோதகர்,கடற்றொழில் சமூக அபிவிருத்தி உதவியாளர், கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி அலுவலர் மற்றும் கடற்றொழில் அலுவலர் போன்ற அலுவலர்களினால் இந்த கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளினுள் சகல கடற்றொழில் நடவடிக்கைகளும் செயற்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே,கடற்றொழில் துறைமுகங்களை சார்ந்ததாக 18 பிரதேச தேடுதல் கண்காணிப்பு மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன், வானொலி அலுவலர்கள் இரவிலும் பகலிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப் பிரதேச தேடுதல் கண்காணிப்பு மத்திய நிலையங்கள் மூலம் ஆழ்கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீன்பிடிப் படகுகள் மற்றும் தரைக்கிடையிலான வானொலி செய்திப் பரிமாற்றத் தொடர்பை 24 மணி நேரமும் வைத்திருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.அதன் மூலம், படகுகளிற்கான வானிலை அறிக்கைகள் மற்றும் அவசர முன்னெச்சரிக்கைகள் நாளாந்தம் வழங்கப்படுவதுடன்,படகு உரிமையாளர்களின் செய்திகளை வழங்குதல் மற்றும் கடற்றொழிலாளர்களின் செய்திகளை பெற்றுக் கொள்ளல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும்,கடற்றொழில் படகுகளிலிருந்து கிடைக்கும் அவசர அனர்த்த செய்திகளின் போது அவ்வேளையிலிருந்து அச்செயற்பாடு முடிவுறும் வரை தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இந்த அனைத்து செயற்பாடுகளும் கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள தேடுதல் நடவடிக்கை அறையினால் ஒருங்கிணைக்கப்படும்.

அதற்கு மேலதிகமாக, 07 மாவட்டங்களில் அமைந்துள்ள 25 மீன்பிடித் துறைமுகங்களிலும் துறைமுக அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் கடற்றொழில் அலுவலர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் போன்ற அலுவலர்களினால் இரவிலும் பகலிலும் துறைமுகத்திலிருந்து வெளியேறும் படகுகளை சோதனையிடல், புறப்படுகை பதிவு செய்தல் மற்றும் அனுமதி வழங்குதல், துறைமுகத்தை வந்தடைகின்ற கடற்றொழில் படகுகளின் பயணத்தடவைகளுக்குரிய லொக் குறிப்பை பெற்றுக் கொள்ளல், மீன் அறுவடைகளின் சோதனை,ஏற்றுமதிக்கான மீன் தொகைக்குரிய அறிக்கைகளை தயாரித்து கொள்வனவாளர்களுக்கு வழங்குதல், சட்டவிரோத,அறிக்கையிடப்படாத மற்றும் முறைசாரா கடற்றொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது தொடர்பில் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளல், தரவுக் குறிப்பு (லொக் குறிப்பு) மற்றும் பெற்றுக் கொள்ளப்படும் வாக்கு மூலங்களை தலைமை அலுவலகத்திற்கு பெக்ஸ் மற்றும் ஈ மெயில் மூலம் அனுப்புதல் மற்றும் மாற்று கண்காணிப்பு அறிக்கைகளை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சர்வதேச் கடலில் மீன்பிடித்தலிற்காக செல்கின்ற அனைத்து பல்தினக் கலன்களையும் செய்மதித் தொழில்நுட்பத்தினூடாக கண்காணிப்பது சர்வதேச சட்டங்கள் மற்றும் விதிகளின் ஒருங்கிணைந்த

பகுதியாகும். அதற்கமைவாக, 2015 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச கடலில் இயக்க உரிமம் பெற்ற கலன்கன் மாத்திரமே கலன் கண்காணிப்பு அமைப்பினூடாக (VMS) கண்காணிக்கப்பட்டதுடன், மேற்கூறப்பட்ட சர்வதேச சட்டங்கள்,விதிகள் மற்றும் மீன் ஏற்றுமதி தேவைப்பாட்டிற்கமைவாக அனைத்து பல்தினக் கலன்களையும் கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) மூலம் கண்காணிப்பதற்கான தேவைப்பாடு எழுந்தது. பல்தினக் கலன்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் அல்லாத பிற சட்டவிரோத நடவடிக்கைகளை (உதா:சட்டவிரோத புலம்பெயர்வு மற்றும் போதைப் பொருள் கடத்தல்) இனங்காண்பதற்கான செலவு குறைந்த முறையாகவும் இத்தேவைப்பாடு உருவாகியுள்ளது.


அதற்கமைவாக, மேற்குறித்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்கின்ற 4200 கலன் கண்காணிப்பு அமைப்பு (VMS) அலகுகளை உள்ளடக்கிய பூரணமான கலன் கண்காணிப்பு அமைப்பொன்று அவுஸ்திரேலிய அரசின் உதவியுடன் திணைக்களத்தினுள் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புதிய கலன் கண்காணிப்பு அமைப்பிற்கு (VMS), அனைத்து துறைமுக அலுவலகங்களினூடாகவும் உள்நுழைவதற்கான இயலுமை காணப்படுவதுடன் தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கடற்றொழில் கண்காணிப்பு நிலையத்தின் (FMC) மூலம் 24x7 பூராகவும் அந்நடவடிக்கைகள் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள், ஆட்கடத்தல்,போதைப் பொருள் வியாபாரம் மற்றும் சட்டவிரோத எல்லை தாண்டல்கள் போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் நிகழக்கூடிய ஆபத்தான கலன்களை இந்த நிலையத்திலுள்ள வசதிகள் மூலம் அடையாளங் காண முடியும். அத்துடன், அவசர அனர்த்த நிலைமைகளில் கடற்றொழில் கலன்களிற்கான வசதிகளை வழங்குவதற்கும் இவ்வமைப்பை பயன்படுத்த முடியும். இந்த கடற்றொழில் கண்காணிப்பு மத்திய நிலையம் சகல நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி நவீனமயமாக்கப்பட்டுள்ளதுடன் தற்காலத்தில் ஆசியாவில் உள்ள அதி நவீன கண்காணிப்பு மத்திய நிலையமாகவும் இதனைக் கருத முடியும்.

அவ்வாறே, கலன் கண்காணிப்பு அலகு, கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு மற்றும் கடற்றொழில் துறைமுகங்களில் அமைந்துள்ள சர்வதேச கடற்றொழில் நடவடிக்கை அலகுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற உப அலுவலகமொன்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் மூலம் மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதியின் போது,குறிப்பாக ஐரோப்பிய சங்க நாடுகளுக்கான ஏற்றுமதியின் போது ஒவ்வொரு மீன் தொகைக்கும் மீன்பிடிப்புச் சான்றிதழ் (Catch Certificates) வழங்குதல் மற்றும் கடற்றொழில் உற்பத்திகளின் மீள்ஏற்றுமதிக்காக மீன்கள் இறக்குமதி செய்யப்படும் போது தேவையான சோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. நாளாந்தம் விமானம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஏற்றுமதிகளுக்கு தேவையான சான்றிதழ்களை விரைவாகவும் தாமதமின்றியும் வழங்குவதற்காக தரக்கட்டுப்பாட்டு அலகொன்று சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், அது 24 மணி நேரமும் (24x7) திறந்தேயுள்ளது.

தரையை வந்தடைகின்ற ஒவ்வொரு பல்தினக் கலனினதும் மொத்தப் பயணத் தடவைகள் தொடர்பாக அமைவிடத் தகவல்கள் அடங்கிய கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) பயணவழி அக்கலனிற்குரிய லொக்புத்தக பக்கத்துடன் பரீட்சிக்கப்பட்ட பின்னர் கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) தரவுகளுடன் பொருந்தின் மாத்திரம் அம்மீன் தொகையை ஏற்றுமதி செய்ய முடியுமானவாறும் இக்கலன் எவ்வித சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையையும் மேற்கொள்ளாது சட்டபூர்வமாக மீன்களை பிடித்துக் கொண்டு வந்த கலன் என்பதாகவும் அத்தாட்சிப்படுத்தி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் சரிபார்ப்பு அறிக்கை வழங்கப்படுகிறது. இந்த சரிபார்ப்பு அறிக்கை, கட்டுநாயக்க விமான நிலைய தரக்கட்டுப்பாட்டு அலகிற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அக்கலனின் அப்பயணத் தடவைக்குரிய மீன்களுக்கான ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான மீன்பிடிப்புச் சான்றிதழ் (Catch Certificate) வழங்கப்படுகிறது. இந்த மீன்களின் தகவல் சரிபார்ப்பு செயன்முறை வாரத்தின் 07 நாட்களும் 24 மணி நேரமும் இரவிலும் பகலிலும் (24x7) செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள், துறைமுக நடவடிக்கை அலுவலகங்கள் (21), கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கலன் கண்காணிப்பு அலகு,சர்வதேச கடற்றொழில் நடவடிக்கை அலகு மற்றும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலகு போன்ற அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும். இந்த செயன்முறை காரணமாக, பல்தினக் கலன்கள் மூலம் நாட்டிற்கு கொண்டு வரப்படும் சட்டபூர்வ மீன் தொகை உரியவாறு அறிக்கைகளுடன் மற்றும் உரிமங்களுடன் பிடிக்கப்பட்டவை என்பதை அத்தாட்சிப்படுத்தி ஏற்றுமதிக்காக அனுப்புவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

## 1.5 திணைக்களத்தின்அமைப்பு விளக்கப்படம்



# அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் முன்னேற்றம்

### அபிவிருத்திப் பிரிவு

இலங்கையின் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பை வழங்குவதற்காக வினைத்திறனான மற்றும் சூழல் நேயமிக்க நவீன தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தி கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல்,ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் மீனவ மக்களின் சமூக,பொருளாதார மற்றும் சமூக நலன்புரி நிலையை உயர்த்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும்.

அபிவிருத்திப் பிரிவின் முக்கிய செயற்பாடுகள்

- மீன்பிடிக் கலன் உற்பத்தி நிறுவனங்களை பதிவு செய்தல்,ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- மீன்பிடிக் கலன் வடிவமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கல்.
- மீன்பிடி உள்ளீடுகள் விநியோகஸ்தர்களை பதிவு செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல
- மீன்பிடித் துறைக்கு நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கரையோர நிர்மாணிப்புத் திட்டங்களுக்குரிய சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு மீன்பிடிக் கைத்தொழிலுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பரிந்துரைகள் வழங்குதல்.
- மீன்பிடித்துறைக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.
- மாற்று வருமானமீட்டல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல
- கடற்றொழில் மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழிலாளர் காப்பீட்டை நடைமுறைப்படுத்தல்.
- மீனவர் ஓய்வூதிய முறைமையை நடைமுறைப்படுத்தலின் ஊடாக மீனவ சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- கடற்றொழில் இழப்பீடு வழங்குதல் தொடர்பாகச் செயற்படுதல்.
- தியவர கெகுளு சிறுவர் சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- கடனீரேரி சூழற்றொகுதிகளின் அபிவிருத்தி மற்றும் பேணலை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கடனீரேரி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் வருடாந்த செயற்றிட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து முன்னேற்ற ஆய்வு செய்தல்.
- விசேட கடற்றொழில் பிரச்சினைகளை தீர்த்தல்

**கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்**

| செயற்பாடு | 2025.12.31வரையான முன்னேற்றம் |
|---|---|
| **காப்புறுதி செய்யப்பட்ட மொத்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை** | 25,832 |
| **காப்புறுதி செய்யப்பட்ட மொத்த கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை** | 12,842 |
| **கடற்றகுதிச் சான்றிதழ் வழங்கல்கள்** | 32,990 |
| **மீன்பிடிக் கலன் கட்டும் தளங்களின் பதிவு செய்தல்கள்** | 48 |
| **மீன்பிடிக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகஸ்தர்களின் பதிவு செய்தல்கள்** | 17 |
| **மீன் இரை விநியோகஸ்தர்களை பதிவு செய்தல்** | 04 |
| **படகு இயந்திர விநியோகஸ்தர்களை பதிவு செய்தல்** | 12 |
| **இயற்கை அனர்த்தங்களுக்கான இழப்பீடு வழங்கல்கள்** | 02 |
| **தியவர கெக்குளு சிறுவர் சேமிப்புக் கணக்குத் திறத்தல்கள்** | 818 |
| **வழங்கப்பட்டுள்ள மொத்த மீனவர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை** | 1973 |
| **வழங்கப்பட்டுள்ள மொத்த படகோட்டி உரிமங்களின் எண்ணிக்கை** | 1044 |

**பொருளாதார நெருக்கடி காரணமாக மீன்பிடித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைத்து கடற்றொழிலை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டம்**

பொருளாதார நெருக்கடியினால் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறைத்து, அத்தொழிலை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ், தற்போது 15 கடற்றொழில் மாவட்டங்களுக்கு உரிய OFRP, IMUL, IDAY மற்றும் MTRB கலன் உரிமையாளர்களுக்கு 2024 அக்டோபர்,நவம்பர், திசம்பர், 2025 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் வரையிலான காலப்பகுதிகளுக்காக 1,926,056,968.01 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**மீன்பிடி இறங்குதுறைகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல்**

மீன்பிடி இறங்குதுறைகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், பீகன் விளக்குகள் மற்றும் மின்விளக்குகளைப் பொருத்தும் திட்டத்தின் கீழ் 67 பீகன் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
மேலும், இதற்கு மேலதிகமாக 22 பீகன் விளக்குகள் மற்றும் மின்விளக்குகளும் கொள்வனவு செய்து முடிக்கப்பட்டுள்ளதுடன், 16 பீகன் விளக்குத் தூண்களின் கட்டுமானப் பணிகளும் தற்போது நிறைவடைந்துள்ளன.

**இயற்கை அனர்த்தங்களினால் கடலோர மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படும் தடைகள் காரணமாக அத்தொழிலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி / 2090-1-1-13-2506).**

கடற்றொழில் மாவட்டங்களில் நடைமுறையிலுள்ள சிறுதொழில் மீன்பிடிக் கலன்களின் பயணப் பாதையை எளிதாக்கும் நோக்கில், கால்வாய்கள்/ஆற்று முகத்துவாரங்களைச் சுத்தப்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் இரண்டு கால்வாய்கள் சுத்தப்படுத்தி முடிக்கப்பட்டுள்ளன

**புதிய மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நன்மைகள் திட்டம்.**

விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபை, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கை நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து, உலக மீனவர் தினத்தை முன்னிட்டு 22 மீனவர்களை இணைத்துக்கொண்டு புதிய மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நன்மைகள் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

05 விழிப்புணர்வு திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம், அனைத்து கடற்றொழில் மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் திணைக்கள அதிகாரிகள் இது குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர்

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவக் குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் நிதியுதவியின் கீழ் 500 முன்-தயாரிக்கப்பட்ட பொருத்து வீடுகளை வழங்கும் வேலைத்திட்டம்.**

சீனக் குடியரசின் உதவியின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு 750 மில்லியன் ரூபா பெறுமதியான 500 முன்-தயாரிக்கப்பட்ட பொருத்து வீடுகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தீவிரமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் குறைந்த வருமானம் கொண்ட மீனவர்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுனர்களைத் தெரிவு செய்யும் அளவுகோல்களுக்கு அமைவாக, அனைத்து மாவட்டங்களிலும் பயன் பெறுனர்களை அடையாளம் காணும் பணிகள் நிறைவடைந்துள்ளன. முன்-தயாரிக்கப்பட்ட பொருத்து வீடுகளின் அத்திவாரத்தை அமைப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளும், அத்திவாரத்தை அமைக்கும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.



மட்டக்களப்பு மாவட்டம்



கிளிநொச்சி மாவட்டம்

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவக் குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் நிதியுதவியின் கீழ் அரிசி நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம்**

2024-2025 ஆம் ஆண்டின் இறுதியில் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 555.40 மில்லியன் ரூபா பெறுமதியான 1,630 மெட்ரிக் தொன் அரிசி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மீனவக் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்து முடிக்கப்பட்டுள்ளது

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறைந்த வருமானம் பெறும் மீனவக் குடும்பங்களுக்கு சீனக் குடியரசின் நிதியுதவியின் கீழ் 75000 மீன்பிடி வலைகளை வழங்கும் வேலைத்திட்டம்**

| பயன் பெறுநர்களின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்கப்பட்ட வலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| **11,428** | 68568 |

**கடனீரேரி அபிவிருத்தி**

**கடனீரேரி முகாமைத்துவக் குழு**

கடனீரேரி முகாமைத்துவம் பற்றிய மீனவர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

| கடற்றொழில் மாவட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| **சிலாபம்** | 4 |
| **நீர்கொழும்பு** | 4 |
| **புத்தளம்** | 1 |
| **காலி** | 3 |
| **கல்முனை** | 2 |

**கடனீரேரிகளில் எல்லைத் தூண்கள் நடுதல்**

| கடற்றொழில் மாவட்டம் | நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|
| **புத்தளம்** | 740 | රු1 .,133,870.00 |
| **சிலாபம்** | 141 | රු176 .,250.00 |
| **செலவிடப்பட்ட மொத்தத் தொகை** | | රු1 .,310,120.00 |

## ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு

**மீனவ சமூகம், கடற்றொழில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கு இடையே சிறந்த உறவை கட்டியெழுப்புதல்.**

இலங்கையின் மீன்பிடித் தொழிலில் சட்டவிரோத, ஒழுங்கற்ற மற்றும் அறிக்கையிடப்படாத மீன்பிடி நடவடிக்கைகளைத் தவிர்த்து, மீன்வளத்தின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதே ஆய்வுப் பிரிவின் முதன்மையான நோக்கமாகும்.

புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சர்வதேச சமுத்திர சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு அமைய வளங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம், இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்குப் பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்காக மீன்பிடித் தொழிலை நிலையான முறையில் அபிவிருத்தி செய்வதும் ஒரு நோக்கமாகும்.

எதிர்கால சந்ததியினருக்காக மீன்வளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, மீனவ சமூகம், மீன்பிடித் துறையை ஒழுங்குபடுத்தும் கடற்றொழில் உத்தியோகத்தர்கள் மற்றும் மீன்பிடித் துறையுடன் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வை வழங்குவதும் பயிற்சியளிப்பதும் இதன் நோக்கமாகும்.

ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவின் செயற்பாடுகள்

**ஆய்வு அலகு**

- வருடாந்த சுற்றி வளைப்புகள் / சோதனைகள் தொடர்பான திட்டங்களை தயாரித்தல்
- கலன் கண்காணிப்பு அமைப்பினால் இனங்காணப்பட்ட சட்ட மீறல்கள் தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளின் சுற்றி வளைப்புகளுக்கு மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு ஒப்புதல் அளித்தல் மாவட்ட மட்டத்திலான விசாரணைகள், சுற்றிவளைப்புக்கள் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளின் மேற்பார்வை
- சமரச நடவடிக்கைகள், நிர்வாக அபராத விதிப்புக் குழுவைக் கூட்டுதல் மற்றும் நிர்வாக அபராதங்களை அறவிடும் பொறிமுறையைச் செயற்படுத்துவதை மேற்பார்வை செய்தல்
- மீன்பிடிக் கலன் கட்டும் தளங்கள், மீன்பிடி உபகரண உற்பத்தி விநியோகம் மற்றும் இரை விநியோக நிறுவனங்களைப் பரிசோதித்தல்/ சுற்றிவளைத்தல்
- மீன்பிடி உற்பத்திகள் பதனிடும் மற்றும் விநியோக நிறுவனங்களை பரிசோதித்தல்/ சுற்றிவளைத்தல்
- வானொலி நிலையங்கள் மற்றும் சர்வதேச கடற்றொழில் நடவடிக்கை அலகுகளை சோதனையிடல் / புலனாய்வு செய்தல்
- விசேட புலனாய்வுகளைப் பிரசித்திப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அவசர அழைப்பு கட்டளைகளை வழங்குதல்.
- அனைத்து புலனாய்வுகள் தொடர்பாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அரச புலனாய்வுப் பிரிவு மற்றும் ஏனைய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் புலனாய்வுகளுக்காகக் கோரப்படும் தகவல் அறிக்கைகளை வழங்குதல்

**பயிற்சி அலகு**

- திணைக்களத்தின் வருடாந்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான திட்டத்தை தயாரித்தல்
- தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் கடற்றொழிலாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்
- மீன்பிடிப் படகோட்டிகளுக்கான பயிற்சிப் பாடநெறிகளை தயாரித்தல் மற்றும் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் படகோட்டி பயிற்சி திட்டங்களை மேற்பார்வை செய்தல்
- மீன்பிடிப் படகோட்டிகள்/மீன்பிடித் தொழிலாளர்களுக்கான முதலுதவிப் பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- மீனவக் குடும்பங்களின் அங்கத்தவர்களின் தொழிற்கல்வியை மேம்படுத்துதல, மீனவப் பெண்களுக்கு மாற்று வருமானமீட்டும் வேலைத்திட்டங்கள் மற்றும் திறன்விருத்தி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்து மீன்பிடித்துறை தொடர்பான தொழிநுட்ப/இடைக்காலப் பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்காக வருகைதரும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் அதனை ஒருங்கிணைத்தல்.
- அனைத்து அலுவலர்களுக்கும் உள்நாட்டில் பயிற்சிகள் மற்றும் திறன்விருத்தி திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- பயிற்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் தொடர்பான பின்னூட்டங்கள் மற்றும் பகுப்பாய்வு.
- விழிப்புணர்வு தொடர்பான துண்டுப்பிரசுரங்கள், சிற்றேடுகள் மற்றும் வீடியோக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றின் விவரக்குறிப்புகள் மற்றும் பிரதிளைத் (Script) தயாரித்தல்

**ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு - 2025.12.31 வரையான முன்னேற்றம்**

**ஆய்வு அலகு**

| தொடர் இலக்கம் | பிரிவின் பணி | செயற்பாட்டுச் சுட்டி | எதிர்பார்க்கப்படும் இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டத்திலான சுற்றிவளைப்புகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிரான விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல். | மாவட்ட மட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பேணப்படும் இற்றைப்படத்தப்பட்ட தரவு அறிக்கை | குறிப்பிட்ட இலக்குகளை வழங்க முடியாது | 713 |
| 2 | நிர்வாக அபராதங்களை விதிப்பதற்காக அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் பெறப்படும் கோரிக்கைகளை, உரிய நடைமுறைக்கு அமைய நிர்வாக அபராதங்களை விதிப்பதற்காக ஆற்றுப்படுத்துதல். | நிர்வாக அபராதம் விதிப்பதற்கு உட்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | 35 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **3** | கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) மூலம் கண்டறியப்பட்ட சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுதல். | கலன் கண்காணிப்பு அமைப்பின் (VMS) மூலம் கண்டறியப்பட்ட சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளின் எண்ணிக்கை | | 889 | |
| **4** | விசேட சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளல் | திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புக்கள் அமுல்படுத்தப்பட்ட சதவிகிதம் | 3 | 2 | |
| **5** | மீன்பிடி கலன்கள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன்பிடி உபகரணங்கள், உற்பத்திகள் மற்றும் மீன்பிடித் தூண்டில் இரை விநியோக நிறுவனங்கள் தொடர்பான பரிசோதனைகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளுதல். | 1.சோதனைகளின் எண்ணிக்கை | 14 | 08 | |
| | | 2.தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | குறிப்பிட்ட இலக்குகளை வழங்க முடியாது | 0 | |

**பயிற்சி அலகு**

| தொடர் இலக்கம் | பிரிவின் பணி | செயற்பாட்டுச் சுட்டி | எதிர்பார்க்கப்படும் இலக்கு | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| **1** | தொடர்புடைய பங்குதாரர்களுக்கு கடற்றொழில் சட்டம் மற்றும் சட்டபூர்வமான மீன்பிடி உள்ளீடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | தொடர்புடைய பங்குதாரர்களை (stake holder) விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 4 | 13 | |
| **2** | திணைக்கள அலுவலர்களுக்கான பயிற்சித்திட்டங்கள் மற்றும் திறன் விருத்தி திட்டங்களை ஒழுங்கமைத்தல் | அலுவலர்களுக்காக தயாரிக்கப்பட்ட தொடர்புடைய திட்டங்களின் எண்ணிக்கை | 44 | 35 | |
| **3** | மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் மீன்பிடித் தொழிலாளர் விழிப்புணர்வுத் திட்டங்களை ஒழுங்கமைத்தல். | மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | 58 | 113 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **4** | வெளிவாரி நிறுவனங்களினால் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்கள் /முதுகலை பட்டப்படிப்புகள்/ டிப்ளோமா பாடநெறிகளுக்கு திணைக்கள அலுவலர்களை அனுப்புதல். | வெளிவாரிய நிறுவனங்களை ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | 21 | 14 | |
| **5** | பல்கலைக்கழக/ தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான தொழிற்றுறைப் பயிற்சிகளை வழங்குவது தொடர்பான வெளிவாரி மேற்பார்வையாளராகச் செயற்படுதல். | பல்கலைக்கழக/ தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான தொழிற்றுறைப் பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை. | குறிப்பிட்ட இலக்குகளை வழங்க முடியாது | 0 | |





படம் 4: விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளல். சிங்கிறால்களை பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் அனுமதியின்றி சிங்கிறால்களை உடைமையில் வைத்திருந்தமை



படம் 5: தொடர்புடைய பங்குதாரர்களுக்கு (stake holder) கடற்றொழில் சட்டம் மற்றும் சட்டபூர்வமான மீன்பிடி உள்ளீடுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்



படம் 6: மதவாச்சி,பூனாவ, ஷிக்ஷா கடற்படை முகாமில் பயிற்சி பெறும் கடற்படை அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

நோக்கம்

இந்தப்பிரிவின் பிரதான நோக்கம் மீன்பிடி வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான நிகழ்நிலை பயன்பாட்டு மென்பொருளை நடைமுறைப்படுத்துவதும் பராமரிப்பதும் ஆகும். திணைக்களத்தின் வலையமைப்பைப் பராமரித்தல், நிகழ்நிலை பயன்பாட்டு அமைப்பை இயக்குதல், தொடர்புடைய வன்பொருள்களைக் கையாளுதல், விரிவான தரவு பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி அளித்தல் என்பன இப் பிரிவின் முக்கிய கவனத்திற்குரிய துறைகளாகும். அத்துடன், 24*7 நேரமும் இயங்கும் பலநாள் மீன்பிடிக் கலன்களைக் கண்காணிக்கும் அமைப்பும் இந்தப் பிரிவின் ஊடாகவே செயற்படுத்தப்படுகிறது.

பிரதான செயற்பாடுகள்

- திணைக்களத்தின் சேவையகங்களில் திணைக்கள வலையமைப்பு மென்பொருள்களைச் செயற்படுத்துதல்.
- திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தைப் பராமரித்தல் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம்
- திணைக்கள வலையமைப்பு மற்றும் அடிப்படைத் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- இயக்கமுறை அறிக்கையிடல் அமைப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்.
- திணைக்களத்திற்கான வன்பொருள் அமைப்பைப் பராமரித்தல்.
- பணியாளர்கள் அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பைச் செயற்படுத்துதல்.
- திணைக்களத்தின் கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள்களைப் பராமரித்தல்.
- தொழில்நுட்ப சிக்கல்களை உடனுக்குடன் தீர்ப்பதற்காக Inquiry Management System ஐ செயற்படுத்துதல்.
- சேவையக அமைப்பை Cloud Server இற்கு மாற்றுதல்.

- Ditwah சூறாவளியினால் மீனவ சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பதிவு செய்வதற்காக Online Disaster Management System ஐ செயற்படுத்துதல்.
- சிறிய அளவிலான மீன்பிடி கலன்களைக் கண்காணிப்பதற்காக, கலன் கண்காணிப்பு அமைப்பை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- IT Consultation ஊடாக திணைக்கள ரீதியான அமைப்புகளைக் கண்காணித்தல் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி செய்தல்.
- அலுவலர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ஒன்லைன் முறைமையை (Online OT System) ஆரம்பித்தல்.
- முக்கிய செயற்பாட்டுச் சுட்டிகளுக்கான KPI (Key Performance Indicator) ஓர் அமைப்பு மற்றும் விடுமுறை முகாமை அமைப்பை (Leave Management System) ஒரு பரீட்சார்த்த முயற்சியாக ஆரம்பித்தல்.
- Online Payment Portal ஐ செயற்படுத்துதல்.

திணைக்களத்தின் சேவைகளை வலையமைப்பு மென்பொருள் ஊடாக நடைமுறைப்படுத்தல்.




படம் : MSDFAR

திணைக்களத்தின் 34 க்கும் மேற்பட்ட செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காகவே திணைக்கள வலையமைப்பு மென்பொருள் அபிவிருத்தி செய்யப்படுகிறது

மீனவர் பதிவு, படகுப் பதிவு, விஞ்ஞான ரீதியான தரவு சேகரிப்பு மற்றும் இன்னும் பல செயற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயலியானது தற்போது Cloud சேவையக அமைப்பொன்றின் ஊடாக இயங்குவதுடன், http://msdfar.com எனும் இணையத்தளத்தின் ஊடாக இதனை அணுக முடியும். இச்செயலியுடன் தொடர்புடைய 700 க்கும் மேற்பட்ட உத்தியோகபூர்வ நிகழ்நிலை பிரவேசங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதுடன், சில பதிப்பு இற்றைப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்கள வலையமைப்பு மென்பொருளைப் பயன்படுத்தி இதுவரை 62,000 மீனவர்கள், 99 கலன் கட்டும் தளங்கள் (பழைய தரவுகள் உட்பட), 31,000 க்கும் மேற்பட்ட படகுகள் மற்றும் 7,300 படகோட்டிகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வருடத்தில் மாத்திரம் 7,000க்கும் மேற்பட்ட நடவடிக்கை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 15,000 ஐத் தாண்டியுள்ளது. 2024 ஆம் ஆண்டில் நிகழ்நிலை புறப்பாட்டு அமைப்பின் ஊடாக 266,800 க்கும் மேற்பட்ட நிகழ்நிலை புறப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்செயற்பாடானது 2021 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.2022 ஆம் ஆண்டின் சிறந்த வலையமைப்பு மென்பொருளாக, அரச நிறுவனங்களுக்கிடையிலான போட்டியில் MSDFAR அமைப்பு தங்கப் பதக்கத்தை வென்றதுடன், 2024 ஆம் ஆண்டின் அரச சேவையின் சிறந்த புத்தாக்க தயாரிப்பு/திட்டத்திற்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் பராமரிப்பு மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம் **[www.fisheriesdept.gov.lk](http://www.fisheriesdept.gov.lk)**.




படம் : உத்தியோகபூர்வ இணையத்தளம்

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பராமரிப்பதற்கும் அதன் உள்ளடக்க முகாமைத்துவத்திற்கும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பொறுப்பு வகிக்கின்றது. திணைக்கள இணையத்தளமானது தினசரி இற்றைப்படுத்தப்படுவதுடன், திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் தனியான பக்கங்கள் காணப்படுவதுடன், அந்தந்தப் பிரிவுகள் பொறுப்புக்கூற வேண்டிய செயல்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகாரிகளின் தொடர்பு விபரங்களை இணையத்தளத்தின் ஊடாகப்

பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அவை அவ்வப்போது இற்றைப்படுத்தப்படுகின்றன. இணையத்தளத்திலுள்ள பிரவேசத்தின் ஊடாக அதிகாரிகள் திணைக்களத்தின் அனைத்துப் முறைமைகளையும் அணுக முடியும். திணைக்கள இணையத்தளமானது, சிறந்த சிங்கள இணையத்தளத்திற்கான தங்கப் பதக்கத்தையும், 2020 ஆம் ஆண்டின் சிறந்த இணையத்தளப் போட்டியில் சிறந்த அரச இணையத்தளத்திற்கான தகுதி விருதையும் வென்றுள்ளது.


தொழில்நுட்பப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காக **Inquiry Management System** நடைமுறைப்படுத்தல்.

தலைமை அலுவலகம், கடற்றொழில் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களிலிருந்து தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு வரும் தொழில்நுட்பப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காக inquiry Management System நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் மூலம் அன்றாடம் பெறப்படும் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன. இம்முறையினூடாக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு முன்வைக்கப்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் சதவீதம் சுமார் 99% ஆகும்.




படம் : Inquiry Management System

முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.




படம் : Inquiry Management System categories

15 கடற்றொழில் மாவட்டங்களிலும் மென்பொருள் முறைமை செயற்படுத்தப்படும் விதம் தனித்தனியாகக் கண்காணிக்கப்படுவதுடன், அதற்காக எமது பிரிவின் உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். 2025 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில், மீனவர் பதிவுக்கான பயிற்சியானது எமது தகவல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்களினால் அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று வழங்கப்பட்டது. அதேபோன்று, மாவட்ட கடற்றொழில் உத்தியோகத்தர்களுக்காக நிகழ்நிலை முறைமைகள் குறித்த பயிற்சியொன்றைத் தலைமை அலுவலகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும்,










2026 உட்கட்டமைப்பு வசதிகள் போதாமையினால் 6 மாவட்டங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே அப்பயிற்சியை வழங்க முடிந்தது. 2026 ஆம் ஆண்டில் ஏனைய மாவட்டங்களின் கடற்றொழில் உத்தியோகத்தர்களுக்கும் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் இப்பயிற்சியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

"Ditwah" சூறாவளியினால் மீனவ சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பதிவு செய்வதற்காக நிகழ்நிலை Disaster Management System நடைமுறைப்படுத்தல்.


'Ditwah' சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட மீன்பிடிக் கலன்கள், கலன் கட்டும் தளங்கள், மீன்பிடி உபகரணங்கள், சமூக மண்டபங்கள் மற்றும் மீனவ சமூகத்தின் தொழில்சார் உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்துவதற்காக, திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் Fisheries Disaster Management System எனும் அமைப்பு நிறுவப்பட்டது. இந்த முறைமையின் ஊடாக அனைத்து கடற்றொழில் மாவட்ட உத்தியோகத்தர்களும் தமது மாவட்டங்களுக்குரிய தரவுகள் மற்றும் தகவல்களைப் பதிவேற்றம் செய்கின்றனர்.




படம் : Disaster management system

உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக Online Overtime Management System ஆரம்பிக்கப்பட்டுள்ளது


கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தலைமை அலுவலகத்திலும், இலங்கை முழுவதிலுமுள்ள 15 கடற்றொழில் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களிலும் கடமையாற்றுகின்றனர். இந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உரிய மாதங்களுக்குள் மேலதிக நேரக் கொடுப்பனவுகளைத் துல்லியமாகவும் விரைவாகவும் வழங்குவதற்காக, நிதிப் பிரிவுடன் இணைந்து தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிகழ்நிலை மேலதிக நேர முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையின் மூலம் உத்தியோகத்தர்களின் மேலதிக நேர மணித்தியாலங்களின் எண்ணிக்கையை துல்லியமாகக் கணக்கிடவும், உரிய கொடுப்பனவுகளைச் சரியாக வழங்கவும் முடிந்துள்ளது.




படம் : Online Over Time management System


KPI (Key Performance Indicator) System

தகவல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு ஏற்ப, அந்தந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான அவர்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு KPI (Key Performance Indicator) system ஒன்று முன்னோடித் திட்டமாக நிறுவப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக அவர்களுக்கு நிகழ்நிலை அணுகல் (Online Login) வழங்கப்பட்டு, அதற்கேற்ப செயற்பட வழிகாட்டப்பட்டுள்ளனர். உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவும் சூழலில், வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடமைகளை நிறைவேற்றுவது குறித்த தெளிவான புரிதலை இந்த முறைமையின் ஊடாக உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.



**விடுமுறை முகாமைத்துவ முறைமை** (Leave Management System)

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக 24 மணிநேரமும் செயற்படும் பல்வேறு முறைமைகளை மாவட்ட அலுவலகங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களைச் சேர்ந்த பயனாளர்கள் அணுகுவதால், மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களைக் கொண்டு இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதேபோன்று, உத்தியோகத்தர்களின் விடுமுறை விண்ணப்பங்கள் காரணமாகக் கடமைகளில் ஏற்படக்கூடிய தடங்கல்களைக் குறைப்பதற்காக, நிகழ்நிலை மூலமான விடுமுறை முகாமைத்துவ முறைமையொன்று தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்குள் முன்னோடித் திட்டமாக நிறுவப்பட்டது. இது தாபன விதிக்கோவைக்கு அமைய, உத்தியோகத்தர்கள் விடுமுறை கோரும் பொது 125 படிவத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட ஓர் ஆன்லைன் முறைமையாகும்.




படம் : Leave Management System

**Online Payment Portal**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கலன் உரிமையாளர்கள் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் இவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், நேரத்தை மீதப்படுத்தி விரைவாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக Online Payment Portal நிறுவப்பட்டது. பல்வேறு அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், பதிவுக்கட்டணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை இம்முறைமையின் ஊடாக இலகுவாகவும் பாதுகாப்பாகவும் நிகழ்நிலை முறையில் மேற்கொள்ள முடியும்.




படம் : Online Payment Portal



மீன் திரளச் செய்யும் கருவி **Fish Aggregation Device (FAD)**

மீன் திரளச் செய்யும் கருவிகள் என்பவை இலக்கு வைக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மீன் இனங்களை கவர்ந்திழுப்பதற்காக மனிதனால் உருவாக்கப்பட்ட மிதக்கும் பொருட்களாகும். இவை மிதவைகளாக மிதக்க விடப்பட்டோ அல்லது சமுத்திரத்தின் அடியில் இணைக்கப்பட்டோ பயன்படுத்தப்படுகின்றன. இந்த முறையானது இலங்கை மீனவ சமூகத்திற்கு இன்னும் புதியதாக இருப்பினும் மேற்கத்திய நாடுகள் மற்றும் இந்துனீசியா போன்ற நாடுகளில் மிகவும் வினைத்திறனான மீன்பிடி முறையாகப் பயன்படுத்தப்பட்டு சுருக்கு.:.பை வலை அல்லது கைத்தூண்டில் முறைகள் மூலம் மீன்கள் பிடிக்கப்படுகினறன.

ஏதிர்காலத்தில் மீன் திரளச் செய்யும் கருவிகளை முகாமைத்துவம் செய்வதற்காக பங்கு (Quota) முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் இலங்கை அதன் ஒரு பங்குதாரராக மாறுவதற்கு இது முக்கியமானதாகும்.தற்போது நிலவும் சுருக்கு வலை தொடர்பான சிக்கல்களுக்கு இந்த முறைமை ஒரு பிரதான தீர்வாக அமையக்கூடும். மீன் திரளச் செய்யும் கருவிகள் சார்ந்த முகாமைத்துவப் பகுதிகளை அறிமுகப்படுத்தி சட்டபூர்வமாக்குவதன் மூலம் சூழல் நேயமிக்க கைத்தூண்டில் பிரபலப்படுத்தவும் முடியும். எனவே மாலைத்தீவை முன்னுதாரணமாகக் கொண்டு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மீன் திரளச் செய்யும் கருவி முறையை இலற்கையில் அறிமுகப்படுத்துவது எதிர்காலத்திற்கான காலத்திற்கெற்ற மற்றும் கொள்கைரீதியான முக்கிய முடிவாகும்.

மீன் திரளச் செய்யும் திட்டத்தின் கீழ் ஒரு முன்னோடித் திட்டமாக தற்போது நீர்கொழும்பு,திருகோணமலை, தெஹிவளை மற்றும் கொக்கலை ஆகிய பகுதிகளில் ஆழமற்ற கடலில் 05 கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்கான செலவு 25 மில்லியன் ரூபாய்களைத் தாண்டியுள்ளது. கோக்கலை பிரதேசத்தில் நிறுவப்பட்ட கருவி அதன் இடத்திலிருந்து விடுபட்டுச் சென்றுள்ள போதிலும் ஏனைய கருவிகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

## முகாமைத்துவப் பிரிவு

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களின் நிலைபேறான முகாமைத்துவம்

கடற்றொழில் முகாமைத்துவம் என்பது கடற்றொழில் மற்றும் கடல் வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு பன்முக அணுகுமுறையாகும். இது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட வலுவான ஒழுங்குமுறைக் கட்டமைப்புக்கள் மற்றும் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல், ஒழுங்குபடத்தல், சட்டத்தை நடைமுறைப்படத்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளில் உள்நாட்டுப் பங்களிப்பை உறுதிப்படுத்தும் வகையில் சமூக அடிப்படையிலான முகாமைத்துவ முன் முயற்சிகள் ஊடாக சமூகப் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகின்றது. இலங்கையின் கடற்றொழில் முகாமைத்துவமானது தற்பொதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக சமூகப் பொருளாதார தேவைகளுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இடையில் சமநிலையைப் பேண முயற்சிக்கின்றது. இத்திணைக்களத்தின் முகாமைத்துவப் பிரிவு மேற்கூறிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளதுடன் அப்பிரிவின் பிரதான பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன

**நோக்கம்**

இந்த பிரிவின் பிரதான நோக்கம், மீன்பிடி உள்ளீடுகள் மற்றும் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மீன்பிடி மற்றும் கடல் வளங்களை நிர்வகிப்பதும், சமூகப் பங்களிப்புடன் கடல், கடனீரேரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மீன்பிடி வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகிப்பதன் ஊடாக இலங்கையின் மீன்பிடித்துறையில் நிலையான வளர்ச்சியை அடைந்து கொள்வதுமாகும்

**பணிகள்**

- கடற்றொழில் ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- மீன்பிடிக் கலன்களின் பதிவு
- மீன்பிடிக் கலன்களை உரிமை மாற்றுதல் (பலநாள் மீன்பிடிக் கலன்கள்)
- மீன்பிடிக் கலன்களை அடமானம் வைத்தல் மற்றும் அடமானத்தை தீர்த்தல்
- மீன்பிடிக் கலன்களின் பதிவை இரத்துச் செய்தல்.
- சர்வதேசக் கடலில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான நடவடிக்கை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- உள்நாட்டுக் கடலில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்
- வெளிநாட்டுக் கலன்களுக்கு மீன் தரையிறக்கலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்
- அலங்கார மீன் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்
- கடலட்டை மற்றும் சிங்கிறால் பிடித்தல், உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதி என்பவற்றுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- சங்கு, சிப்பி ஓடு மற்றும் சுறாத்துடுப்பு, நக்லா, கடல்நத்தை மாமிசம் (Chicories Ramous), கடற்பாசி என்பவற்றின் கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- சிங்கிறால்களை உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்தல், காட்சிப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- செயற்கை ஊடகங்களில் வளர்ப்புச் செய்யப்பட்ட பவளப்பாறைகளின் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- மீன்பிடிக் கலன் ஓட்டுநர்களுக்கான படகோட்டி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்.
- கரைவலைத் துறைமுகங்கள் மற்றும் உரிமையாளர்களை பதிவு செய்தல் மற்றும் கடற்பரப்புகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் பிரச்சினை தீர்த்தலும்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்காக பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் மீள் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் மற்றும் முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் வழங்கல்.
- புதிய கலன்களுக்கான பதிவிலக்கங்களை ஒதுக்கீடு செய்தல், அங்கீகரித்தல், வழங்கல்.
- வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயற்படுத்தப்படும் கடற்றொழில் முகாமைத்துவத்துடன் தொடர்பான அனைத்து திட்ட நடவடிக்கைகளும்.
- சுர்வதேசக் கடலில் இயங்கும் கலன்களின் பட்டியலைத் தயாரித்தல், பராமரித்தல் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிக்கையிடல்.
- வெளிநாடுகளில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு உள்நாட்டு மீனவர்களுக்கு அனுமதியளித்தல்.
- வெளிநாடுகளுக்கான உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கலன்களின் விற்பனை, உரிமை மாற்றங்களுக்கு அங்கீகாரமளித்தல்.
- விசேட கடற்றொழில் முகாமைத்துவ இடப்பரப்புக்களை இனங்கண்டு பிரகடனப்படுத்தல், அது தொடர்பில் ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் முகாமைத்துவத் திட்டங்களை நடைமுறைபபடுத்தல்.

- இலக்கு வைக்கப்பட்ட மீன் இனங்கள் தொடர்பான கையிருப்பு மதிப்பாய்வு ஆய்வுகளின் முடிவுகளுக்கமைய, முகாமைத்துவ முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் ஆகும்.
- சட்டவிரோத மீன்பிடிக் கைத்தொழிலை தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- சுறா மீன்களின் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் தேசிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- பொழுதுபோக்கிற்காக மீன்பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் (Recreational fishing activity).
- ஏற்றுமதி மீன் மற்றும் மீன் தயாரிப்புகளின் சுங்கத் தீர்வை நடவடிக்கைகளுக்காக ASYCUDA கட்டமைப்பு ஊடாக அனுமதி வழங்குதல்

கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வளங்களை நிலையான முறையில் முகாமைத்துவம் செய்வதும் ஒழுங்குபடுத்துவதும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பிரதான பணியாகும். இதற்காக மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவ உரிமங்களை வழங்குதல், சட்டவிரோதமான, ஒழுங்குபடுத்தப்படாத மற்றும் அறிக்கையிடப்படாத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் 2025.08.31 ஆம் திகதி வரை பின்வருமாறு பல்வேறு மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் கலன்களுக்கான உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2025.12.31 ஆம் திகதி வரையிலான ஒவ்வொரு பணிகளினதும் முன்னேற்றம்.

| தொடர் இலக்கம் | செயற்பாடு | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2025.12.31 ஆம் திகதியில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | மீன்பிடிக் கலன்களின் பதிவு (புதிய) | 2,000 | 2895 |
| 2 | ஆழ்கடல் கலன்களுக்கான நடவடிக்கை அனுமதிப்பத்திரங்களை வழங்கல் | 1,020 | 1443 |
| 3 | கலன் ஓட்டுநர்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கல் | 500 | 169 |
| 4 | அலங்கார மீன் இறக்குமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் | 25 | 49 |
| 5 | அலங்கார மீன் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல | 30 | 42 |
| 6 | அலங்கார மீன் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல | 15 | 15 |
| 7 | முள்ளுடைய சிங்கிறால் ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் | 80 | 56 |
| 8 | முள்ளுடைய சிங்கிறால் உடைமையில் வைத்திருப்பதற்கான,கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 10 | 19 |
| 9 | சங்குகளை உடைமையில் வைத்திருப்பதற்கான ,கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 80 | 58 |
| 10 | சங்கு ஏற்றுமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் | 40 | 24 |

| | | | |
|---|---|---|---|
| **11** | கடலட்டை பிடித்தல், சேகரித்தல், உடைமையில் வைத்திருத்தல் மற்றும் கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 200 | 185 |
| **12** | கடலட்டை இறக்குமதி,ஏற்றுமதி, மீள் ஏற்றமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 150 | 134 |
| **13** | சிப்பி ஓடுகள் சேகரித்தல்,கொண்டு செல்லல் மற்றும் அலங்காரப் பொருட்கள் உற்பத்திக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் | 20 | 35 |
| **15** | மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்காக பதிவு செய்தல் | 200 | 168 |
| **16** | மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் | 150 | 208 |
| **17** | மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் மீள் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல் | 13 | 15 |
| **18** | புதிய கலன்களுக்கான பதிவிலக்கங்களை ஒதுக்கீடு செய்தல், அங்கீகரித்தல் மற்றும் வழங்கல் | IMUL-100 | 66 |
| | | OFRP-1000 | 1704 |
| | | MTRB-250 | 191 |
| | | NTRB-500 | 1256 |
| **19** | நக்லா (Operculum of ***Chicoreusramosus***) இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் | 15 | 11 |
| **20** | நக்லா (Operculum of ***Chicoreusramosu***s) உடைமையில் வைத்திருத்தல்,விற்பனை செய்தல்,காட்சிப்படுத்தல் மற்றம் கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 15 | 15 |
| **21** | ***Chicoreusramosus*** மாமிசம் உடைமையில் வைத்திருத்தல்,விற்பனை செய்தல்,காட்சிப்படுத்தல் மற்றம் கொண்டு செல்லலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல | 30 | 22 |
| **22** | ***Chicoreusramosus*** மாமிசம் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் | 15 | 15 |
| **23** | இறந்த கடல் சங்குகளின் (சிப்பிகளின்) ஓடுகளை கொண்ட செல்லல், உடைமையில் வைத்திருத்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் | 20 | 32 |
| **24** | கடற்பாசி கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல். | 8 | 20 |
| **25** | லொக் புத்தகங்களை வழங்கல் | 1,000 | 1400 |

**தேசிய மீன்பிடிக் கலன்கள் கணக்கெடுப்பு**

மீன்பிடிக் கலன்கள் பற்றிய தகவல்களைத் துல்லியமாகப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட தேசிய மீன்பிடிக் கலன்கள் கணக்கெடுப்பு, பல கட்டங்களின் கீழ் இலங்கையிலுள்ள அனைத்து மீன்பிடிக் கலன்களுக்காகவும் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் முதற்கட்டமாக, வெளிப்பக்க இயந்திரம் கொண்ட OFRP மற்றும் MTRB கலன்களின் கணக்கெடுப்பு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது தீவைச் சுற்றியுள்ள 900 க்கும் மேற்பட்ட மீன்பிடித் துறைமுகங்களில் உள்ள அனைத்து வெளிப்பக்க இயந்திரம் கொண்ட OFRP மற்றும் MTRB

கலன்களின் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடைந்து, கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | MTRB | OFRP | மொத்தம் |
|---|---|---|---|
| **மட்டக்களப்பு** | 16 | 2364 | 2380 |
| **சிலாபம்** | 72 | 1 860 | 1 932 |
| **கொழும்பு** | 1 | 601 | 602 |
| **காலி** | 360 | 903 | 1 263 |
| **யாழ்ப்பாணம்** | 1 141 | 6 412 | 7 553 |
| **கல்முனை** | 199 | 1 152 | 1 351 |
| **களுத்துறை** | 2 | 757 | 759 |
| **கிளிநொச்சி** | 186 | 1 248 | 1 434 |
| **மன்னார்** | 756 | 3 074 | 3 830 |
| **மாத்தறை** | 444 | 1 112 | 1 556 |
| **முல்லைத்தீவு** | 1 | 2 152 | 2 153 |
| **நீர்கொழும்பு** | 18 | 2 039 | 2 057 |
| **புத்தளம்** | 329 | 3 679 | 4 008 |
| **தங்காலை** | 253 | 1 147 | 1 400 |
| **திருகோணமலை** | 184 | 4 459 | 4 643 |
| **மொத்தம்** | **3 962** | **32 959** | **36 921** |







**மீன்பிடி உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பயிற்சி**





மீன்பிடிக் கலன்கள் கணக்கெடுப்புக்கு இணைந்ததாக, அனைத்து மீன்பிடி கள உத்தியோகத்தர்களுக்காகவும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி உள்ளீடுகள் தொடர்பான மூன்று பயிற்சித் திட்டங்கள் கலாவெவ பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டன.

## செயற்பாட்டுப் பிரிவு

மீன்பிடிக் கலன்களுக்கும் கரைக்கும் இடையில் வானொலிச் செய்திப் பரிமாற்றத்திற்கான தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்:

மீன்பிடிக் கலன்களுக்கும் கரைக்கும் இடையில் வானொலிச் செய்திப் பரிமாற்றத் தொடர்பாடல் வசதிகளை வழங்கும் பணிகள், பிரதேச வானொலி நிலையங்கள் ஊடாக கொழும்பு பிரதான செயற்பாட்டு அறையினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தொடர்பாடல் வசதிகளை மேம்படுத்தி, கரைக்கும் மீன்பிடிக் கலன்களுக்கும் இடையில் 24 மணிநேரத் தொடர்பைப் பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மீன்பிடிக் கலன்களுக்குத் தேவையான வானிலை அறிக்கைகள் மற்றும் அவசர மோசமான வானிலை நிலைமைகள் குறித்த முன்கூட்டிய எச்சரிக்கைகள் தினசரி வழங்கப்படுவதுடன், கலன் உரிமையாளர்கள் கடலில் உள்ள தமது கலன்களுடன் மேற்கொள்ளும் அத்தியாவசிய செய்திப் பரிமாற்றங்களுக்கான வசதிகளும் வழங்கப்படுகின்றன. மீன்பிடிக் கலன்களிலிருந்து அவசர செய்திகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்திலிருந்து, நிவாரண/மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பம் வரை இலங்கை கடற்படை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பிராந்திய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் ஆகியவற்றுடன் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக கொழும்பு பிரதான அலுவலகத்துடன் இணைந்து 19 பிரதேச வானொலி நிலையங்கள் செயற்படுகின்றன.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மயிலிட்டி, திக்ஓவிட்ட, வெல்லமன்கரை, களமெட்டிய மற்றும் கப்பரதொட்ட ஆகிய மீன்பிடித் துறைமுகங்களில் பிரதேச வானொலி நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் திணைக்களத்திடம் உள்ள பழைய வானொலி இயந்திரங்களைப் பயன்படுத்தி தற்போது தேடுதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மேலுள்ள மீன்பிடித் துறைமுகங்களுக்குப் புதிய வானொலி இயந்திரங்களின் தேவை கடுமையாக ஏற்பட்டுள்ளது

மீன்பிடிக் கலன்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக உரிமங்களை வழங்குவதற்கும் அழைப்பு சமிக்ஞைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல்:

சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்குவதற்காக, ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீன்பிடிக் கலன்களுக்கு சர்வதேச அழைப்பு சமிக்ஞைகளை வழங்குவது, கடற்றொழில் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கு உட்பட்டு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது. கலன் உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் மீன்பிடிக் கலன்களில் வானொலிச் செய்திப் பரிமாற்ற இயந்திரங்களைப் பயன்படுத்துவதை விரைவுபடுத்துவதற்கு தேடுதல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

**விண்ணப்பங்களின் எண்ணிக்கை:**

| | |
|---|---|
| **வழங்கப்பட்ட வானொலிச் செய்திப் பரிமாற்ற இயந்திர உரிமங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை** | 551 |

மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீனவர்களுக்கு ஏற்படும் விபத்துகளின் போது காப்புறுதி நஷ்டஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகவல்களை உறுதிப்படுத்திக் கொடுத்தல்:

மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீனவர்களுக்கு ஏற்படும் விபத்துகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போதும், அவர்கள் காப்புறுதி நஷ்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளும் போதும், கலன்களினால் வழங்கப்படும் அனைத்து செய்திப் பரிமாற்றத் தகவல்களும் காப்புறுதி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இதற்காக அந்தந்த பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகத்திடமிருந்து பெறப்பட்ட பதிவுகளும் பயன்படுத்தப்பட்டு அவை உறுதிப்படுத்தப்படுகின்றன.

அனர்த்தங்களுக்கு உள்ளாகும் மீன்பிடிக் கலன்களையும் மீனவர்களையும் காப்பாற்றுவதற்கும், அவசர சிகிச்சைகளை வழங்குவதற்கும், அவர்களை விரைவாகக் கரைக்குக் கொண்டு வருவதற்குமான மீட்புப் படகுகள் இத்திணைக்களத்திடம் இல்லை. எனவே, இதற்காகக் கடற்படை மற்றும் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி பெற்றுக்கொள்ளப்படுகிறது.

**விபத்துக்களின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| **ஆழ்கடலில் பதிவான தொழில்நுட்பக் கோளாறுகள்/ படகுகள் விபத்துக்குள்ளான சம்பவங்கள்** | 233 |
| **ஆழ்கடலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் காணாமல் போன சம்பவங்கள்.** | 19 |
| **திடீர் விபத்துக்களால் அழிவடைந்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை** | 05 |

வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் விடுவிப்பதும் அவர்களை நாட்டிற்கு அழைத்து வருவதும்.

| நாடு | கைதாகிய மீனவர்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **இந்தியா** | 12 | 05 | 06 | - |
| **மாலைத்தீவு** | 65 | 10 | 65 | 07 |
| **சீஷெல்ஸ்** | 17 | 03 | 17 | - |
| **மியன்மார்** | - | - | - | - |
| **மடகஸ்கார்** | 07 | 01 | 07 | - |

இந்த விடுவிப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தூதரகப் பிரிவின் ஊடாக இந்தியா, மாலைதீவு, பிரான்ஸ் மற்றும் லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயங்களின் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

உள்நாட்டு, சர்வதேச மற்றும் வெளிநாடுகளுக்குச் சொந்தமான கடல் எல்லைகளில் அலைந்து கொண்டிருக்கும் படகுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

மீட்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளின் எண்ணிக்கை

| மீட்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | கைவிடப்பட்ட கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **1248** | 228 | 05 |

இயந்திரக் கோளாறுகள் காரணமாக அண்டை நாடுகளின் கடல் எல்லைகளுக்குள் அலைந்து சென்ற மற்றும் கடலில் விபத்துக்குள்ளான மீன்பிடிக் கலன்களும், திடீர் உடல்நலக் குறைபாடுகளுக்கு உள்ளான மீனவர்களும் இலங்கை கடற்படை/கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் படகுகள், வர்த்தகக் கப்பல்கள் மற்றும் மீன்பிடிக் கலன்கள் மூலமாகவே மீட்கப்பட்டதுடன், மருத்துவ சிகிச்சைக்காக அவர்கள் விரைவாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

**சிறிய / ஒருநாட் கலன்களுக்கான தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்**

கடலோர மீன்பிடியில் ஈடுபடும் சிறிய ரக கலன்கள் மற்றும் மீனவர்களுக்கு, திடீர் வானிலை மாற்றங்கள் குறித்த முன்கூட்டிய எச்சரிக்கைகளை விரைவாக வழங்கி, உயிரிழப்புகளைத் தடுக்கும் நோக்கில் டயலொக் நிறுவனம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் இந்த திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன்படி, 2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 120,000 மீனவர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இந்த டயலொக் தகவல் சேவையில் பதிவு செய்து அதன் பலன்களைப் பெற்று வருகின்றனர்.

**மீனவ சமூகத்தை விழிப்புணர்வூட்டல்**

மீனவ சமூகம், மீனவர்கள் மற்றும் கலன் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாத விடயமாகும். குறிப்பாக, மீனவர்களின் உயிர் பாதுகாப்புக்கான அறிவுறுத்தல்கள், திடீர் விபத்துக்களின் போது செயல்பட வேண்டிய விதம், தரைப்பகுதியுடன் தொடர்பு கொண்டு அவசர உதவி சேவைகளைத் பெற்றுக்கொள்ளும் முறை, திடீர் வானிலை மாற்றங்களால் ஏற்படும் சூறாவளிகளின் போது உயிர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் மற்றும் வானொலி இயந்திரங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமெனக் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இவற்றுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளைச் சரியான முறையில் முன்னெடுக்க முடியாமல் போனது.

கடற்றொழிலில் ஈடுபடுபவர்களின் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதோடு, அதன் மோசமான விளைவாகக் கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் விபத்துக்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது. இதன் காரணமாக உயிரிழப்புகளும் கலன்கள் அழிவடைவதும் உயர்வடைந்துள்ளன. அதேபோல், திட்டமிடப்பட்ட சட்டவிரோத புலம்பெயர்வுகளுக்காகப் படகுகளைப் பயன்படுத்துவதும் அதிகரித்துள்ளது. ஆழ்கடலில் பெருமளவிலான படகுகள் இயந்திரக் கோளாறுகளுக்கு உள்ளாவது அதிகரித்துள்ளதுடன், குறிப்பாகப் பிற நாடுகளின் கடல் எல்லைகளுக்கு அருகில் இத்தகைய அபாயங்கள் ஏற்படுவது அதிகரித்துள்ளது. இதனால் ஏனைய நாடுகளுடன் தொடர்ச்சியான இராஜதந்திர ரீதியான தலையீடுகள் மூலம், அந்தந்த நாடுகளின் மீட்பு மையங்களுக்கு அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, படகு உரிமையாளர்கள் தமது படகுகளைக் கடலுக்கு அனுப்பும் முன்னர், அவை கடற்பயணத்திற்குப் பொருத்தமான நிலையில் உள்ளனவா என்பதை மீண்டும் ஒருமுறை சரிபார்ப்பதை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**ஒவ்வொரு துறைமுகத்திலிருந்தும் புறப்பட்ட மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்பட்ட புறப்பாடுகளின் எண்ணிக்கை**

| | துறைமுகம் | புறப்பாடுகளின் எண்ணிக்கை | | | துறைமுகம் | புறப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | கல்பிட்டி | 489 | | 14 | தங்காலை | 1816 |
| 2 | நீர்கொழும்பு | 5809 | | 15 | அம்பாந்தோட்டை | 1240 |
| 3 | திக்ஓவிட்ட | 1215 | | 16 | கிரிந்த | 572 |
| 4 | பேருவளை | 6188 | | 17 | வாழைச்சேனை | 18179 |
| 5 | அம்பலாங்கொடை | 1260 | | 18 | திருகோணமலை | 2981 |
| 6 | ஹிக்கடுவை | 995 | | 19 | பருத்தித்துறை | 287 |
| 7 | காலி | 7343 | | 20 | மயிலடி | 244 |
| 8 | மிரிஸ்ஸ | 3372 | | 21 | வெல்லமங்கரய | 1096 |
| 9 | தெவிநுவர | 4692 | | 22 | கப்பரத்தொட்ட | 646 |
| 10 | கோட்டேகொட | 1335 | | 23 | கந்தர | 2996 |
| 11 | நில்வெல்ல | 2767 | | 24 | கலமெட்டிய | 543 |
| 12 | குடாவெல்ல | 6015 | | 25 | சிலாபம் | 341 |
| 13 | சாய்ந்தமருது | 1557 | | | | |

**பதிவுகள் மற்றும் கலன்களின் புகைப்படங்களை தரவுக் களஞ்சியத்தினுள் சேர்த்தலும் முகாமைத்துவமும்**

**லொக் பதிவுகள் மற்றும் கலன்களின் புகைப்படங்களை தரவுக் களஞ்சியத்தினுள் சேர்த்தலும் முகாமைத்துவமும்**

| | | |
|---|---|---|
| **1.** | மீன்பிடிச் செயற்பாடுகள் தொடர்பாகப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற பயணப் பதிவு (Log) பிரதிகளின் எண்ணிக்கை | **5436** |
| **2.** | செயற்பாடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட சரிபார்ப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை. | 5436 |
| **3.** | பயணப் பதிவுத் தரவுத் தொகுதியில் உள்ளீடு செய்யப்பட்ட பயணப் பதிவுப் பிரதிகளின் எண்ணிக்கை. | 32656 |
| **4** | IOTC தேவைகளுக்காகப் பேணப்படும் படகுப் புகைப்படத் தரவுத் தொகுதியில் உள்ளீடு செய்யப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | 143 |

2015 ஆம் ஆண்டின் துறைமுக அரச நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, இலங்கையில் துறைமுக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கோ, மீன்களை இறக்குவதற்கோ அல்லது மீன் கப்பலேற்றுவதற்கோ வருகை தரும் வெளிநாட்டு மீன்பிடிக் கலன்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் கலன் பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியப் பெருங்கடல் டூணா ஆணைக்குழுவின் 16/11 தீர்மானத்திற்கு இணங்க, இலங்கையின் துறைமுகங்களுக்குள் நுழையும் வெளிநாட்டு மீன்பிடிக் கலன்களில் குறைந்தது 5% இற்குரிய பரிசோதனை அறிக்கைகளை இந்தியப் பெருங்கடல் டூணா ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

**சேவைகள்**

| சேவைகள் | **வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை** | **பரிசோதனைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| **மீன்களை மீன் கப்பலேற்றுதல்** | 11 | 07 |
| **மீன் தரையிறக்கல்** | 02 | 01 |
| **பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் விநியோகச் சேவைகள்** | 14 | 01 |
| **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டு மீனவர்களின் பரிமாற்ற நடவடிக்கை சேவைகள்** | 08 | 01 |
| **மொத்தம்** | **35** | **10** |

இந்தியப் பெருங்கடல் டூணா ஆணைக்குழுவின் 11/04 தீர்மானத்திற்கு இணங்க, ஆழ்கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீன்பிடிக் கலன்களில் குறைந்தது 5% இற்கு அறிவியல் ரீதியான மீன்பிடிக் கலன் அவதானிப்பாளர்களை ஈடுபடுத்தி, அது குறித்த தகவல்களை இந்தியப் பெருங்கடல் டூணா ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

24 மீட்டருக்கும் அதிகமான நீளம் கொண்ட கலன்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட அவதானிப்பாளர்களின் எண்ணிக்கையும், அந்தக் கலன்கள் மேற்கொண்ட செயல்பாடுகளின் எண்ணிக்கையும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**மீன்பிடிக் கலன்கள்**

| மொத்த மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை > 24m | இயக்கத்திலுள்ள கலன்களின் எண்ணிக்கை | மொத்த மீன்பிடி நடவடிக்கைகளின் எண்ணிக்கை | அறிவியல் ரீதியான மீன்பிடிக் கலன் அவதானிப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **04** | 04 | 07 | 01 |

இந்தியப் பெருங்கடல் டுணா ஆணைக்குழு (IOTC), உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கு அவ்வப்போது அறிக்கைகளை வழங்குதல் மற்றும் வருடாந்தக் கூட்டங்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

- இந்தியப் பெருங்கடல் டுணா ஆணைக்குழுவிற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலக்கெடுவுக்குள் வழங்கப்படுகின்றன.
- இந்தியப் பெருங்கடல் டுணா ஆணைக்குழுவின் 10/11 தீர்மானத்தின்படி, அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடுகள் குழுக்கூட்டங்கள் மற்றும் அமர்வுகளில் பங்கேற்பதற்காக வழங்கப்படுகின்ற நிதியுதவியின் கீழ், சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அதிகாரிகள் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.
- அதன்படி, இலங்கை 2010 ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு இணக்கப்பாட்டு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

**இணக்கப்பாட்டு முன்னேற்றம்**

| 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5% | 18% | 47% | 51% | 60% | 74% | 77% | 82% | 87% | 90% | 86% | 76% | 83% | 73.8% | 71.2% |



வெளிநாட்டு மீன்பிடிக் கலன்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**பலநாள் மீன்பிடிக் கலன்களுக்காக 4200 கலன் கண்காணிப்பு சாதனங்களை (VMS) பொருத்துதல்**

தற்போது இறுதி நிலைக்குரிய 82 VMS சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

மேலும், VMS சாதனங்கள் ஊடாக படகு உரிமையாளர்களுக்கு இலாபகரமான மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்க முடியும். இதில் கலனில் பொருத்தப்பட்டுள்ள அண்டெனா மிகக் குறைந்த மின்சக்தி தேவையுடன் (2W) இயங்குவதோடு, பிரதான மின் விநியோகம் இல்லாதபோது 3 நாட்கள் வரை அதன் மேலதிக மின் சேமிப்பைப் பயன்படுத்தும் வசதியைக் கொண்டுள்ளது. இது FMC ஊழியர்கள் இலகுவாகவும் தடையின்றியும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிவகுப்பதோடு, படகானது ஏனைய நாடுகளின் பிரத்தியேக பொருளாதார வலய (EEZ) எல்லைகள் போன்ற கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு அருகில் செல்லும்போது தானியங்கி எச்சரிக்கைகளை உருவாக்குகின்றது.

VMS அமைப்பானது அனைத்து துறைமுக அலுவலகங்கள் ஊடாகவும் அணுகக்கூடியதாக இருப்பதோடு, DFAR இன் தலைமை அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மீன்பிடி கண்காணிப்பு நிலையத்தினால் (FMC) மத்தியமயப்படுத்தப்பட்ட முறையில் நிர்வகிக்கப்படுகிறது. தற்போது மீன்பிடி கண்காணிப்பு நிலையமானது (FMC) 24x7 மணிநேரமும் கலன்களைக் கண்காணித்து வருகின்றது. வெளிநாடுகளுக்குள் நுழைதல் மற்றும் VMS சாதனங்களைச்

சேதப்படுத்துதல் போன்ற சந்தேகத்திற்கிடமான நடத்தைகளைக் கண்டறிவது FMC இன் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். சமிக்ஞைகள் கிடைக்காத அல்லது குறைந்த சமிக்ஞைகளைக் கொண்ட கலன்களை (இவை நிசப்தமான கலன்கள் என அழைக்கப்படுகின்றன) FMC தினசரி அடையாளம் கண்டு, அவை மீண்டும் முறைமைக்குள் உள்வாங்கப்படும் வரை அப்படகுகள் கடலுக்குப் புறப்படுவதை ரத்து செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

நீண்ட காலமாக VMS செயலிழந்துள்ள கலன்கள் உட்பட அனைத்து சந்தேகத்திற்கிடமான கலன்கள் குறித்த தகவல்களும் மேலதிக விசாரணைகளுக்காக புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் எல்லை தாண்டுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடிய அபாயமுள்ள கலன்களைக் கண்டறியும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன

அவுஸ்திரேலியா-இலங்கை VMS திட்டத்தின் கீழ், FMC அனைத்து நவீன தொழில்நுட்பங்களுடனும் நவீனமயமாக்கப்பட்டுள்ளதோடு, இதன் மூலம் FMC ஆசியாவிலேயே அதிநவீன கண்காணிப்பு நிலையங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

## தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு

சர்வதேச தரங்களுக்கு இணங்கவும், நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இலங்கை தனது மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கான கடுமையான தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. மீன் மற்றும் மீன் உற்பத்தி ஏற்றுமதி விதிமுறைகளின் கீழ் உள்ள ஏற்பாடுகளால் நிர்வகிக்கப்படும் இந்தச் செயல்முறையானது சான்றளித்தல், பரிசோதனை செய்தல், சுகாதாரம் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. பின்தொடர்தல் அமைப்புகள் (Traceability) மற்றும் ஆய்வகப் பரிசோதனைகள் தர உத்தரவாதத்தை மேலும் அதிகரிப்பதோடு, திறன் மேம்பாடு மூலம் தொழில்துறை ஊழியர்களின் திறன்களும் மேம்படுத்தப்படுகின்றன.சந்தை அணுகல் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமும், தயாரிப்புகளின் ஒருமைப்பாட்டைப் பேணுவதன் மூலமும், உலகளாவிய சந்தையில் உயர்தர கடல் உணவுகளுக்கான நம்பகமான ஆதாரமாக இலங்கை தனது நற்பெயரைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கூறிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளதுடன், இது இலங்கை மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாகவும் செயல்படுகிறது.

இப்பிரிவானது பிரதானமாக மீன்பிடி உற்பத்திகள் ஏற்றுமதி தொடர்பாக, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் பின்வரும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது:

- 1998 ஆம் ஆண்டின் மீன் உற்பத்திகள் (ஏற்றுமதி) விதிமுறைகள்
- 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மீன் பதப்படுத்துதல் ஒழுங்குவிதிகள்
- 2014 ஆம் ஆண்டின் மீன்பிடி தரவு சேகரிப்பு ஒழுங்குவிதிகள்
- 2002 ஆம் ஆண்டின் நீர்வாழ் உயிரின வளர்ப்பு (எச்சக்கண்காணிப்பு) ஒழுங்குவிதிகள்

2014 ஆம் ஆண்டு முதல் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரக் கட்டுப்பாட்டு உப அலுவலகம் நிறுவப்பட்டதுடன், இந்த அலுவலகம் வாரத்தின் ஏழு நாட்களும் பகல் இரவு முழுவதுமாக (24X7) உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்குச் சேவை வழங்கும் அலுவலகமாகச் செயற்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக, தற்போது உள்நாட்டு நுகர்வோருக்குச் சுகாதாரப் பாதுகாப்புமிக்க மீன் மற்றும் மீன் தயாரிப்புகளை வழங்குவது குறித்து எமது அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆரம்பகட்டப் பணிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிகளை முறையாக முன்னெடுப்பதற்காக, வெற்றிடமாக இருந்த அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டன. இதன்படி, இப்பிரிவில் தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்ளும் தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு எட்டுப் புதிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதன் மூலம் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அப்பிரிவின் பிரதான இலக்குகள், குறிக்கோள்கள், பணிகள் மற்றும் முன்னேற்றம்:

இலக்குகள்
ஐரோப்பிய சந்தை மற்றும் ஏனைய வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் தயாரிப்புகள் தொடர்பாக, ஐரோப்பிய ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்ட இப்பிரிவு 04.01.1999 முதல் செயற்பட்டு வருகின்றது. தற்போது, இலங்கை மீன் மற்றும் மீன் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்யும் அனைத்து நாடுகளினதும் சட்டப்பூர்வத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

**குறிக்கோள்கள்**
1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் மீன் தயாரிப்பு (ஏற்றுமதி) விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கையினால் மனித நுகர்வுக்காக சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை மேம்படுத்துவதே இப்பிரிவின் பிரதான நோக்கமாகும்.

**பணிகள்**
மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தரக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மீன் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- மீன் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு ஏற்றுமதிக்காக மீன்களைத் பதப்படுத்துவதற்கு அனுமதி வழங்குதல்.
- HACCP முறைகளை ஆய்வு செய்தல் மற்றும் அந்த முறைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
- மீன் பதப்படுத்தும் நிறுவனங்களைத் தொடர்ச்சியாகப் பரிசோதனைக்கு உட்படுத்துதல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மீன் தரையிறக்கும் இடங்களைப் பரிசோதித்தல் மற்றும் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் மீன்பிடிக் கலன்களைப் பரிசோதித்தல் மற்றும் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- மீன் தரையிறக்கும் இடங்களிலிருந்து பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு மீன்களைக் கொண்டு செல்வதைப் பரிசோதித்தல் மற்றும் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஏற்றுமதிக்காக ஒவ்வொரு மீன் தொகுதிக்கும்/மீன்பிடி தயாரிப்புத் தொகுதிக்கும் சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் தயாரிப்புகளின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பரிசோதனை அறிக்கைகளை (Test Reports) வழங்குகின்ற ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- சம்பந்தப்பட்ட இடங்களிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளை, அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்களில் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக உத்தியோகப்பூர்வ மாதிரிப் பரிசோதனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- மீன் பதப்படுத்தும் இடங்கள், படகுகள் மற்றும் மீன் தரையிறக்கும் இடங்கள் ஆகியன விதிமுறைகளில் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில், அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் தயாரிப்புகளின் பாதுகாப்பற்ற சுகாதார நிலைகள் குறித்து இறக்குமதி செய்யும் நாடுகளிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல்.
- மீன் மற்றும் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பு குறித்தும், ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் மீன்பிடிப் படகுகளின் பணியாளர்களுக்கு மீன் கையாளுதல் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- நீர்வாழ் உயிரின வளர்ப்பு தயாரிப்புகளுக்காக (மீன், இறால்) பயன்படுத்தப்படும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் இரசாயனப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காக, நீர்வாழ் உயிரின வளர்ப்பு எச்சக் கண்காணிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அத்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- மீன் தயாரிப்புகளின் சட்டபூர்வத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீன்பிடிச் சான்றிதழ்களை வழங்குதல்.
- வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணிநேரமும் இயங்கும் கட்டுநாயக்க விமான நிலைய தரக் கட்டுப்பாட்டு உப அலுவலகத்தின் ஊடாக, ஐரோப்பிய நாடுகளுக்காக இணையவழி முறையில் சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குதல்.
- விதிமுறைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகளினால் வழங்கப்படும் அறிவித்தல்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்தல்.

**கடற்றொழில் மற்றும் நிரியல் வளங்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்கள்**

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குத் தகுதியான, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கையை (31.08.2025 அன்றைய நிலவரப்படி) 50 இலிருந்து 55 ஆக அதிகரிக்க முடிந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத நாடுகளுக்கு மாத்திரம் ஏற்றுமதி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை 23 ஆகும். அத்துடன், மீன் பொதியிடும் நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 21 ஆகும். இவற்றுள், சீனக் குடியரசிற்கு 38 நிறுவனங்களும், சவூதி அரேபியாவிற்கு 17 நிறுவனங்களும், ரஷ்யாவிற்கு 18 நிறுவனங்களும் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

**நடவடிக்கைகளைப் பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் உத்தியோகப்பூர்வ மாதிரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

இதன் கீழ், மீன் தயாரிப்புப் பதப்படுத்தும் நிறுவனங்கள், இறால் வளர்ப்புப் பண்ணைகள், ஆய்வகங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், ஏற்றுமதிக்காக மூலப்பொருட்களை வழங்கும் மீன்பிடிக் கலன்களைப் பரிசோதித்தல் மற்றும் மீன் தயாரிப்புகளின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உத்தியோகரப்பூர்வ மாதிரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியன உள்ளடங்கும்.

நுண்ணுயிரியல் பரிசோதனை : நீர்,ஐஸ் மற்றும் மீன் தயாரிப்புகளுக்காகவும,
இரசாயணப் பரிசோதனை : மீன்களிலுள்ள ஹிஸ்டமீன் அளவு / பார உலோகங்கள் / எச்சக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

**தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு எச்சக் கண்காணிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

இதன் கீழ், 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு எச்சக் கண்காணிப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான கண்காணிப்பு, பரிசோதனை மாதிரிகளைப் பெறுதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல் என்பன இடம்பெறுகின்றன. இறால் இனப்பெருக்க நிலையங்களில் நீர் மாதிரிகளைப் பெற்று இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது

மாதிரிகள் பரிசோதிக்கப்படும் காரணிகள்:

- நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள்
- மாசுபடுத்திகள் (பார உலோகங்கள், கார்பமேட், பைரித்ராய்டுகள்)
- பூச்சிக்கொல்லி எச்சங்கள்
- நிறமூட்டிகள் (மலகைட் கிரீன், லியுகோமலகைட், பிரில்லியன்ட் கிரீன், கிரிஸ்டல் வயலட்)

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்**

இதன் கீழ், மீன் மற்றும் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பைப் பேணுவது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துவது பிரதானமாக இடம்பெறுகின்றது.

**2025.08.31 ஆம் திகதிய நிலவரப்படி தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிகளின் முன்னேற்றம்**

| தரக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள் | | வருடாந்த இலக்கு | முன்னேற்றம் (08.31 ஆம் திகதி வரை) | சதவீதம் % |
|---|---|---|---|---|
| **உள்நாட்டுச் சந்தையிலுள்ள மீன் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல்.** | | | | |
| **01.** துறைமுக ஆய்வுகளை (பரிசோதனைகளை) மேற்கொள்ளுதல் | | 10 | 2 | 50% |
| **02.** மீன் ஏல விற்பனை நிலையங்கள் மற்றும் பொது மீன் விற்பனை நிலையங்களைப் பரிசோதித்தல். | | 4 | 1 | 25% |
| **03.**விழிப்புணர்வுத் திட்டங்கள் (மீனவர்கள்/வியாபாரிகள்) | | 10 | 7 | 70% |
| **ஏற்றுமதிக்குரிய மீன் உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதிப்படுத்துதல்.** | | | | |
| **01.உத்தியோகபூர்வ மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல் - நிறுவனங்கள்** | | 300 | 177 | 59% |
| **02. விழிப்புணர்வுத் திட்டங்கள் (தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் / தொடர்புடைய கள உத்தியோகத்தர்கள்)** | | 10 | 8 | 80% |
| **03.** விழிப்புணர்வுத் திட்டங்கள் **(நீர்வாழ் உயிரின வளர்ப்பாளர்கள் / பதப்படுத்துதல் நிறுவன உத்தியோகத்தர்கள் / கடற்றொழிலாளர்கள் (மீனவர்கள்)** | | 10 | 8 | 80% |
| **04. மீன்பிடித் துறைமுகங்களின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்துப் பரிசோதித்தல்.** | | 20 | 9 | 45% |
| **05. மீன்பிடிக் கலன்களின் சுகாதாரப் பாதுகாப்பு, சுகாதார நிலைமைகள் மற்றும் சிறந்த கையாளுதல் முறைகள் குறித்துப் பரிசோதித்தல்.** | | 85 | 55 | 65% |
| **06. ஏற்றுமதிக்காக மீன் பதப்படுத்தும் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனங்களைப் பரிசோதித்தல்..** | மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நிறுவனப் பரிசோதனைகளின் எண்ணிக்கை. | 120 | 68 | 57% |
| | மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பொதியிடல் / சிங்கிறால் சேகரிப்பு நிலையப் | 15 | 5 | 33 % |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை. | | | |
| **07. ஆய்வுகூடப் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தல்..** | | 5 | 2 | 40% |
| **08. இனப்பெருக்க நிலையங்கள், நன்னீர் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் சவர்நீர், கடல்சார் உயிரின வளர்ப்பு நிலங்கள் குறித்துப் பரிசோதித்தல்..** | | 40 | 16 | 40 % |
| **09. நீர்வாழ் உயிரின வளர்ப்பு இரசாயன எச்சங்கள் குறித்து முன்னெடுக்கப்படும் ஆய்வுகூடப் பரிசோதனைகள்.** | | ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐக்கிய இராச்சியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கமைய வருடாந்தம் தீர்மானிக்கப்படும். (66) | 66 | - |
| **10. கரையிறக்கும் போது / பதப்படுத்தும் போது முன்னெடுக்கப்படும் புலன்சார் பகுப்பாய்வுப் பரிசோதனைகள்.** | | 70 | 16 | 21.5% |
| **11. பிராந்திய கடற்றொழில் முகாமைத்துவ அமைப்புகளினால் நிறுவப்பட்ட புள்ளிவிவரத் தரவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.** | | சந்தர்ப்பத்திற்கேற்ப. | 4 | - |
| **12. ஏற்றுமதி மீன் உற்பத்திப் பொருட்களுக்காக, அதிகாரபூர்வ மாதிரித் திட்டத்திற்கமைய முன்னெடுக்கப்பட்ட பரிசோதனை முடிவுகள் தரநிலைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்களில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.** | | முடிவுகளின் அளவீடுகள் நியம மதிப்புகளை விஞ்சுமாயின், சந்தர்ப்பத்திற்கேற்ப. | 03 | - |
| **13. இறக்குமதி செய்யும் நாடுகளினால் (Importing countries) மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் குறைபாடுகள் குறித்து வழங்கப்படும் அறிவித்தல்கள்** | | உரிய நாடுகளினால் தரம் குறைபாடுகள் அறிவிக்கப்படும் தடவைகளுக்கேற்ப, சந்தர்ப்பத்திற்கேற்ப. | 12 | - |
| **14. ஏற்றுமதிக்கான மீன் உற்பத்திகளை பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்** | புதிய மீன் உற்பத்திகளை பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் | 63 | 65 | - |
| | மீன் உற்பத்திகளை பதப்படுத்தும் நிறுவனங்களின் பதிவுகளைப் புதுப்பித்தல். | | 02 | - |
| **15. மீன் பிடிப்புச் சான்றிதழ்கள் வழங்குதல்** | | 17,000 | 19,200 | 113% |

| | | | |
|---|---|---|---|
| **16. ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்கல். (ஐரோப்பிய நாடுகளுக்காக)** | 18,000 | 13,938 | 77.4% |
| **17. ஏற்றுமதிக்கான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்கல். (ஐரோப்பிய அல்லாத நாடுகளுக்காக)** | 10,000 | 11,762 | 117.6% |
| **18. மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் மீன் தொகைகள் குறித்துப் பரிசோதனைகளை முன்னெடுத்தல். (BIA)** | மீள் ஏற்றுமதிக்காக மீன்களை இறக்குமதி செய்வதற்கு கோரிக்கை விடுத்தல் மற்றும் அனுமதிகளை வழங்கல் ஆகியவற்றினடிப்படையில் சந்தர்ப்பத்திற்கேற்ப | 1 | - |
| **19. ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஏனைய நாடுகளின் உரிய தகுதிவாய்ந்த அதிகாரசபைகளுடன் (Competent Authorities) அவசியமான ஒருங்கிணைப்புகளைப் பேணுவதற்காக, இறக்குமதி செய்யும் நாடுகளினால் விடுக்கப்படும் அறிவித்தல்கள் அல்லது வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்களினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள்.** | மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளுக்கு அமைய, சந்தர்ப்பத்திற்கேற்ப | 35 | - |

**டின் மீன் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்துதல்**

தற்போது இலங்கையில் பிரபலமடைந்து வரும் டின் மீன் கைத்தொழிலானது, ஒரு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியாகக் கருதப்படலாம். இது தொடர்ச்சியாக கேள்வி அதிகரித்து வரும் புரதச்சத்து நிறைந்த டூணா, சார்டின் மற்றும் மெக்கரல் போன்ற மீன் வகைகளைப் பயன்படுத்தி, நீண்ட காலம் கெடாமல் வைத்திருக்கக்கூடியதும் இலகுவாகத் தயார் செய்யக்கூடியதுமான ஒரு உற்பத்தியாகும். இலங்கையின் இந்த டின் மீன் சந்தையானது முழுமையாக இறக்குமதிச் சந்தையிலேயே தங்கியிருந்ததுடன், தற்போது இதனை ஒரு உள்நாட்டுக் கைத்தொழிலாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.தற்போது டின் மீன் உற்பத்தியில் பங்களிப்பு வழங்கும் சுமார் 22 உள்நாட்டு வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த உற்பத்திகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலையீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் டின் மீன் இறக்குமதிக்காகச் செலவிடப்படும் வெளிநாட்டுச் செலாவணியை நாட்டுக்குள்ளேயே தக்கவைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கைத்தொழிலை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, சம்பந்தப்பட்ட டின் மீன் பதப்படுத்தும் நிறுவனங்களை 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மீன் பதப்படுத்தும் நிறுவன ஒழுங்குவிதிகளின் கீழ் எமது திணைக்களத்தில் பதிவு செய்யும் பணிகளை, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்

திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு தற்போது ஆரம்பித்து மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தற்போது 2003 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மீன் பதப்படுத்தும் நிறுவன ஒழுங்குவிதிகளின் கீழ் 12 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.



படம் 01 மற்றும் 02: டின் மீன் உற்பத்தியில் பங்களிப்பு வழங்கும் உள்நாட்டு டின் மீன் உற்பத்தி நிறுவனங்களை சோதனையிடல்

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு, நச்சுத்தன்மை கொண்ட மீன் இனங்கள் குறித்து NARA நிறுவனத்துடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்**

இலங்கை மீன் மற்றும் மீன் தயாரிப்பு ஏற்றுமதியில் முக்கியமான ஐரோப்பிய ஆணையத்தின் தேவைகளுக்கு ஏற்ப, மீன் மற்றும் மீன் தயாரிப்புகளைப் பதப்படுத்தும்போது நச்சுத்தன்மை கொண்ட மீன் இனங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதன் மூலம் மீன் தயாரிப்புகளின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை ஒழுங்குமுறைப்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்களின் அறிவுத்திறன் மேம்படுத்தப்பட்டது.



படம் 03 மற்றும் 04: தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்காக நச்சுத்தன்மையுள்ள மீன் இனங்கள் குறித்த விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

**ஒரு நாள் சிறிய கலன்கள் மூலம் கொண்டுவரப்படும் மீன் அறுவடையை ஏற்றுமதி சந்தைக்கு அனுப்பும் வகையில், உயர்தரமான மற்றும் சுகாதாரப் பாதுகாப்புமிக்க மீன் அறுவடையைக் கரைக்குக் கொண்டு வருவதை ஊக்குவித்தல்**

இலங்கையின் கடலோர மீன்பிடித் தொழிலானது நாட்டின் பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பில் ஒரு முக்கிய அங்கமாக விளங்குவதுடன், மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியினருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது மற்றும் தேசிய மீன் உற்பத்திக்கும் பங்களிப்பு செய்கிறது.

இந்தச் சிறிய கலன்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கடலோர மீன்பிடித் தொழிலானது நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றது. அவ்வாறு பிடிக்கப்படும் மீன்களில் கணிசமான அளவு ஏற்றுமதி செய்யக்கூடிய மீன் இனங்களாகும்.

கடலோர மீன்பிடித் தொழில் மூலம் பல்வேறு வகையான ஏற்றுமதி கேள்வியைக் கொண்ட அறுவடை கிடைக்கப் பெற்ற போதிலும், அந்த மீன்களைப் பிடிக்கும்போதும் கரைக்குக் கொண்டு வரும்போதும் ஏற்படும் முறையற்ற கையாளுதல் காரணமாக, அந்த மீன் தயாரிப்புகளின் தரம் குறைந்து அவை ஏற்றுமதிக்குத் தகுதியற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதன் காரணமாக, பிடிக்கப்படும் மீன்களுக்கு ஏற்றுமதி சந்தையில் பெரும் கேள்வி இருந்தபோதிலும், அந்த கேள்விக்கு ஏற்றவாறு விநியோகத்தை வழங்குவதில் ஏற்றுமதியாளர்கள் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

அதற்கமைய, அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்து, உயர்தரமான மீன் தயாரிப்புகளை ஏற்றுமதி சந்தைக்கு வழங்குவதற்குச் சரியான கையாளுதல் முறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும். இதற்காக, மீனவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்கும், ஒரு நாள் சிறிய படகுகள் மூலம் பெறப்படும் மீன் அறுவடையைப் பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு வருவதை ஊக்குவிப்பதற்கும் சிலாபம், களுத்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய கடற்றொழில் மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் மீன் ஏற்றுமதியாளர்களும் மீனவர்களும் கலந்துகொண்டதுடன், தரமான மீன் அறுவடையின் அவசியம் குறித்த தகவல்களும் பரிமாறப்பட்டன.




படம் 04 மற்றும் 05 : 2025.06.25 அன்று சிலாபம் கடற்றொழில் மாவட்டத்திற்காக கூட்டம் நடத்தப்படும் முறையைக் காட்டும் புகைப்படம்.




படம் 06 மற்றும் 07: 2025.07.03 அன்று களுத்துறை கடற்றொழில் மாவட்டத்திற்காக கூட்டம் நடத்தப்படும் முறையைக் காட்டும் புகைப்படம்.




படம் 07 மற்றும 08: 2025.07.09 அன்று நீர்கொழும்பு கடற்றொழில் மாவட்டத்திற்காக கூட்டம் நடத்தப்படும் முறையைக் காட்டும் புகைப்படம்.

**மீன்பிடித் தயாரிப்புகளின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள்-ஏற்றுமதி முகாமைத்துவ ஒழுங்குமுறை (மீள்-ஏற்றுமதிக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை - SOP)**

தற்போது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் கொள்ளளவு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு இலங்கை மீன் ஏற்றுமதியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கமைய, இலங்கையின் மீன் மற்றும் மீன் தயாரிப்பு ஏற்றுமதித் துறையைத் நிலையான முறையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு, ஏற்றுமதிக்கு உகந்த உயர்தர மூலப்பொருட்களின் தட்டுப்பாடு நிலவுவது கண்டறியப்பட்டதுடன், இதன் காரணமாக சில பதப்படுத்தும் நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளமையும் இனங்காணப்பட்டது.எனவே, நீண்டகால ஏற்றுமதியாளர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்க, மீன் ஏற்றுமதியைத் நிலையான முறையில் பேணுவதற்கு அத்தியாவசியமான டூணா, தலப்பத்து மற்றும் இறால் ஆகியவற்றை இறக்குமதி செய்து, உள்நாட்டில் பதப்படுத்தி மீண்டும் மீள்-ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் தீர்மானித்தனர். அதற்கமைய, உரிய தரப்பினரின் உடன்பாட்டுடன் இதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, இலங்கைக்குத் டுணா, தலப்பத் மற்றும் இறால்களை இறக்குமதி செய்வதற்காக முறையான நடைமுறைகளைக் கொண்ட நிபந்தனைகளுடனான இரண்டு நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOP) நிறுவப்பட்டு, அனுமதிப்பத்திரம் பெற்ற மீன் பதப்படுத்தும் நிறுவனங்கள் ஊடாக பெறுமதி கூட்டல் மற்றும் அதன் பின்னர் மீள்-ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அனைத்துக் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் எமது பிரிவு மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையை ஒரு முன்னணி கடல் உணவு பதப்படுத்தும் மையமாக நிலைநிறுத்துவதன் மூலம், கடல் உணவு ஏற்றுமதி வீழ்ச்சியடைவதற்குத் தீர்வு காண்பதுடன், குறிப்பாக ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்வதற்கு வசதிகளை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இலங்கையின் மூலோபாய ரீதியான அமைவிடம், மேம்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள், வலுவான பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் திறமையான உழைப்பாளர் சக்தியைப் பயன்படுத்தி, உலகளாவிய கடல் உணவு வர்த்தகத்தில் நாட்டின் போட்டித்திறனை மேம்படுத்துவதே இந்த முன்முயற்சியின் நோக்கமாகும்.

## 2.1. சிறப்பு அடைவுகள்

01. கலன் உள்ளீடுகள் குறித்த துல்லியமான தரவுகள் இல்லாமை மற்றும் தரவுகள் புதுப்பிக்கப்படாமை காரணமாக, மீன்பிடித் தொழிலை முகாமைத்துவம் செய்வதில் ஏற்படும் சிக்கல்களைக் குறைப்பதற்காக, அனைத்து மாவட்டங்களையும் மீன்பிடித் துறைமுகங்களையும் உள்ளடக்கும் வகையில் 2025 ஆகஸ்ட் மாதத்தில் மீன்பிடிக் கலன்கள் கணக்கெடுப்பை நடாத்தியதன் மூலம், தற்போது இயக்கத்திலுள்ள கலன்கள், இயக்கத்தில் இல்லாத கலன்கள் மற்றும் பழுதடைந்ததால் பதிவு ரத்து செய்யப்பட வேண்டிய படகுகள் குறித்த தகவல்களைச் சேகரித்தமை.





02. சிறியளவிலான மீன்பிடித்தொழிலலின் முகாமைத்துவத்திற்கான தேசியத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக, நவம்பர் மாதம் 20 முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பில் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் வங்காள விரிகுடா நாடுகளின் சர்வதேச அமைப்பு (BOBP-IGO) ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச மாநாடொன்றை நடாத்தியமை.

இதற்கு இணையாக, தெற்காசியாவிலேயே சிறியளவிலான மீன்பிடித்தொழில் முகாமைத்துவத்திற்கான தேசியத் திட்டத்தைத் தயாரிக்கத் தொடங்கிய முதலாவது நாடு என்ற ரீதியில், இலங்கை அந்தத் திட்டத்தைத் தயாரித்தமை.






3. Aqua Planet-2025 கண்காட்சியை வெற்றிகரமாக நடாத்தியமை.









4. வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் கலன்களின் மீட்பு மற்றும் நாட்டிற்கு கொண்டு வருதல்

| கைதாகிய மீனவர்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | மீட்கப்பட்ட கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **93** | 83 | 18 | 10 |

5. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடல் எல்லைகளில் மிதந்து செல்லும் கலன்களைக் காப்பாற்றுதல்

| மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மீனவர்களின் எண்ணிக்கை | மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்த மீனவர்களின் எண்ணிக்கை | கப்பல்களில் மோதி இழிவடைந்த கலன்கள் | கைவிடப்பட்ட பலநாள் கலன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1248** | 228 | 05 | 05 |

6. பலநாள் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கலன்களின் தகவல்களை சரிபார்த்தல்

| | | |
|---|---|---|
| **1.** | **பலநாள் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் அலகிற்கு கிடைத்த லொக் பிரதிகளின் எண்ணிக்கை** | **5436** |
| **2.** | பலநாள் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் வழங்கப்பட்ட சரிபார்ப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | 5436 |

7. பலநாள் கலன்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குரிய மீன்பிடி லொக் பத்திரங்களை சேகரித்தல்

| | | |
|---|---|---|
| **1.** | **துறைமுக செயல்பாட்டு அலுவலகங்களுக்கு கிடைத்த மீன்பிடி லொக் பத்திரங்களின் எண்ணிகை** | **37,015** |
| **2.** | லொக் தரவு அமைப்பில் சேர்க்கப்பட்ட எண்ணிக்கை | 32,656 |

8. தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சேவை வழங்கலின் முன்னேற்றம்

| | | |
|---|---|---|
| **1.** | **நிகழ்நிலை முறையில் கலன்களுக்கு பயணத் தடவைகள் வழங்குதல்** | **74519** |
| **2.** | IOTC தேவைகளுக்காக பேணப்படும் தரவமைப்பில் உள்ளிடப்பட்ட கலன்களின் புகைப்பட அறிக்கைகளின் எண்ணிக்கை | 143 |
| **3.** | AIS உபகரணங்கள் சட்டபூர்வமாக பதிவு செய்தல் | 223 |

**டிஜிட்டல்மயமாக்கலின் அடைவுகள்**

1. திணைக்களத்தின் சேவைகளை வலையமைப்பு மென்பொருள் ஊடாக நடைமுறைப்படுத்தல்..




படம் : MSDFAR

திணைக்களத்தின் 34 க்கும் மேற்பட்ட செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காகவே திணைக்கள வலையமைப்பு மென்பொருள் அபிவிருத்தி செய்யப்படுகிறது

மீனவர் பதிவு, படகுப் பதிவு, விஞ்ஞான ரீதியான தரவு சேகரிப்பு மற்றும் இன்னும் பல செயற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயலியானது தற்போது Cloud சேவையக அமைப்பொன்றின் ஊடாக இயங்குவதுடன், http://msdfar.com எனும் இணையத்தளத்தின் ஊடாக இதனை அணுக முடியும். இச்செயலியுடன் தொடர்புடைய 700 க்கும் மேற்பட்ட உத்தியோகபூர்வ நிகழ்நிலை பிரவேசங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதுடன், சில பதிப்பு இற்றைப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திணைக்கள வலையமைப்பு மென்பொருளைப் பயன்படுத்தி இதுவரை 62,000 மீனவர்கள், 99 கலன் கட்டும் தளங்கள் (பழைய தரவுகள் உட்பட), 31,000 க்கும் மேற்பட்ட படகுகள் மற்றும் 7,300 படகோட்டிகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வருடத்தில் மாத்திரம் 7,000க்கும் மேற்பட்ட நடவடிக்கை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 15,000 ஐத் தாண்டியுள்ளது. 2024 ஆம் ஆண்டில் நிகழ்நிலை புறப்பாட்டு அமைப்பின் ஊடாக 266,800 க்கும் மேற்பட்ட நிகழ்நிலை புறப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்செயற்பாடானது 2021 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.2022 ஆம் ஆண்டின் சிறந்த வலையமைப்பு மென்பொருளாக, அரச நிறுவனங்களுக்கிடையிலான போட்டியில் MSDFAR

அமைப்பு தங்கப் பதக்கத்தை வென்றதுடன், 2024 ஆம் ஆண்டின் அரச சேவையின் சிறந்த புத்தாக்க தயாரிப்பு/திட்டத்திற்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

**02.** திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் பராமரிப்பு மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம் **www.fisheriesdept.gov.lk**




படம் : உத்தியோகபூர்வ இணையத்தளம்


திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பராமரிப்பதற்கும் அதன் உள்ளடக்க முகாமைத்துவத்திற்கும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பொறுப்பு வகிக்கின்றது. திணைக்கள இணையத்தளமானது தினசரி இற்றைப்படுத்தப்படுவதுடன், திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் தனியான பக்கங்கள் காணப்படுவதுடன், அந்தந்தப் பிரிவுகள் பொறுப்புக்கூற வேண்டிய செயல்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகாரிகளின் தொடர்பு விபரங்களை இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அவை அவ்வப்போது இற்றைப்படுத்தப்படுகின்றன. இணையத்தளத்திலுள்ள பிரவேசத்தின் ஊடாக அதிகாரிகள் திணைக்களத்தின் அனைத்துப் முறைமைகளையும் அணுக முடியும். திணைக்கள இணையத்தளமானது, சிறந்த சிங்கள இணையத்தளத்திற்கான தங்கப் பதக்கத்தையும், 2020 ஆம் ஆண்டின் சிறந்த இணையத்தளப் போட்டியில் சிறந்த அரச இணையத்தளத்திற்கான தகுதி விருதையும் வென்றுள்ளது.

03. தொழில்நுட்பப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காக **Inquiry Management System** நடைமுறைப்படுத்தல்.

தலைமை அலுவலகம், கடற்றொழில் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களிலிருந்து தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு வரும் தொழில்நுட்பப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்காக inquiry Management System நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் மூலம் அன்றாடம் பெறப்படும் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன. இம்முறையினூடாக தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு முன்வைக்கப்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் சதவீதம் சுமார் 99% ஆகும். முன்வைக்கப்படும் பிரச்சினைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது




படம் : Inquiry Management System




படம் : Inquiry Management System categories

4. திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான வலையமைப்பு மென்பொருள் பயன்பாடு குறித்த பயிற்சி

15 கடற்றொழில் மாவட்டங்களிலும் மென்பொருள் முறைமை செயற்படுத்தப்படும் விதம் தனித்தனியாகக் கண்காணிக்கப்படுவதுடன், அதற்காக எமது பிரிவின் உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். 2025 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில், மீனவர் பதிவுக்கான பயிற்சியானது எமது தகவல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்களினால் அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று வழங்கப்பட்டது. அதேபோன்று, மாவட்ட கடற்றொழில் உத்தியோகத்தர்களுக்காக நிகழ்நிலை முறைமைகள் குறித்த பயிற்சியொன்றைத் தலைமை அலுவலகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், உட்கட்டமைப்பு வசதிகள் போதாமையினால் 6 மாவட்டங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே அப்பயிற்சியை வழங்க முடிந்தது. 2026 ஆம் ஆண்டில் ஏனைய மாவட்டங்களின் கடற்றொழில் உத்தியோகத்தர்களுக்கும் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் இப்பயிற்சியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.










**5.** "Ditwah" சூறாவளியினால் மீனவ சமூகத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளைப் பதிவு செய்வதற்காக நிகழ்நிலை Disaster Management System நடைமுறைப்படுத்தல்.

'Ditwah' சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட மீன்பிடிக் கலன்கள், கலன் கட்டும் தளங்கள், மீன்பிடி உபகரணங்கள், சமூக மண்டபங்கள் மற்றும் மீனவ சமூகத்தின் தொழில்சார் உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்துவதற்காக, திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் Fisheries Disaster Management System எனும் அமைப்பு நிறுவப்பட்டது. இந்த முறைமையின் ஊடாக அனைத்து கடற்றொழில் மாவட்ட உத்தியோகத்தர்களும் தமது மாவட்டங்களுக்குரிய தரவுகள் மற்றும் தகவல்களைப் பதிவேற்றம் செய்கின்றனர்.





.

படம் : Disaster management system

**6.** உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக Online Overtime Management System ஆரம்பிக்கப்பட்டுள்ளது


கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தலைமை அலுவலகத்திலும், இலங்கை முழுவதிலுமுள்ள 15 கடற்றொழில் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களிலும் கடமையாற்றுகின்றனர். இந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உரிய மாதங்களுக்குள் மேலதிக நேரக் கொடுப்பனவுகளைத் துல்லியமாகவும் விரைவாகவும் வழங்குவதற்காக, நிதிப் பிரிவுடன் இணைந்து தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிகழ்நிலை மேலதிக நேர முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையின் மூலம் உத்தியோகத்தர்களின் மேலதிக நேர மணித்தியாலங்களின் எண்ணிக்கையை துல்லியமாகக் கணக்கிடவும், உரிய கொடுப்பனவுகளைச் சரியாக வழங்கவும் முடிந்துள்ளது.




படம் : Online Over Time management System


7 . KPI (Key Performance Indicator) System

தகவல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு ஏற்ப, அந்தந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான அவர்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு KPI (Key Performance Indicator) system ஒன்று முன்னோடித் திட்டமாக நிறுவப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்காக அவர்களுக்கு நிகழ்நிலை அணுகல் (Online Login) வழங்கப்பட்டு, அதற்கேற்ப செயற்பட வழிகாட்டப்பட்டுள்ளனர். உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவும் சூழலில், வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடமைகளை நிறைவேற்றுவது குறித்த தெளிவான புரிதலை இந்த முறைமையின் ஊடாக உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.




## 8. **விடுமுறை முகாமைத்துவ முறைமை** (Leave Management System)

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக 24 மணிநேரமும் செயற்படும் பல்வேறு முறைமைகளை மாவட்ட அலுவலகங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களைச் சேர்ந்த பயனாளர்கள் அணுகுவதால், மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களைக் கொண்டு இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அதேபோன்று, உத்தியோகத்தர்களின் விடுமுறை விண்ணப்பங்கள் காரணமாகக் கடமைகளில் ஏற்படக்கூடிய தடங்கல்களைக் குறைப்பதற்காக, இணையவழி மூலமான விடுமுறை முகாமைத்துவ முறைமையொன்று தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்குள் பரீட்சார்த்த ரீதியாக நிறுவப்பட்டது. இது தாபன விதிக்கோவைக்கு அமைய, உத்தியோகத்தர்கள் விடுமுறை கோரும் பொது 125 படிவத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட ஓர் இணையவழி முறைமையாகும்.




படம் : Leave Management System

## 9 Online Payment Portal

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கலன் உரிமையாளர்கள் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் இவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால், நேரத்தை மீதப்படுத்தி விரைவாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக Online Payment Portal நிறுவப்பட்டது. பல்வேறு அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், பதிவுக்கட்டணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை இம்முறைமையின் ஊடாக இலகுவாகவும் பாதுகாப்பாகவும் நிகழ்நிலை முறையில் மேற்கொள்ள முடியும்.




படம் : Online Payment Portal

## 2.2. சவால்கள்

➢ **தகவல் தொழில்நுட்பப் பிரிவு**

1. கலன் கண்காணிப்புப் பிரிவின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குப் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாமை.
2. தீவு முழுவதற்கும் 24*7 இணையவழி முறையில் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் MSDFAR முறைமையை இற்றைப்படுத்துவதற்கும், தகவல் தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் போதிய உத்தியோகத்தர்கள் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் இல்லாமை.
3. சைபர் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு நிறுவனத்திடம் போதியளவு இல்லாமை.

➢ **அபிவிருத்திப் பிரிவு**

1. துறைமுகங்கள் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது காணி அடையாளப்படுத்தல், உரிமையை உறுதிப்படுத்துதல் மற்றும் தனியார் காணிகளைக் சுவீகரிக்கும் போது ஏற்படும் சிக்கல்கள்.
2. தொடர்ச்சியான இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாகக் கடற்கரையோரச் சூழற்றொகுதிக்கு ஏற்படும் பாதிப்புகள்.
3. மீனவர்களைக் காப்புறுதி செய்வதை நாம் ஊக்குவித்த போதிலும், சில மீனவர்கள் ஆயுள் காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தயக்கம் காட்டுதல்.

➢ **முகாமைத்துவப் பிரிவு**

1. அதிக வர்த்தக மதிப்புக் கொண்ட கடல்வாழ் உயிரினங்களை ஏற்றுமதி செய்வதற்கு அதிக கேள்வி நிலவிய போதிலும், அந்த கேள்விக்கு ஏற்றவாறு விநியோகத்தை வழங்க முடியாமை. இந்த வளங்கள் அருகி வருவதும், வளங்களை அறுவடை செய்வதை முகாமைத்துவம் செய்வதற்கு தற்போது இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் உள்ள இந்த உயிரினங்களின் கையிருப்பு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையும் ஒரு பிரச்சினையாக உள்ளது.
2. மீன்பிடி உள்ளீடுகளை முகாமைத்துவம் செய்யும் போது, பலநாள் கலன்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட போதிலும், குறைந்த வருமானம் பெறும் மீனவர்கள் பயன்படுத்தும் சிறிய கலன்களை ஒழுங்குபடுத்துவது அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பதால், கடலோர மீன்பிடித் தொழிலில் சிறிய கலன்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும், அந்தப் கலன்களைக் கட்டுப்படுத்துவதில் சிக்கல் நிலவுகிறது.
3. கடற்கரையோரக் கடல் பகுதிகளில் மீன் மற்றும் நீர்வாழ் வளங்கள் வேகமாக குறைந்து வருவதன் காரணமாக, முகாமைத்துவச் செயல்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானம் வீழ்ச்சியடைவதும் ஒரு பிரச்சினையாக உள்ளது.
4. மீன்பிடி வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான விதிமுறைகளைத் தயாரிப்பதற்கு அறிவியல் ஆராய்ச்சி அறிக்கைகளும் பரிந்துரைகளும் கட்டாயமானவை. இருப்பினும்,

தேசிய நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு இதற்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லாமையினாலும், தேவையான அளவு ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையினாலும், உரிய காலத்தில் தேவையான விதிமுறைகளைத் தயாரிப்பதிலும் அல்லது திருத்தம் செய்வதிலும் தடைகள் ஏற்பட்டுள்ளன.

➢ **<u>நடவடிக்கைப் பிரிவு</u>**

1. லொக் தரவுத் தாள்களில் உள்ள தகவல்களை விரைவாக லொக் தரவுத் தொகுதிக்குள் உள்ளீடு செய்வதற்குப் போதிய உத்தியோகத்தர்கள் இல்லாமை. [இது மாவட்ட அலுவலகங்கள், துறைமுக அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைப் பிரிவுடன் இணைந்த அலகுகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது] எனினும், தரவு உள்ளீட்டுப் பணிகளுக்காக கடற்றொழில் உத்தியோகத்தர்களை இணைப்பது பொருத்தமானதாகும

2. E-log மென்பொருளின் ஊடாக மீன்பிடித் தரவுகளை மீனவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

3. Landing Declarationǹ தொடர்பான படிவத்தைச் சரியான முறையில் அறிக்கையிடுவதற்கு மீனவர்களை வழிப்படுத்துதல்.

➢ **<u>தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு</u>**

1. ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற தகுந்த தரத்திலான உள்நாட்டு மூலப்பொருட்கள் போதியளவு இல்லாமை
2. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் இருப்புகளை, ஐரோப்பிய ஒன்றியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தர நிர்ணயங்களுக்கு அமையப் பரிசோதிப்பதற்குத் தேவையான வசதிகள் ஆய்வகங்களில் இல்லாமை.

➢ **<u>ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு</u>**

1. விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்படும் வழக்குத் தாக்கல் நடவடிக்கைகளில், பல சந்தர்ப்பங்களில் மின்னணு சாட்சியங்களில் (Contemporaneous evidence) மாத்திரமே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படுதல்.
2. எவ்வளவு விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்த போதிலும், சட்டவிரோதச் செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாமை.

## 2.3. எதிர்கால இலக்குகள்

➢ **அபிவிருத்திப் பிரிவு**

1. இயற்கை அனர்த்தங்கள் அல்லது கடற்கரையோர மீன்பிடித் தொழிலுக்கு ஏற்படும் தடைகளினால் இத்தொழிற்துறைக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்).
2. சுகாதாரமான மற்றும் உயர்தரத்திலான கருவாடு உற்பத்திக்காக, உலர்த்தும் உபகரணங்களை அறிமுகப்படுத்தும் முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
3. சீனக் குடியரசின் உதவியின்கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 500 முன் தயாரிக்கப்பட்ட பொருத்து வீடுகளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் மீனவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தின்கீழ், தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் காணிகளில் அவ்வீடுகளை அமைத்துக் கொடுத்தல்.
4. கடனிரேரி முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திக்காகக் கடனீரேரி எல்லைகளைக் அடையாளப்படுத்துதல், கலப்பு முகாமைத்துவப் பகுதிகளை வர்த்தமானி மூலம் அறிவித்தல், குழுக்களை அமைத்தல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல்.
5. படகுத்துறை சார்ந்த உள்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். உதாரணம்: பீகன் விளக்குகளை நிறுவுதல்.

➢ **முகாமைத்துவப் பிரிவு**

1. கலன் பதிவேட்டை இற்றைப்படுத்துதல்.
2. 2025 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக OFRP மற்றும் MTRB கலன்களுக்கு மாத்திரம் மீன்பிடிக் கலன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டதால், அதன் தொடர்ச்சியாகப் பலநாள் கலன்கள் (IMUL), ஒருநாள் கலன்கள் (IDAY) மற்றும் இயந்திரமயமாக்கப்படாத கலன்களுக்கான கணக்கெடுப்பை நடைமுறைப்படுத்துதல்.
3. மீன் மற்றும் நீர்வாழ் வளங்களின் முகாமைத்துவம் மற்றும் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை டிஜிட்டல் மயமாக்குதல்.
4. கரைவலை மீன்பிடிக்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், சுறா மீன் தயாரிப்புகளின் ஏற்றுமதியை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டி வரைபடத்தைத் தயாரித்தல் மற்றும் கலன் முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரித்தல்.
5. பங்களிப்பு முகாமைத்துவ அலகை நிறுவுதல் மற்றும் தீர்மானிக்கப்பட்ட முகாமைத்துவப் பகுதிகளுக்கான முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.
6. மீன்பிடிக் கலன் உள்ளீடுகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான விதிமுறைகளைத் தயாரித்தல்.

➢ **நடவடிக்கைப் பிரிவு**

1. அனைத்து மாவட்ட அலுவலகங்களினூடாகவும் லொக் புத்தக இலக்கங்களை MSDFAR முறைமையில் உள்ளீடு செய்வதற்கான முறையான வேலைத்திட்டத்தைத்

தகவல் தொழில்நுட்பப் பிரிவுடன் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்துதல். (2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்குள் தயாரித்தல்).

2. E-log book வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். (2026 ஆம் ஆண்டில் 10% கலன்களுக்கு உரிய வசதிகளைச் செய்துகொடுத்தல்).
3. Landing Declaration வேலைத்திட்டத்தைத் தயாரித்தல். (2026 ஆம் ஆண்டிற்குள் ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் அனைத்துப் பலநாள் கலன்களுக்கும் இதனை அறிமுகப்படுத்துதல்).

- **<u>ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு</u>**

1. வருடாந்தம் சர்வதேச கடற்றொழில் வர்த்தகக் கண்காட்சியொன்றை நடாத்துதல்.

# அத்தியாயம் 03 – 2025 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான முழு நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயற்றிறன் கூற்று

### 2025 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான முழு நிதிச் செயலாற்றுகை கூற்று

| திருத்தப்பட்ட வரவு செலவு ஏற்பாடுகள் 2025 ரூ. | | குறிப்பு | உண்மைநிலை 2025 ரூ. | உண்மைநிலை 2024 ரூ. | |
|---|---|---|---|---|---|
| | **வருமானப் பெறுகைகள்** | | | - | |
| - | வருமான வரி | 1 | | - | ஏஸிஏ - 1 |
| 152,230,000 | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | 178,114,630 | 173,842,450.00 | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | | - | |
| - | வரியற்ற வருமானங்களும் ஏனையவையும் | 4 | | - | |
| **152,230,000** | **மொத்த வருமானப் பெறுகைகள்(அ)** | | 178,114,630 | 173,842,450 | |
| | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 2,982,118,000 | 660,489,423.00 | ஏஸிஏ -3 |
| - | வைப்புகள் | | 325,672,024 | 264,313,408.00 | ஏஸிஏ -4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 32,710,502 | 29,753,255.00 | ஏஸிஏ -5 |
| - | வேறு பிரதான லெட்ஜர் கணக்கு பெறுகைகள் | | 5,751,016 | - | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)** | | **3,346,251,542** | **954,556,086** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானமற்ற பெறுகைகளும் இ = (அ))+(ஆ)** | | **3,524,366,172** | **1,128,398,536** | |
| - | **திறைசேரிக்கான அனுப்பீடு(ஈ)** | | 213,631,027 | - | |
| **-** | **தேறிய வருமானப் பெறுகை மற்றும் வருமாமல்லாத பெறுகை உ=(இ)-(ஈ)** | | **3,310,735,145** | **1,128,398,536** | |
| | கழி **:** செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 952,000,000 | சம்பளம்,ஊதியம் மற்றும் ஏனைய ஊழியர் பலன்கள் | **5** | 717,203,243 | 624,233,273.00 | **ஏஸிஏ - 2(ii)** |
| 186,595,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | **6** | 152,740,944 | 161,744,364.00 | |
| 3,049,495,296 | மானியங்கள்,கொடைகள் மற்றும் மாற்றல்கள் | **7** | 1,961,618,308 | 104,059,986.00 | |
| | வட்டிக் கொடுப்பனவுகள் | **8** | - | - | |
| 1,401,040 | வேறு மீண்டுவரும் செலவினங்கள் | **9** | 1,301,040 | 43,269.00 | |
| **4,189,491,336** | **மொத்த மீண்டுவரும் செலவினங்கள் (ஊ)** | | **2,832,863,535** | **890,080,892** | |
| | **மூலதனச் செலவினங்கள்** | | | | |
| 29,000,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தல்களும் | **10** | 25,199,813 | 18,496,442.00 | **ஏஸிஏ - 2(ii)** |
| 105,702,032 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 46,618,205 | 7,601,733.00 | |
| 6,000,000 | மூலதன மாற்றல்கள் | **12** | 4,435,888 | 3,176,392.00 | |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | - | - | |
| 3,215,000 | திறன்விருத்தி | **14** | 3,191,628 | 1,854,472.00 | |
| 109,000,000 | வேறு மூலதனச் செலவினங்கள் | **15** | 37,641,790 | 11,263,960.00 | |
| **252,917,032** | **மொத்த மூலதனச் செலவினங்கள்(எ)** | | **117,087,323** | **42,392,999** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 401,278,535 | 173,107,132.00 | **ஏஸிஏ -4** |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 30,866,421 | 33,325,953.00 | **ஏஸிஏ -5** |
| | வேறு பிரதான லெட்ஜர் கணக்கு கொடுப்பனவுகள் | | - | - | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம்(ஏ)** | | **432,144,956** | **206,433,085** | |
| 4,442,408,368 | **மொத்தச் செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 3,382,095,813 | 1,138,906,976 | |
| | **திசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (71,360,668) | (10,508,440) | |

| | | | |
|---|---|---|---|
| **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | (71,360,668) | - | **ஏஸிஏ -7** |
| **திசம்பர் 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | - | - | **ஏஸிஏ -3** |
| | (71,360,668) | - | |

**3.2 நிதி நிலைமைக் கூற்று**

**ஏஸிஏ -பீ**

**2025 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று**

| | | உண்மை நிலை | |
|---|---|---|---|
| | குறிப்பு | **2025**<br>ரூ. | **2024**<br>ரூ. |
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | **ஏஸிஏ** -6 | 2,268,325,532 | 2,217,108,554 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | **ஏஸிஏ -** 5/5(ஏ) | 65,729,573 | 67,573,654 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | **ஏஸிஏ** -3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,334,055,105** | **2,284,682,208** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப்பங்கு** | | | |
| திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் | | (181,133,641) | (255,487,108) |
| ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 2,268,325,532 | 2,217,108,554 |
| வாடகை மற்றும் பணிமுற்பண ஒதுக்கம் | **ஏஸிஏ -5(பி)** | - | 591,037 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | **ஏஸிஏ** -4 | 246,863,214 | 322,469,725 |
| பணிமுற்பண மீதி | **ஏஸிஏ** -3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,334,055,105** | **2,284,682,208** |

පිටු අංක 07 සිට 37 දක්වා ඒසීඒ 1 සිට ඒසීඒ 7 දක්වා වූ ආකෘති පත්‍රවලින් ඉදිරිපත් කෙරෙන ගිණුම් තොරතුරු සහ ඇමුණුම් පිටු අංක 38 සිට 55 දක්වා ඇතුළත් ගිණුම් සටහන් විස්තර ද මෙම අවසන් ගිණුමෙහිම අන්තර්ගත කොටස් වේ. මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීම රජයේ මුදල් රෙගුලාසි **150** හා **151** සහ **2025.12.17** දිනැති රාජ්‍ය ගිණුම් මාර්ගෝපදේශ අංක **02/2025** විධිවිධානයන්ට අනුකූලව සිදුකර ඇත. ඉහත අවසන් ගිණුමෙහි සඳහන් සංඛ්‍යා, ඊට අදාළ ගිණුම් සටහන් හා අනෙකුත් ගිණුම් තොරතුරු භාණ්ඩාගාර ගිණුම් පොත් සමඟ සැසඳීම් කර ඇති බවටත් ඒවා එම සංඛ්‍යා සමඟ එකඟ වන බවටත් මෙයින් සහතික කරමු.

2018 අංක 19 දරන විගණන පනතේ 38 (1) (ඇ) වගන්තිය අනුව මූල්‍ය පාලනය සඳහා ඵලදායී අභ්‍යන්තර පාලන පද්ධතියක් වාර්තාකරණ ආයතනය තුළ පවතින බවත් මූල්‍ය පාලනය සඳහා අභ්‍යන්තර පාලන පද්ධතියේ සඵලතාවය අධීක්ෂණය කිරීමටත් ඒ අනුව එම පද්ධති ඵලදායී ලෙස ක්‍රියාත්මක කිරීමට අවශ්‍ය පරිදි වෙනස් කිරීම් සිදුකිරීමට වරින් වර සමාලෝචන සිදුකරන බවත් මෙයින් සහතික කරමු.

| | | |
|---|---|---|
| ............................ | ............................ | ............................ |
| ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරී | ගණන්දීමේ නිලධාරී | ~~ප්‍රධාන මූල්‍ය නිලධාරී~~/ප්‍රධාන ගණකාධිකාරී/ අධ්‍යක්ෂ (මුදල්)/ කොමසාරිස් (මුදල්) |
| නම : | නම : | නම : |
| තනතුර : | තනතුර : | |
| දිනය : 2026/02/27 | දිනය : 2026/2/26 | දිනය : 2026/2/26 |
| ලේකම් (වැ.බ)<br>ධීවර, ජලජ හා සාගර සම්පත් අමාත්‍යාංශය<br>02 වන මහල,නව මහලේකම් කාර්යාලය,<br>මාලිගාවත්ත, කොළඹ 10 | සුසන්ත කහවත්ත<br>අධ්‍යක්ෂ ජනරාල්<br>ධීවර හා ජලජ සම්පත් දෙපාර්තමේන්තුව | ආර්.ඩී.ආර්.එස්. රාජපක්ෂ<br>ප්‍රධාන ගණකාධිකාරී<br>ධීවර හා ජලජ සම්පත් දෙපාර්තමේන්තුව |

02

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏஸிஏ-ஸி

**2025 திசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை நிலை | |
|---|---|---|
| | **2025**<br>ரூ. | **2024**<br>ரூ. |
| **இயக்க செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள்,மிகைவிதிப்புகள்,அபராதங்கள் மற்றும் உரிமங்கள் | 178,114,630 | 173,126,050 |
| இலாபங்கள் | - | - |
| வருமானமல்லாத பெறுகைகள் | 5,751,016 | - |
| வேறு வருமானத் தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 58,741,935 | 40,876,634 |
| கட்டுநிதி பெறுகைகள் | 2,982,118,000 | 841,595,400 |
| முற்பணங்களை அறவிடல் | 30,182,487 | 24,925,557 |
| வைப்புக்களின் பெறுகைகள் | 320,140,998 | 264,313,408 |
| **இயக்க செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்(அ)** | **3,575,049,066** | **1,344,837,048** |
| **கழி. செலவளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் இயக்கச் செலவுகள் | 849,841,754 | 772,892,584 |
| மானியங்களும் பரிமாற்றங்களும் | 1,961,366,436 | 102,484,183 |
| மூலதனச் சொத்துக்களைப் புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல், மூலதன இடமாற்றங்கள், திறன் அபிவிருத்தி மற்றும் ஏனைய மூலதனச் செலவினங்கள் | 53,959,956 | |
| வேறு செலவினத் தலைப்புகளுக்காக ஏற்கப்பட்ட செலவுகள் | 29,604,807 | 53,582,430 |
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 213,631,027 | 181,105,977 |

| | | |
|---|---|---|
| முற்பணக் கொடுப்பனவுகள் | 30,754,268 | 25,246,697 |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 401,278,535 | 173,107,132 |
| **இயக்க செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல்(ஆ)** | **3,540,436,783** | **1,308,419,003** |
| **இயக்க செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **34,612,283** | **36,418,046** |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| ஈவுத்தொகை | - | - |
| தள்ளுபடி ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை | - | - |
| உபகடன் அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்(ஈ)** | **-** | **-** |
| <u>**கழி : செலவளிக்கப்பட்ட காசு**</u> | | |
| மூலதனச் சொத்துக்களின் நிர்மாணம், கொள்வனவு மற்றும் வேறு முதலீடுகள் கையகப்படுத்தல்கள் | 34,612,283 | 36,418,046 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவளிக்கப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல்(உ)** | **34,612,283** | **36,418,046** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்(ஊ)=(ஈ)-(உ)** | **(34,612,283)** | **(36,418,046)** |
| **இயக்க மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=( இ) + (ஊ)** | **-** | **-** |
| <u>**நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்**</u> | | |
| உள்நாட்டுக் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ)** | **-** | **-** |
| <u>**கழி: செலவளிக்கப்பட்ட காசு**</u> | | |

| | | |
|---|---|---|
| உள்நாட்டுக் கடன்கள் மீதான மீள்கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீள்கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு செலவளிக்கப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஐ)** | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய மாற்றங்கள் (ஓ) = (எ) +(ஓ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

## 3.4 நிதிக்கூற்று குறிப்புக்கள்

**அறிக்கையிடலின் அடிப்படை**

**1) தயாரித்தலின் நோக்கம்**

நிதிக்கூற்றுக்கள், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் பிரிவுகள் 150,151 மற்றும் 2025.12.17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02.:.2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**2) அறிக்கையிடல் காலப்பகுதி**

2025 ஜனவரி 01 முதல் திசம்பர் 31 வரையான காலப்பகுதி இந்நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.

**3) அளவீட்டு அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது,வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்படடுள்ளதுடன் சில சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத விடத்து கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு முன் வைக்கப்பட்டுள்ளன.

**4) வருமானங்களை அடையாளங் காணல்**

நாணயமாற்று மற்றும் நாணய மாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலப்பகுதியை கருதாது,காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதியில் வருமானமாக அடையாளங் காணப்படும்.

**5) சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை அடையாளங் காணலும் அளவிடலும்**

சொத்துக்களுக்குரிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதியாகும் போது மற்றும் இச்சொத்துக்களை நம்பத் தகுந்த அடிப்படையில் அளவிட முடியுமாயின் அச்சொத்துக்கள் சொத்துக்கள்,பொருட்கள் மற்றும் உபகரணங்களாக அடையாளங் காணப்படும். சொத்துக்கள்,பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கிரயத்துக்கு அடையாளங் காண்பதுடன் கிரய மாதிரி பொருத்தமற்றதாக உள்ள வேளையில் மீள்மதிப்பீட்டு பெறுமதி பயன்படுத்தப்படுகிறது

**6) சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஒதுக்கம்.**

இந்த ஒதுக்கக் கணக்கானது சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நேரொத்த கணக்காகும்.

**7) காசு மற்றும் காசுக்கு சமமானவை**

2025 திசம்பர் 31 ஆம் திகதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள், உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

ஒரு குறிப்பிட்ட அறிக்கை செய்யும் நிறுவனத்திற்குரிய பிரத்தியேகமான கொடுக்கல்வாங்கல்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில், அந்த வடிவங்களில் தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ள முடியும். அத்துடன் ‘‘அறிக்கையிடல் அடிப்படை” என்பதன் கீழ் அந்தப் பிரத்தியேக கொடுக்கல்வாங்கல்களுக்குத் தேவையான வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்கலாம்.

தமது அறிக்கை செய்யும் நிறுவனத்திற்குப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை மாத்திரமே அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் வெளிப்படுத்த வேண்டும்

**3.5 வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை**

| அரசிறைக் குறியீடு | அரசிறைக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | திருத்தப்பட்ட மதிப்பீடு | அளவு | இறுதி வருமானம் மதிப்பீட்டின் %ஆக |
| 10.03.07.06 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்குரிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 163,612,500 | 152,230,000 | 178,114,630 | 117 |

**3.6 ஒதுக்கப்பட்ட நிதிப் பயன்பாட்டு செயலாற்றுகை**

| ஏற்பாட்டு வகை | ஒதுக்கப்பட்ட நிதி | | தேறிய செலவு | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடு, இறுதி ஏற்பாட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதி | இறுதி நிதி | | |
| மீண்டுவரும் | 4,191,000,000 | 4,189,491,336 | 2,832,863,535 | 67.62 |
| முதலீடு | 187,000,000 | 200,066,016 | 117,087,323 | 58.52 |

**3.7 நி.ஒ. 208 பிரகாரம் வேறு அமைச்சுக்களின் முகவராக இத்திணைக்களத்துக்கு வழங்கப்படும் ஏற்பாடுகள்**

| தொடர் இல | ஒதுக்கிடப்ப்பட்ட அமைச்சு/திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | தேறிய செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் சதவகிதமாக % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 151-1-2-1-1501 | கடற்றொழில் அமைச்சு | எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியமை காரணமாக கடற்றொழிற்றுறைக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மதிப்பிடுதல்,வாழ்வாதாரத்தை இழந்தவர்களை அடையாளங் காணல், மற்றும் இழப்பீடு வழங்குதல் உள்ளிட்ட நிர்வாகரீதியான பணிகளை மேற்கொள்ளல் | 1,573,762 | 1,573,762 | 527,297 | 33.51 |
| 151-2-3-64-2104 | கடற்றொழில் அமைச்சு | கடனீரேரி அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கடனீரேரி எல்லைகளைக் குறிப்பதற்கான எல்லைத் தூண்களை நாட்டுதல் - புத்தளம் களப்பு | 2,400,000 | 2,938,700 | 1,339,510 | 45.58 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 151-2-3-82-2509 | கடற்றொழில் அமைச்சு | சீனக் குடியரசினால் வழங்கப்பட்ட பொருத்து வீடுகளை அமைத்தல் | 50,000,000 | 50,000,000 | 19,700,310 | 39.40 |
| 151-2-3-56-2202 | கடற்றொழில் அமைச்சு | விழிப்புணர்வு வேலைத்திட்டங்களுக் கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் | 247,350 | 247,350 | 244,951 | 99.03 |
| 253-1-2-4-1502-12 | ஓய்வூதியத் திணைக்களம் | முற்பண பீ கணக்கு தொடர்பாக கடன் நிலுவை தீர்த்தல் | 846,501 | 846,501 | 846,501 | 100.00 |
| 020-1-17-1409 | தேர்தல்கள் ஆணைக்குழு | உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் - 2025 பணியாளர் கொடுப்பனவு மீள்நிரப்பல் | 2,965,464 | 6,969,376 | 6,946,236 | 99.67 |

## 3.8 நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

| சொத்துக்களின் குறியீடு | குறியீட்டின் விபரம் | 2025.12.31 ஆம் திகதியில் நிதி பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய மீதி(ரூ.) | 2025.12.31.ஆம் திகதியில் நிதி நிலை அறிக்கைக்கு அமைய மீதி(ரூ.) | எதிர் காலத்தில் கணக்கிடப்பட வேண்டிய | முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| **9151** | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 586,267,544.13 | 586,267,544.13 | - | - |
| **9152** | இயந்திரங்கள் | 1252,051,881.41 | 1252,051,881.41 | - | - |
| **9153** | காணிகள் | 408,566,000.00 | 408,566,000.00 | - | - |
| **9154** | அசையாச் சொத்துக்கள் | 22,720,443.02 | 22,720,443.02 | - | - |
| **9155** | உயிரியல் சொத்துக்கள் | - | - | - | - |
| **9160** | செயற்பாட்டிலுள்ள வேலைகள் | - | - | - | - |
| **9180** | குத்தகைச் சொத்துக்கள் | - | - | - | - |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை **

** பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை ஸ்கேன் (SCAN) செய்யப்பட்டு இங்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

இறுதி கணக்காய்வு அறிக்கை இந்த வருடாந்த செயற்றிறன் அறிக்கையின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 04- செயற்றிறன் குறிகாட்டி

### 4.1. நிறுவனத்தின் செயற்றிறன் குறிகாட்டி (செற்றிட்டத்தின் அடிப்படையில்)

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவிகிதமாக (%) உண்மை வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100% -90% | 89% - 75% | 74% - 50% |
| **1. இயற்கை அனர்த்தங்களுக்கான இழப்பீடு வழங்கல்** | | | **71%** |
| **2. கடனீரேரி எல்லைகளை நிர்ணயித்தல்** | | | **50%** |
| **3. கலன் கண்காணிப்பு பிரிவு மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த அலுவலர்களை பயிற்றுவித்தல்** | **100%** | | |
| **4. மு.ப..7.00, பி.ப.2.00 மற்றும் பி.ப.10.00 க்கு பின்வரும் தகவல்களின் கீழ் அறிக்கை பெற்றுக் கொள்ளல்.** | | | |
| **I. 48 கிலோமீட்டர்களினுள் துறைமுக எல்லையை அண்மிக்கும் மீன்பிடிக் கலன்கள் பற்றிய அறிக்கையை பெறுதல்** | **100%** | | |

| | | | |
|---|---|---|---|
| II. எல்லை மீறிப் பயணிக்கும் மீன்பிடிக் கலன்கள் பற்றிய அறிக்கைகளை பெறுதல் | 100% | | |
| III. கலன்களில் VMS துண்டிப்புகள் பற்றிய அறிக்கைகளை பெறுதல் | 100% | | |
| IV. பற்றறி துண்டிக்கப்பட்ட கலன்களின் உட்புற பற்றறியின் துண்டிப்பு பற்றி அறிக்கைகளை பெறுதல் | 100% | | |
| V. ஒரு கால வரம்பில் செயலிழந்துள்ள கலன்கள் பற்றிய அறிக்கைகளைப் பெறுதல் | 100% | | |
| 5. சோதனை நடவடிக்கை பிரிவின் மூலம் அனர்த்தத்திற்குள்ளான கலன்களை அடையாளங் காணலும் தகவல்களை வழங்குதலும் | 100% | | |
| 6. பலநாள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் கலன்களின் தகவல்களை பெற்றுக் கொள்ளலும் முகாமைத்துவமும். | 100% | | |
| 7. ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் கலன்களின் தகவல்களை சரிபார்த்தல் | 90% | | |
| 8. லொக் அறிக்கைகளை தரவுக் களஞ்சியத்தினுட் செலுத்தலும் முகாமைத்துவமும். | 100% | | |
| 9. தகவல்களை ஆய்வு செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல் | 90% | | |
| 10. மீன்பிடிக் கலன்கள் மற்றும் தரைக்கிடையில் வானொலி செய்தித் தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் | 90% | | |
| 11. மீன்பிடிக் கலன்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரம் மற்றும் அழைப்புக் குறியீடுகளை வழங்குதல் | 100% | | |
| 12. கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்கள் தொடர்பான விபத்துக்களின் போது காப்புறுதிக்காக தகவல்களை உறுதிப்படுத்தி வழங்குதல் | 90% | | |
| 13. வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் கலன்களை மீட்டல் மற்றும் இந்நாட்டிற்கு கொண்டு வருதல் தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்படல் | 100% | | |
| 14. இயந்திரக் கோளாறுகள் காரணமாக மிதந்து செல்லும் கலன்களை காப்பாற்ற நடவடிக்கை எடுத்தல் | 90% | | |
| 15. தினசரி வானிலை மற்றும் சீரற்ற காலநிலை முன்னறிவிப்புகளை நாளாந்தம் வழங்குதல் | 100% | | |
| 16. கலன் கண்காணிப்பு அமைப்பின் மூலம் வழங்கப்படும் தகவல்களிற்கமைவாக கலன்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல் | 100% | | |

| | | | |
|---|---|---|---|
| **17. விபத்துக்குள்ளாகும் கடற்றொழிலாளர்கள் மற்றும் கலன்களை காப்பாற்றும் பணிகளை ஒருங்கிணைத்தல்** | **90%** | | |
| **18. இந்து சமுத்திர டுனா ஆணைக்குழு (IOTC), உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு(FAO),ஐரோப்பிய சங்கம் (EU) போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கு கால அறிக்கை வழங்குதல் மற்றும் வருடாந்த கூட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துதல்** | **100%** | | |
| **19. திணைக்கள ஆளணியினர்களுக்கு பயிற்சியளித்தல் - தகவல் தொழில்நுட்ப அடிப்படை** | | **80%** | |
| **20. சேவர் தொகுதியின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படுதல்** | **100%** | | |
| **21. திணைக்களத்தின் தரவு மீளாய்வுக்கு "R" புள்ளிவிபர மொழியை அறிமுகப்படுத்தல்** | **100%** | | |
| **22. OFRP, MTRB மற்றும் NTRB கலன் தொகுதியினூடாக பதிவை ஆரம்பித்தல்** | | | **40%** |
| **23. BLUE TRACKER தொகுதிக்கு அலுவலர்களை பயிற்றுவித்தல்** | **100%** | | |
| **24. Alert Management தொகுதியை அறிமுகப்படுத்தல்** | **100%** | | |
| **25. பிராந்திய Fishing Monitoring Center எனும் பெயரில் ஒன்றியத்தை ஆரம்பித்தல்** | **100%** | | |
| **26. கலன் கண்காணிப்பு அமைப்பை பேணுதல்** | **100%** | | |
| **27. சோதனை மற்றும் கண்காணிப்பு.** | | | |
| • **ஏற்றுமதிக்கான மீன் பதப்படுத்தும் நிறுவனங்களின் சோதனை எண்ணிக்கை** | | | **57%** |
| • **உத்தியோகபூர்வ மாதிரி பெற்றுக் கொள்ளல் - நிறுவனம்** | | | **59%** |
| • **இறால் வளர்ப்பு பண்ணைகள் சோதனை** | | | **40%** |
| • **மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் மீன்கள் தொடர்பாக சோதனைகளை மேற்கொள்ளல்** | **100%** | | |
| **28. ஒப்புதல்கள் மற்றும் சான்றுப்படுத்தல்கள்** | | | |
| • **புதிய மீன் பதனிடும் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் மீன் உற்பத்திகளை பதனிடும் நிறுவனங்களின் பதிவை புதுப்பித்தல்** | **100%** | | |
| • **ஏற்றுமதிக்காக சுகாதாரச் சான்றிதழ் வழங்குதல்** | **91.8%** | | |
| • **மீன்பிடித்தற் சான்றிதழ் வழங்குதல்** | **113%** | | |
| **29. நீர்வாழ் உயிரின வளர்ப்பு கண்காணிப்பு தேசிய வேலைத்திட்டம்** | | | |
| • **இறால் இனப்பெருக்க நிலையங்கள் சோதனை** | | | **40%** |

| | | | |
|---|---|---|---|
| • நீர்வாழ் உயிரின வளர்ப்பு பண்ணைகளின் களச் சோதனை | | | 40% |
| • மாதிரிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் | | | ஐரோப்பிய ஆணையம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றினால் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைய வருடாந்தம் தீர்மானிக்கப்படும். மேற்கொள்ளப்பட்ட அளவு 66. |
| **30.** பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை செயற்படுத்துதல் | | | |
| • கடற்றொழிலாளர்கள் | 100% | | |
| • நிறுவன அலுவலர்கள்/திணைக்களத்தின் துறைசார் அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் | 90% | | |
| **31.** விசாரணை | | | |
| • ஒழுங்குவிதிகளுக்கு அமையாத சந்தர்ப்பங்களுக்கு விசாரணை மற்றும் நடவடிக்கை எடுத்தல். | முன்னேற்றம் - 713 (இதற்கு இலக்குகளை வழங்க முடியாது. எனவே சதவீத ரீதியாகக் காட்டுவது கடினமாகும்.) | | |
| • மீன்பிடிக் கலன்கள்,மீன்பிடி உபகரணங்கள்,உற்பத்திகள் மற்றும் மீன்பிடித் தூண்டில் இரை விநியோக நிறுவனங்கள் தொடர்பான சோதனைகள் மற்றும் விசாரணைகள. | | | 57% |
| **32.** நிர்வாகத் தண்டம் விதிப்பதற்கான அனைத்து மாவட்டங்களிலிருந்தான கோரிக்கைகள், ஏற்புடைய செயன்முறைக்கமைய, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் நிர்வாகத் தண்டம் விதிப்பதற்கான முறைமை ஒன்றை ஆக்குதல் | முன்னேற்றம் - 35 (இதற்கு இலக்குகளை வழங்க முடியாது. எனவே சதவீத ரீதியாகக் காட்டுவது கடினமாகும்.) | | |
| **33.** கலன் கண்காணிப்பு அமைப்பின் மூலம் அடையாளங் காணப்படும் சட்ட மீறல்களுக்கான விசாரணை மேற்கொள்ளல். | முன்னேற்றம் - 889 (இதற்கு இலக்குகளை வழங்க முடியாது. எனவே சதவீத ரீதியாகக் காட்டுவது கடினமாகும்.) | | |
| **34.** மீன்பிடிக் கலன்களின் பதிவு | 100% | | |
| **35.** ஆழ்கடல் கலன்களுக்கான இயக்க அனுமதிப்பத்திரம் வழங்கல் | 100% | | |
| **36.** படகோட்டி அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 100% | | |
| **37.** அலங்கார மீன் இறக்குமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 100% | | |

| | | | |
|---|---|---|---|
| **38. அலங்கார மீன் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **100%** | | |
| **39. அலங்கார மீன் மீள் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **100%** | | |
| **40. சிங்கி இறால் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | | | **70%** |
| **41. சிங்கி இறால் தம்வசம் வைத்திருத்தல்,கொண்டு செல்லல்** | **100%** | | |
| **42. முத்துச் சிப்பிகளை தம்வசம் வைத்திருத்தல்,காட்சிப்படுத்துதல் மற்றும் கொண்டு செல்லலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | | | **63%** |
| **43. முத்துச் சிப்பி ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **100%** | | |
| **44. கடலட்டை பிடித்தல்,சேகரித்தல்,தம்வசம் வைத்திருத்தல் மற்றும் கொண்டு செல்லலுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **92%** | | |
| **45. கடலட்டை இறக்குமதி,ஏற்றுமதி,மீள் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | | **89%** | |
| **46. சிப்பி ஓடு சேகரித்தல்,கொண்டு செல்லல் மற்றும் அலங்காரப் பொருட்கள் உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **100%** | | |
| **47. மீன் மற்றும் மீன் உற்பத்தி நிறுவனங்களை இறக்குமதிக்கு பதிவு செய்தல்** | | | **64%** |
| **48. மீன் மற்றும் மீன் உற்பத்தி நிறுவனங்களை ஏற்றுமதிக்காக பதிவு செய்தல்** | | **87%** | |
| **49. மீன் மற்றும் மீன் உற்பத்தி நிறுவனங்களை மீள் ஏற்றுமதிக்காக பதிவு செய்தல்** | | **77%** | |
| **50. புதிய கலன்களுக்கு பதிவிலக்கங்களை ஒதுக்குதல்,ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல்** | **100%** | | |
| **51. நக்லா (Operculum of *Chicoreus ramosus*) ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம்** | | | **73%** |
| **52. நக்லா (Operculum of *Chicoreus ramosus*) தம்வசம் வைத்திருத்தல்.விற்றல்,காட்சிப்படுத்துதல் மற்றும் கொண்டு செல்லலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **100%** | | |
| **53. *Chicoreus ramosus* மாமிசம் தம்வசம் வைத்திருத்தல்,விற்றல்,காட்சிப்படுத்துதல் மற்றும் கொண்டு செல்லலுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | | | **73%** |
| **54. *Chicoreus ramosus* மாமிச ஏற்றுமதி அனுமதிப்பத்திரம்** | **100%** | | |
| **55. உயிரற்ற சிப்பி ஓடுகளை கொண்ட செல்லல்,தம்வசம் வைத்திருத்தல் மற்றும் காட்சிப்படுத்துதலிற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | | | **65%** |

| | | | |
|---|---|---|---|
| **56. கடற்புல்,கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதிக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்** | **100%** | | |
| **57. லொக் புத்தகங்களை வழங்குதல்** | **100%** | | |
| **58. கணக்காய்வு வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை** | **100%** | | |
| **59. விதிக்கப்பட்டுள்ள மற்றும் முடிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை** | **100%** | | |
| **60. காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்படும் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை** | **100%** | | |
| **61. கட்டடங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்.** | **98%** | | |
| **62. வாகனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் மேம்படுத்தல்** | **83%** | | |
| **63. கட்டடங்களின் நிர்மாணம்** | **100%** | | |

# 05 அத்தியாயம் 05-நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை(SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

## 5.1 அடையாளங் காணப்பட்ட தொடர்புடைய நிலையான அபிவிருத்தி குறிக்கோள்கள்.

| இலக்கு/நோக்கம் | இலக்குகள் | அடைவுக் குறிகாட்டிகள் | இதுவரை பெற்ற வெற்றியின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
|   1.2 தேசிய மட்ட வரைவிலக்கணங்களுக்கு அமைவாக அனைத்து விதமான வறுமை நிலைகளிலுமுள்ள அனைத்து வயதுத் தொகுதிகளைச் சேர்ந்த ஆண்கள்,பெண்கள் மற்றும் பிள்ளைகளின் விகிதத்தை குறைந்தபட்சம் பாதியாக குறைத்தல | குறைந்த வருமானம் பெறும் மீனவ மக்களின் வருமான நிலையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் | மீன்பிடிக் கைத்தொழிலிற்காக பதிவு செய்துள்ள படகுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு | | | 100% |
| | மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி அதிகரித்ததன் மூலம் அந்நியச் செலாவணி வருமானம் அதிகரித்தமை | மீன் மற்றும் நீரியல் வளங்களின் ஏற்றுமதி அதிகரிப்பு | | | 100% |
| | மீன் தயாரிப்புகளுக்கான தொழிற்சாலைகள் திட்டம் | புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகியமை | | | 100% |
|   2.1. 2030 ஆம் ஆண்டாகும் போது பசிப்பிணியை இல்லாதொழித்தல் மற்றும் விசேடமாக குழந்தைகள் உட்பட வறுமையால் வாடும் மற்றும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு பாதுகாப்பான, போசாக்கான,போதியளவான | அதிக புரதம் கொண்ட உணவான மீன் நுகர்வை உயர்த்துதல். | பொதுமக்களுக்கு புரதம் செறிந்த உணவு நுகர்வு தொடர்பாக நடத்தப்படும் விழிப்புணர்வுகளின் எண்ணிக்கை | | **54%** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உணவை வருடம் முழுவதும் பெற்றுக் கொள்ள முடிவதை உறுதிப்படுத்துதல்.. | | | | | |
| 2.C. வரையறுக்கப்பட்ட வகையில் உணவுப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களை தடுக்க உணவு இருப்பு உட்பட உணவு உற்பத்தி சந்தைகள் மற்றும் அவற்றின் துணைத் தயாரிப்புகள் சரியான முறையில் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | உள்நாட்டு டின்மீன் கைத்தொழிலினை மேம்படுத்தல் மற்றும் இறக்குமதியை நிறுத்துதல். | வாடிக்கையாளர்களுக்கு தேவையான டின்மீன் உற்பத்திகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் அளவு | | | **100%** |
| | டின் மீனுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்தல். | நுகர்வோருக்கு நியாயமான விலையில் பெறக்கூடியதாக உள்ளமை | | | **100%** |
| 8 DECENT WORK AND ECONOMIC GROWTH<br><br>8.1.தேசிய நிலைமைகளுக்கமைவாக தனிநபர் பொருளாதார வளர்ச்சியை பேணுதலும் விசேடமாக குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் 7% மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியை பேணுதல். | மொத்த தேசிய உற்பத்திக்கு மீன்பிடித்துறையின் மூலம் கணிசமான தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குதல் | மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு | | **72%** | |
| 8.2. பல்வகைப்படுத்தல், தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் மற்றும் புத்தாக்கங்கள் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் உழைப்பிற்கு அதிக கேள்வியுள்ள துறைகள் பற்றி கவனத்திலெடுப்பதன் மூலம் உயர் மட்டத்திலாக பொருளாதார தயாரிப்பை பெற்றுக் கொள்ளல். | பலநாள் கலன்களுக்கு குளிரூட்டற் தொகுதிகளை அறிமுகம் செய்தல் | குளிரூட்டற் தொகுதி பொருத்தப்பட்ட கலன்களின் எண்ணிக்கை | | | **50%** |
| 8.3. பயனுள்ள செயற்பாடுகளை, நல்ல வேலை வாய்ப்புக்களை, தொழில்முயற்சிகளை மற்றும் படைப்பாற்றலை ஆதரிக்கக்கூடிய வளர்ச்சி நோக்கிலான கொள்கைகளை மேம்படுத்துதல். நிதிச் சேவைகளுக்கான அணுகலை | உள்நாட்டு இளம் மீனவ மக்களுக்காக,கடற்றொழிலுக்கு தொழில்சார் பெறுமதியை பெற்றுக் கொடுத்தல | வழங்கப்பட்டுள்ள படகோட்டி உரிமங்களின் எண்ணிக்கை | | | **100%** |
| | உலக கடற்றொழில் தினத்திற்கு இணையாக, கடற்றொழில் துறையுடன் தொடர்புடைய அனைத்துப் பிரிவுகளையும் | சர்வதேச மட்டத்திலான கண்காட்சியொன் | | | **100%** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழங்கி நுண்,சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை அமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஊக்குவித்தல். | மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குதல். | றை (Aqua Planet ) நடாத்தியமை | | | |
| 8.9. 2030 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு கலாச்சாரம், உற்பத்திகள் மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்தக்கூடிய நிலைபேறான சுற்றுலாத்துறை தொடர்பான கொள்கை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் | சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்வதற்காக நேரடி மீன்பிடித்தல் அனுபவத்தை பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல் | பொழுதுபோக்கு சார் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள மீன்பிடி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | | | **100%** |
| | சுற்றுலாத்துறைக்கு அவசியமான இந்நாட்டில் இல்லாத மீன் உணவுகளை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்கல் | மிகை குளிரூட்டிய மீன் இனங்களை சுற்றுலா ஹோட்டல்களுக்கு தேவையான அளவில் தட்டுப்பாடின்றி வழங்குதல் | | | **100%** |
| 12 RESPONSIBLE CONSUMPTION AND PRODUCTION<br><br>12.3..2030 ஆம் ஆண்டளவில் சில்லறை மற்றும் நுகர்வு மட்டங்களில் தனிநபர் உணவு விரயத்தை குறைத்தல் மற்றும் அறுவடையின் பின்னரான சேதங்கள் உட்பட உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலிகளில் ஏற்படும் விரயத்தை குறைத்தல்.. | அறுவடையின் பின்னரான மற்றும் உற்பத்திச் சங்கிலியில் உள்ள விரயத்தை குறைத்தல்.. | மீன்பிடிக் கலன்களினால் ஏற்படும் அறுவடையின் பின்னரான சேதங்களை குறைப்பதற்கு கலன்களுக்கு குளிரூட்டற் தொகுதிகளை அறிமுகம் செய்தல். | | **50%** | |
| 12.5. 2030 ஆம் ஆண்டளவில் கழிவு உருவாக்கத்தை தடுத்தல், குறைத்தல், மீள்சுழற்சி மற்றும் அவற்றை மீளப் பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல | மீன்களை கையாளுகையில் ஏய்படும் விரயத்தை குறைத்தல் | மீன் கையாளுதல் தொடர்பான புதிய ஒழுங்குவிதி ஒன்றினை வரைபு செய்தல் | | **50%** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடற்றொழிலில் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்தல் மற்றும் மீள்சுழற்சிக்கான சட்ட விதிமுறைகளை ஆக்குதல். | அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய ஒழுங்குவிதிகளின் எண்ணிக்கை | | | **100%** |
| 14.2. அனர்த்தங்களை தாங்கக்கூடியவாறு வலுவூட்டி ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள விதத்தில் கடலை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து கடல்சார் மற்றும் கடலோர சூழற்றொகுதிகளை நிலைபேறான முறையில் முகாமை செய்தலும் பாதுகாத்தலும<br><br>14.4. மீன்களின் உயிரியல் பண்புகளுக்கேற்ப தீர்மானிக்கப்பட்டுள்ள விதத்தில் நிலைபேறாக உயர் அறுவடையை பெற்றுத்தரக்கூடியவாறு மீன் வளத்தை இயலுமான குறுகிய காலத்தினுள் மீள இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக வினைத்திறனாக மீன்பிடித்தலை கட்டுப்படுத்தல் மற்றும் அளவுக்கதிகமான சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் கட்டுப்படுத்தப்படாத மற்றும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மீன்பிடி முறைகளின் பயன்பாட்டை முடிவுறுத்துதல் மற்றும் அறிவியல் அடிப்படையிலான முகாமைத்துவ திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | கடலோர சூழற்றொகுதிகளை பாதுகாப்பதற்காக கடனீரேரி எல்லைகளை அடையாளமிடலும் வரைபடமாக்கலும்.<br><br>கடற்றொழில் வளங்களின் ஒழுங்குமுறைப்படுத்தலிற்காக சட்ட விதிமுறைகளை ஆக்குதல் | எல்லை நிர்ணயிக்கப்பட்ட கடனீரேரிகளின் எண்ணிக்கை<br><br>அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய ஒழுங்குவிதிகளின் எண்ணிக்கை | | **50%**<br><br>80% | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14.7. 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறானவாறு கடற்றொழில் வளங்கள், நீர் சார்ந்த கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை முகாமைத்துவம் மற்றும் நிலைபேறானவாறு கடல் வளங்களை பயன்படுத்தி வளர்ந்து வரும் சிறிய தீவு நாடுகளுக்கும் குறைந்த பட்ச அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுக்கும் கிடைக்கும் பொருளாதார நலன்களை அதிகரிக்கச் செய்தல். | கடல்சார் மீன்வளங்களிற்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல் | கடற்றொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக பதிவு செய்துள்ள நிறுவனங்களின் அதிகரிப்பு | | | **100%** |
| | கடற்றொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரித்தல். | ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு | | **54%** | |
| | சிறியளவிலான மீன்பிடிக் கைத்தொழிலை நிலைபேறான முறையில் பேணுவதற்கான வழிகாட்டியொன்றை தயாரித்தல் | தெற்காசிய நாடுகளின் பங்களிப்புடன் சிறு அளவிலான மீன்பிடித் திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்தல் | | | **100%** |
| 14.A. கடல் ஆரோக்கிய நிலையை மேம்படுத்தல் மற்றும் விசேடமாக அபிவிருத்தியடைந்து வரும் சிறிய தீவு நாடுகளுக்கும் குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் சமுத்திர உயிர்ப் பல்வகைமையை மேம்படுத்துவதற்காக நாடுகளுக்கிடையிலான கடலறிவியல் ஆணைக்குழுவின் நடைமுறைகள் மற்றும் கடல்சார் தொழில்நுட்பத்தை மாற்றும் வழிகாட்டல்களை கருத்தில் கொண்டு அறிவியல் அறிவை விருத்தி செய்தல், ஆராய்ச்சித் திறன்களை உருவாக்குதல் மற்றும் கடல்சார் தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்தல். | இலங்கையைச் சுற்றியுள்ள நீர்ப்பரப்பில் காணப்படும் கடல் வளங்கள் தொடர்பில் தேசிய நீரியல் வளங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையுடன் இணைந்து மீன் இருப்புக்கள் பற்றிய தரவு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தரவுகளின் படி சட்டவிதிமுறைகளை ஆக்குதல் . | தரவு முன்னேற்றம் | | **60%** | |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதலின் சாதனைகள் மற்றும் சவால்கள்

அடைவுகள்

1. கலன் உள்ளீடுகள் தொடர்பான துல்லியமான தரவுகள் இல்லாமை மற்றும் தரவுகள் இற்றைப்படுத்தப்படாமை காரணமாக கடற்றொழில் துறையை முகாமைத்துவம் செய்வதில் ஏற்படும் சிக்கல்களைக் குறைப்பதற்காக, அனைத்து மாவட்டங்களையும் மற்றும் மீன்பிடித் துறைகளையும் உள்ளடக்கும் வகையில் 2025 ஆகஸ்ட் மாதத்தில் மீன்பிடிப் படகுகள் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதன் மூலம் தற்போது இயக்கத்திலுள்ள படகுகள், இயக்கத்தில் இல்லாத படகுகள் மற்றும் பதிவு நீக்கம் செய்யப்பட வேண்டிய பழுதடைந்த படகுகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டமை




2. சிறிய அளவிலான கடற்றொழிலின் முகாமைத்துவத்திற்கான தேசிய திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக, உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் வங்காள விரிகுடா நாடுகளின் சர்வதேச அமைப்பு (BOBP-IGO) ஆகியவற்றுடன் இணைந்து நவம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பில் சர்வதேச மாநாடொன்று நடாத்தப்பட்டமை இதற்கு இணையாக, சிறிய அளவிலான கடற்றொழில் முகாமைத்துவத்திற்கான தேசிய திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்த தெற்காசியாவின் முதல் நாடு என்ற ரீதியில், இலங்கை அத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்கின்றது.









**சவால்கள்**

1. எரிபொருள் மற்றும் உள்ளீடுகளின் விலை மற்றும் உபகரணங்களின் விலை என்பன அதிகரித்தமை காரணமாக கடற்றொழிலில் உள்ள ஆர்வம் குறைவடைதல்
2. மீன் உற்பத்திகளின் விலை ஏற்ற இறக்கங்கள் காரணமாக மீன் நுகர்வு ஒப்பீட்டளவில் குறைவடைதல்.
3. கடற்றொழில் மற்றும் கடல் வளங்கள் தொடர்பான நவீன ஆராய்ச்சிகள் பற்றிய அறிவைப் பெறுவதற்கு உள்ள நிதிரீதியான தடைகள் மற்றும் தொழில்நுட்பத் தடைகள்.
4. சட்டவிரோத மற்றும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவாறான மீன்பிடித்தல் போக்குகள்
5. மீனவ மக்களுக்கு மீன்பிடி நடவடிக்கைகளை மறுசீரமைப்பதில் உள்ள பலவீனங்கள்
6. மீனவ மக்களின் மீன்பிடி நடவடிக்கைகளில் தொடர்ச்சியான நிலைத்திருப்பு பற்றிய நிச்சயமின்மை
7. வளங்களை அதிகமாக சுரண்டுதல்.

8. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஒரு வருடத்தினுள் நிறைவேற்றப்படுகின்ற போதிலும் பொருளாதார, அரசியல், சமூக, சட்ட, தொழில்நுட்ப மற்றும் சூழல் காரணிகளின் உள்ளக மற்றும் வெளியக நிலைமைகளின் நிலையான மாற்றங்களை கட்டுப்படுத்த முடியாமை.
9. மாவட்ட மட்டத்திலான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதும், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களின் போதும், அதிகாரிகள் வெளிநாடு சென்றுள்ளமையால் அத்தியாவசிய ஊழியர் தட்டுப்பாடு ஏற்படல் மற்றும் வளவாளர்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள்.
10. மாவட்ட மட்டத்திலான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களில் ஈடுபடும்போது, போக்குவரத்துக்கான எரிபொருள் செலவு அதிகமாக இருப்பதனால், போதுமான அளவில் மாவட்ட மட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடத்த முடியாமை.
11. பௌதீக வளங்களின் பற்றாக்குறை காரணமாக, திறமையாகவும் வினைத்திறனுடனும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமை.


**இலக்குகள்**

1. கடற்றொழில் முகாமைத்துவத்திற்கு தேவையான அனுமதிப்பத்திரங்கள் வழங்கலை முறைப்படுத்தி விரைவுபடுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையின் டிஜிடல்மயமாக்கலுக்கு அவசியமான நடவடிக்கைகளை அடுத்த வருடத்தினுள் மேற்கொள்ளல்.
2. கடற்றொழில் முகாமைத்துவத்திற்கு அவசியமான அறிவியல் தரவுகளை போதியளவில் பெற்றுக் கொள்வதற்காக தரவுகள் பெற்றுக் கொள்ளும் முறைமையை மேம்படுத்துதல்.
3. அறிக்கையிடப்படாத, முறைசாரா, சட்டவிரோத மீன்பிடித் தொழிலை தடுப்பதற்கு ஒவ்வொரு பலநாள் மீன்பிடிக் கலனிற்கும் அக்கலனில் தொழிற்படும் மீன்பிடி முறைக்குரியவாறு தயாரிக்கப்பட்ட லொக் புத்தகத்தை வழங்குதல்.

# அத்தியாயம் 06- மனித வள விபரம்

## 6.1 பணியாளர் எண்ணிக்கை முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர் எண்ணிக்கை | வெற்றிடம்/ (மிகை ) ** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 51 | 30 | 20 |
| மூன்றாம் நிலை | 28 | 24 | 04 |
| இரண்டாம் நிலை | 926 | 682 | 244 |
| ஆரம்ப நிலை | 105 | 98 | 07 |




விளக்கப்படம் : திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போதைய பணியாளர் குழு

| காலாண்டு | பணியாளர் குழு | சிரேஷ்ட | மூன்றாம் நிலை | இரண்டாம் நிலை | ஆரம்ப நிலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| முதல் காலாண்டு | அங்கீகரிக்கப்பட்ட | 51 | 28 | 926 | 105 | 1110 |
| | ஆரம்ப இருப்பு | 31 | 19 | 655 | 101 | 806 |
| | இடமாற்றம் பெற்று வந்த | 0 | 0 | 21 | 1 | 22 |
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற | 2 | 0 | 16 | 1 | 19 |
| | பதவி வெறிதாக்கல்கள் | 0 | 0 | 1 | 0 | 1 |
| | ஓய்வு பெறல்கள் | 0 | 1 | 1 | 0 | 2 |
| | விடுவித்தல்கள் | 0 | 0 | 3 | 1 | 4 |
| | புதிய நியமனங்கள் | 0 | 7 | 0 | 0 | 7 |
| | இருப்பு | 29 | 25 | 655 | 100 | 809 |
| | வெற்றிடங்கள் | 22 | 03 | 271 | 5 | 301 |
| இரண்டாம் காலாண்டு | அங்கீகரிக்கப்பட்ட | 51 | 28 | 926 | 105 | 1110 |
| | ஆரம்ப இருப்பு | 29 | 25 | 655 | 100 | 809 |
| | இடமாற்றம் பெற்று வந்த | 1 | 0 | 3 | 0 | 4 |
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற | 1 | 0 | 3 | 0 | 4 |
| | பதவி வெறிதாக்கல்கள் | 0 | 0 | 1 | 0 | 1 |
| | ஓய்வு பெறல்கள் | 0 | 0 | 2 | 2 | 4 |
| | விடுவித்தல்கள் | 0 | 1 | 2 | 0 | 3 |
| | இருப்பு | 30 | 25 | 684 | 99 | 838 |
| | வெற்றிடங்கள் | 20 | 03 | 242 | 6 | 271 |
| மூன்றாம் காலாண்டு | அங்கீகரிக்கப்பட்ட | 51 | 28 | 926 | 105 | 1110 |
| | ஆரம்ப இருப்பு | 30 | 25 | 684 | 99 | 838 |
| | இடமாற்றம் பெற்று வந்த | 1 | 0 | 5 | 1 | 7 |
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற | 1 | 0 | 7 | 0 | 8 |
| | பதவி வெறிதாக்கல்கள் | 0 | 0 | 0 | 0 | 0 |
| | ஓய்வு பெறல்கள் | 0 | 0 | 2 | 1 | 3 |
| | விடுவித்தல்கள் | 0 | 0 | 3 | 0 | 3 |
| | பதவி விலகல்கள் | 0 | 0 | 1 | 0 | 1 |
| | இருப்பு | 30 | 25 | 675 | 99 | 829 |
| | வெற்றிடங்கள் | 21 | 03 | 251 | 6 | 281 |
| நான்காம் காலாண்டு | அங்கீகரிக்கப்பட்ட | 51 | 28 | 926 | 105 | 1110 |
| | ஆரம்ப இருப்பு | 30 | 25 | 675 | 99 | 829 |
| | இடமாற்றம் பெற்று வந்த | 1 | 0 | 20 | 0 | 21 |
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற | 1 | 0 | 10 | 1 | 12 |
| | பதவி வெறிதாக்கல்கள் | 0 | 0 | 1 | 0 | 1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பதவி விலகல்கள் | 0 | 0 | 1 | 0 | 1 |
| | ஓய்வு பெறல்கள் | 0 | 1 | 1 | 0 | 2 |
| | இருப்பு | 30 | 24 | 682 | 98 | 834 |
| | வெற்றிடங்கள் | 21 | 4 | 244 | 7 | 276 |

- 2025.03.31 ஆம் திகதியில், பொது நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022 இன் படி உள்நாட்டு/வெளிநாட்டுச் சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ள பணியாளர்கள், வெற்றிடங்களாகக் கருதப்பட்டுள்ளனர்.

- 2025.06.30 ஆம் திகதியில், பொது நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022 இன் படி உள்நாட்டு/வெளிநாட்டுச் சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ள பணியாளர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறார்கள்.

அட்டவணை: திணைக்களப் பணியாளர்கள், 2025 ஆம் ஆண்டின் காலாண்டுகளுக்கமைய ஏற்படும் மாற்றம்

## 6. 2 நிறுவனத்தின் செயல்திறனில் மனித வளப் பற்றாக்குறை அல்லது ஊழியர் உபரி செல்வாக்கு செலுத்தும் விதம்

கிடைக்கப் பெற்றுள்ள அமைச்சரவை அங்கீகாரத்தின் படி வெற்றிடங்களுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்படுகின்றது..

| தொடர் இலக்கம் | சேவை மட்டம் ** | பதவிப் பெயர் | ஆட்சேர்ப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை. | ஆட்சேர்ப்பு முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| **1** | சிரேஷ்ட மட்டம் | உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) – திறந்த | 3 | ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. |
| | | உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்) – மட்டுப்படுத்தப்பட்ட | 8 | |
| **2** | மூன்றாம் நிலை மட்டம் | தரக் கட்டுப்பாட்டு அலுவலர் | 8 | ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **3** | இரண்டாம் நிலை மட்டம் | கனிஷ்ட வானொலி அலுவலர் (தரம் III) | 27 | எழுத்துப் பரீட்சையில் 03 விண்ணப்பதாரிகள் தகுதி பெற்றுள்ளனர். அவர்களுக்காக நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் ஒரு உத்தியோகத்தர் தகுதி பெற்றுள்ளார். மீண்டும் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| | | கடற்றொழில் அலுவலர் (தரம் III )- திறந்த | 115 | பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது. |
| | | கடற்றொழில் அலுவலர் (தரம் III )- மட்டுப்படுத்தப்பட்ட | 14 | பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 07 உத்தியோகத்தர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டு ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. |
| | | கடல் சார் பொறியியல் உதவியாளர் - திறந்த | 10 | பரீட்சை முடிவுகளின்படி தகுதி பெற்ற 10 பேருக்காக நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. அவர்களில் 02 விண்ணப்பதாரிகள் தகுதி பெற்றுள்ளனர். அவர்களைப் பணியில் அமர்த்துவதற்கும், எஞ்சிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கும் மீண்டும் நேர்முகத் தேர்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 6.3 மனித வள அபிவிருத்தி

### திணைக்கள உத்தியோகத்தர்கள், வெளிவாரியான தரப்பினர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் காலப்பகுதி | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | மொத்த முதலீடு | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| **மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு (இலங்கை கடற்படை/ இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களம்) கடற்றொழில் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வுத் திட்டங்கள்.** | 520 | 11 | 11 நாட்கள் | இலங்கை கடற்படை உத்தியோகத்தர்கள்/ இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் / இலங்கை பொலிஸ் சுற்றுச்சூழல் பிரிவின் உத்தியோகத்தர்கள். | **ரூ. 72,160.00** | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. |
| **திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டங்கள், திறன் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முதுமாணி பட்டப்படிப்பு/ டிப்ளோமா பாடநெறிகளை ஏற்பாடு செய்தல்.** | 1271 | 51 | 01/02/03/ 04/05/06 - நாட்கள்<br><br>- 01 வருடம் | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் / பதவிநிலை உத்தியோகத்தர்/ கடற்றொழில் உத்தியோகத்தரகள் / தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் /முகாமைத்துவ சேவை | **ரூ. 3,013,377.92** | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உத்தியோகத்தர் / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்/ அலுவலக பணி உதவியாளர் மற்றும் சாரதி. | | | |

**<u>கடற்றொழிலாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்</u>**

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பயிற்றுவிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | மொத்த முதலீடு | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|
| **கடற்றொழிலாளர் "சுவ சவிய; அடிப்படை முதலுதவி பயிற்சித் திட்டம் மற்றும் உளவளத்துணைத் திட்டம்.** | 45 | 1811 | ரூ. 2,277,238.00 | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. |
| **சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (IUU) மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்குவது தொடர்பாக கடற்றொழிலாளர்கள் மற்றும் பங்குதாரர்களை** | 28 | 1456 | ரூ. 1,264,564.00 | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **விழிப்புணர்வூட்டும் கூட்டுத் திட்டம்.** | | | | | |
| **போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக கடற்றொழிலாளர்களை விழிப்புணர்வூட்டும் திட்டம்.** | 11 | 730 | **ரூ.** 218,100.00 | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. |
| **கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் சயுர காப்புறுதி குறித்து கடற்றொழிலாளர்களை விழிப்புணர்வூட்டல்.** | 29 | 1510 | **ரூ.** 586,100.00 | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. |
| **அனுராதபுரம் பல்கலைக்கழக மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்..** | 1 | 26 | **ரூ.** 14, 310.00 | உள்நாட்டு | தொடர்புடைய விடயப்பரப்பு குறித்த அறிவு கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. |

**2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், பயிற்சித் திட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்கள்.**

| பெயர் | பதவி | வெளிநாட்டுப் பயணம் தொடர்பான விபரங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | **பங்குபற்றிய நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்** | **நாடு** | **காலப்பகுதி** | **பெற்றுக்கொண்ட அறிவு** |
| **திரு.எஸ்.ஜே.கஹவத்த** | பணிப்பாளர் நாயகம் | High Leavel Meeting on Policy Guidance for Mainstreaming Ecosystem | மாலைத்தீவு | பெப்ரவரி 18 - 23 | திணைக்களத் தலைவர் என்ற ரீதியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பணிப்பாளர் நாயகம் இந்நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியுள்ளார். |
| | | 29th Session of the IOTC | பிரான்ஸ் | ஏப்ரல் 07 - 17 | |
| | | 3rd IORIS Committee | பிலிப்பைன்ஸ் | மே 21 - 23 | |
| | | Sri Lanka Expert for korea International Coperation Conference on Ocean and fisheires | கொரியா | அக்தோபர் 21 - 24 | |
| | | International Conference of Fishing Communities (ICFC) | கொரியா | நவம்பர் 09 - 12 | |
| | | Global Training and Experience - Sharing Workshop on the United Nation Fish Stock Agreement | ஜப்பான் | திசம்பர் 08 - 11 | |
| **திருமதி.ஏ.யு.பதிரண** | பணிப்பாளர் (நிர்வாகம்) | Capacity Building Program on Digital Governance for the | இந்தியா | மே 26 – ஜூன் 06 | டிஜிட்டல்மயமாக்கல் தொடர்பான அறிவை இற்றைப்படுத்தலும் அதன் நடைமுறைப் பயன்பாடும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Civil Servants of Sri Lanka | | | |
| **திருமதி ஏ.ஜி.எம்.தில்ஹானி** | பிரதம கணக்காளர் | Digitalization | இந்தியா | ஏப்ரல் 22 - மே 05 | டிஜிட்டல்மயமாக்கல் தொடர்பான அறிவை இற்றைப்படுத்தலும் அதன் நடைமுறைப் பயன்பாடும். |
| **திருமதி.டப்.டீ.என்.பீ.ஜயசிங்ஹ** | கணக்காளர் (விநியோகம்) | Digitalization | இந்தியா | ஏப்ரல் 22 - மே 06 | டிஜிட்டல்மயமாக்கல் தொடர்பான அறிவை இற்றைப்படுத்தலும் அதன் நடைமுறைப் பயன்பாடும். |
| **திருமதி.எச்.பீ.கே.ஹேவாபதிரண** | பணிப்பாளர் (கடற்றொழில் நடவடிக்கை) | 2nd Roundtable Discussion on Indian Ocean sikpjack Tuna Management | மாலைத்தீவு | பெப்ரவரி 16- 18 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு, தேடுதல் நடவடிக்கைகள், மீன்பிடித் துறைமுகம் சார்ந்த செயல்பாட்டு முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டங்கள் மற்றும் முகாமைத்துவ உபகரணங்கள் போன்ற செயல்பாடுகள் செயல்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதால், அந்தப் பிரிவின் தலைவர் என்ற ரீதியில் கலந்துகொண்டுள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 29th Session of the IOTC | பிரான்ஸ் | ஜூலை 07 - 17 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு, தேடுதல் நடவடிக்கைகள், மீன்பிடித் துறைமுகம் சார்ந்த செயல்பாட்டு முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டங்கள் மற்றும் முகாமைத்துவ உபகரணங்கள் போன்ற செயல்பாடுகள் செயல்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதால், அந்தப் பிரிவின் தலைவர் என்ற ரீதியில் கலந்துகொண்டுள்ளார். |
| | | International Seminar on the Port State Measures Agreement | | திசம்பர் 15 - 21 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு, தேடுதல் நடவடிக்கைகள், மீன்பிடித் துறைமுகம் சார்ந்த செயல்பாட்டு முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டங்கள் மற்றும் முகாமைத்துவ உபகரணங்கள் போன்ற செயல்பாடுகள் செயல்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதால், அந்தப் பிரிவின் தலைவர் என்ற ரீதியில் கலந்துகொண்டுள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **திரு.எம்.எம்.ஆரியரத்ன** | உதவிப் பணிப்பாளர் (கடற்றொழில் நடவடிக்கை) | 29th Session of the IOTC | பிரான்ஸ் | ஜூலை 07 - 17 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள் மற்றும் கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு நடவடிக்கைகள் செயல்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதால், இரண்டாம் நிலை உறுப்பினராக கலந்துகொண்டுள்ளார். |
| **திரு.என்.டி.பீ.குணவர்தன** | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 21st Working Party on Data Collection | சீனா | நவம்பர் 25 - 29 | கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு குறித்த அறிவும் அனுபவமும் |
| | | Blue Justice Conference and User Gathering | டென்மார்க் | திசம்பர் 01 -05 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள் மற்றும் கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு நடவடிக்கைகள் செயல்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதால், இரண்டாம் நிலை உறுப்பினராக கலந்துகொண்டுள்ளார். |
| **திரு.டப்.வி.யு.கே.பொதேஜு** | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 3rd IORS Steering Committee Policy Board and Working Group Meeting | பிலிப்பைன்ஸ் | நவம்பர் 17 - 21 | கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு குறித்த அறிவும் அனுபவமும் |
| **திருமதி.டீ.கே.எஸ்.என்.கருணாரத்ன** | உதவிப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) | 37th Session of the IOTC Meeting | டுபாய் | பெப்ரவரி 10- 11 | கடற்றொழில் நடவடிக்கைகளை ஒடுக்குதல், கடல்சார் சட்டம், மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள் மற்றும் கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் இரண்டாம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நிலை உறுப்பினராக கலந்துகொண்டுள்ளார். |
| | | IOTC Data Reporting Workshop | இந்துனீஸியா | மே 26 - 30 | கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு குறித்த அறிவும் அனுபவமும் |
| | | Workshop on the development of the National Plan of Action for small scale fisheries and prepartion of national work plan | இந்தியா | செப்தெம்பர் 17 - 19 | கடற்றொழில் நடவடிக்கைகளை ஒடுக்குதல், கடல்சார் சட்டம், மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள் மற்றும் கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் இரண்டாம் நிலை உறுப்பினராக கலந்துகொண்டுள்ளார். |
| | | 21st Working Party on Data Collection | சீனா | நவம்பர் 25 - 29 | கடற்றொழில் தரவுப் பகுப்பாய்வு குறித்த அறிவும் அனுபவமும் |
| **திருமதி.டப்.ஏ.டி.பீ.டி.வனிகசுந்தர** | சட்ட உதவியாளர் | 8th Edition of the FAO International Course on Fisheries Law | கொரியா | ஏப்ரல் 10 - 30 | கடற்றொழில் நடவடிக்கைகளை ஒடுக்குதல், கடல்சார் சட்டம் குறித்த அறிவு மற்றும் அனுபவம் |
| **திருமதி. ஜி.டப்.ஜே.டீ.வெலிகமகே** | சட்ட உதவியாளர் | Fisrt Edition of the FAO International Course on Fisheries Law Enforcement | கொரியா | அக்தோபர் 11 - 25 | கடல்சார் சட்டம் குறித்த அறிவு மற்றும் அனுபவம் |
| **திருமதி.எச்.எல்.என்.ஹேரத்** | பணிப்பாளர் (தரக்கட்டுப்பாடு) | 8th Edition of the FAO International | கொரியா | ஏப்ரல் 10 - 30 | கடற்றொழில் நடவடிக்கைகளை ஒடுக்குதல், கடல்சார் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Course on Fisheries Law | | | சட்டம் குறித்த அறிவு மற்றும் அனுபவம் |
| | | 21st Working Party on Ecosystem and Bycatch (WPEB21) | பிரான்ஸ் | செப்தெம்பர் 09 - 13 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| **திரு.எம்.கே.டப்.எஸ்.குமார** | உதவிப் பணிப்பாளர் (தரக்கட்டுப்பாடு) | 2025 Seminar on Safety Govermance of Agricultural - Livestock & Fishery Products for Asian Countries | கொரியா | ஜூன் 09 - 12 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| | | 23rd Working Party on Bill Fish (WPB2) of the Indian Ocean Tuna Commission | பிரான்ஸ் | செப்தெம்பர் 15- 18 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| **திருமதி.எம்.எஸ்.ஏ.ஈ.குரே** | தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் | Regional Workshop on Strengthening Sustainable Aquatic Food Value Chain for Enhanced Food Security and Nutrition | இந்தியா | திசம்பர் 01 - 04 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| **திரு.எம்.மாகஸ்** | பணிப்பாளர் (அபிவிருத்தி) | 5th Meeting of parties to the Agreement of IUU Fishing | ஈக்குவதோர் | ஏப்ரல் 21 - 25 | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்குவது தொடர்பாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டுள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Regional Workshop on the WTO Agreement | இந்தியா | மே 15- 16 | கடற்றொழில் சமூக-பொருளாதாரம், நிதி, கடற்றொழில் தொழில்நுட்பம், மீன்பிடி முறைகள், கூட்டுறவு, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டங்கள் குறித்த அறிவும் அனுபவமும். |
| | | 27th Working Party on Tropical Tunas | சீஷெல்ஸ் | அக்தோபர் 21 - 25 | கடற்றொழில் சமூக-பொருளாதாரம், நிதி, கடற்றொழில் தொழில்நுட்பம், மீன்பிடி முறைகள், கூட்டுறவு, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டங்கள் குறித்த அறிவும் அனுபவமும். |
| | | Global Training and Experience - Sharing Workshop on the United Nation Fish Stock Agreement | ஜப்பான் | திசம்பர் 08 - 11 | கடற்றொழில் சமூக-பொருளாதாரம், நிதி, கடற்றொழில் தொழில்நுட்பம், மீன்பிடி முறைகள், கூட்டுறவு, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டங்கள் குறித்த அறிவும் அனுபவமும். |
| **திருமதி.ஆர்.எம்.பன்ச்சமீ** | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | First edition of the FAO Internatiinal Course on Fisheires Law Enforcement | கொரியா | அக்தோபர் 11 - 25 | கடற்றொழில் நடவடிக்கைகளை ஒடுக்குதல், கடல்சார் சட்டம் குறித்த அறிவு மற்றும் அனுபவம |
| **திரு. ஆர்.எஸ்.ஏ.ஆர்.பண்டார** | பிரதிப் பணிப்பாளர் (பயிற்சி) | 8th Edition of the FAO International | கொரியா | ஏப்ரல் 10 - 30 | கடற்றொழில் நடவடிக்கைகளை ஒடுக்குதல், கடல்சார் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Course on Fisheries Law | | | சட்டம் குறித்த அறிவு மற்றும் அனுபவம |
| **திரு.என். ஶ்ரீரன்ஞன்** | கடற்றொழில் உத்தியோகத்தர் | Green Aquaculture Technology for Indian Ocean Rim Countries | சீனா | மே 21 ஜுன் 10 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| **திரு.டீ.எம்.டி.டீ.பீரிஸ்** | உதவிப் பணிப்பாளர் | 2nd Roundtable Discussion on Indian Ocean sikpjack Tuna Management | மாலைத்தீவு | பெப்ரவரி 16 - 18 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| | | 15th Meeting of the Technical Committee on Allocation Criteria | தன்ஸானியா | ஜுலை 07 - 14 | கடற்றொழில் துறையின் விஞ்ஞான முறைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| | | 28th Scientific Committee of IOTC | சீனா | நவம்பர் 29 - திசம்பர் 06 | கடற்றொழில் துறையின் தொழில்நுட்ப முறைகள் குறித்த அறிவும் அனுபவமும். |
| **திரு.டப்.ஏ.எம்.பத்மேந்திர** | உதவிப் பணிப்பாளர் | IOTC 15th Working Party on Neritic Tunas | சீஷெல்ஸ் | ஜுலை 07 - 17 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் துறையில் பெற்றுள்ள அறிவும் அனுபவமும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **திரு.கே.ஏ.டி.சி.ஜே.கஹந்தவல** | உதவிப் பணிப்பாளர் | 16th IOTC Working Party on Methods | சீஷெல்ஸ் | அக்தோபர் 28 - 29 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் துறையில் பெற்றுள்ள அறிவும் அனுபவமும். |
| **திரு.எச்.என்.என்.எஸ்.விஜேதுங்க** | கடற்றொழில் உத்தியோகத்தர் | Reginal Workshop on Information Exchange on Monitoring, Control and Surveillance (MSC) for Combating IUU Fishing | தாய்லாந்து | நவம்பர்24 - 26 | சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்குவது தொடர்பாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டுள்ளார் |
| **திரு.கே.அகிலன்** | கடற்றொழில் உத்தியோகத்தர் | Workshop on the development of the National Plan of Action for small scale fisheries and prepartion of national work plan | இந்தியா | செப்தெம்பர் 17 - 19 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் துறையில் பெற்றுள்ள அறிவும் அனுபவமும். |
| **திரு. எச்.ஏ.எம்.பிரசங்க** | கடற்றொழில் உத்தியோகத்தர் | Green Aquaculture Technology for Indian Ocean Rim Countries | சீனா | மே 21 ஜூன் 10 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் துறையில் பெற்றுள்ள அறிவும் அனுபவமும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **திரு.கே.கே.டி.என்.பிரியதர்ஷன** | கடற்றொழில் உத்தியோகத்தர் | G16 Capacity Building Workshop | இந்தியா | செப்தெம்பர் 17 - 19 | மீன் இருப்பு மதிப்பாய்வு, கடற்றொழில் முகாமைத்துவக் கருவிகள், மீன் ஏற்றுமதி மற்றும் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் துறையில் பெற்றுள்ள அறிவும் அனுபவமும். |

**2025 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுச் செலவுத் தலைப்புகளின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீட்டு விபரங்கள்.**

| செலவினத் தலைப்பு | செலவிடப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|
| **290-1-1-0-2401** | ரூ. 3,085,537.92 |
| **290-1-1-0-2202** | ரூ. 4,360,312.00 |

## 6.3.1. நிறுவனத்தின் செயல்திறனுக்காக பயிற்சிப் பிரிவின் பங்களிப்பு

- அரச உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ கடமைகளுடன் தொடர்புடைய அவர்களின் அறிவு மற்றும் மனப்பாங்கு வளர்ச்சிக்காக நிறுவனத்தினால் வழங்கப்படும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவர்களை வழிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும
- இதன் கீழ், உத்தியோகத்தர்களை பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வழிப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- இந்நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்திற்குள்ளும் ஏனைய வெளி நிறுவனங்களிலும் உத்தியோகத்தர்களைப் பங்குபற்றச் செய்வதன் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.
- இந்நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக, உத்தியோகத்தர்கள் தமது பணியிடங்களில் தமக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைப் பட்டியலுக்கு அமைவாக ஆக்கபூர்வமாகவும் நடைமுறை ரீதியாகவும் அக்கடமைகளை வெற்றிகரமாகச் செய்வதற்கு ஆற்றலைப் பெறுகின்றனர். அத்துடன், ஏனைய நிறுவனங்களுடனான உறவுகளை மேம்படுத்திக்கொள்ளவும் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வாய்ப்பு ஏற்படுகின்றது.
- இதற்கமைய, உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்திக்கும், நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக உத்தியோகத்தர்களின் செயற்திறனான பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், அறிவு மற்றும் சிறந்த மனப்பாங்குகள் நிறைந்த உத்தியோகத்தர் குழாமை அரச சேவைக்காக உருவாக்குவதற்கும் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் ஏதுவாக அமைகின்றன.

**<u>உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.</u>**

















**கடற்றொழிலாளர்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**











All Island Multi - Day Fishing Boat



**அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை**

| இலக்கம் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதற்கான சுருக்கமான விளக்கம | எதிர்காலத்தில் இணக்கமற்ற தன்மையைத் தவிர்ப்பதற்கு முன்மொழியப்படும் திருத்தச் செயற்பாடுகள |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதிநிலை கூற்றுகள்/கணக்குகள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுகள் | **இணக்கமானது** | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் | **இணக்கமானது** | | |
| 1.3 | வணிக மற்றும் தயாரிப்பு முற்பணக் கணக்கு(வணிக முற்பணக் கணக்கு) | x | திணைக்களத்திற்குப் பொருத்தமற்றது | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | **x** | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | **இணக்கமானது** | | |
| 1.6 | வேறு | **இணக்கமானது** | | |
| 2. | **புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பராமரிப்பு (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல.267/2018 இற்கமைவாக நிலையான சொத்து ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.2 | தனிநபர் வேதனாதி ஆவணங்கள்/தனிநபர் வேதனாதி அட்டைகளை புதுப்பித்து பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.3 | கணக்காய்வு உசாவுகை ஆவணத்தை புதுப்பித்து பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை ஆவணத்தை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குகளின் சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து உரிய தினத்தில் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.7 | இன்வென்ட்ரி (பொருட் பதிவேடு) ஆவணத்தை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.9 | சேதம் மற்றும் நட்ட ஆவணத்தை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 2.10 | பொறுப்புக்கள் பதிவேட்டை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.11 | அடியிதழ் சேர் புத்தக ஆவணங்களை (GAN20) புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டிற்காக பணிகளைக் கையளித்தல் (நி.பி.135)** | | | |
| 3.1 | நிதி அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| 3.2 | நிதி அதிகாரங்களை மாற்றுவது குறித்து நிறுவனத்தினுள் அறிவுறுத்தி இருத்தல் | **இணக்கமானது** | | |
| 3.3 | சகல கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்களினூடாக அனுமதிக்கப்படுமாறு அதிகாரமளிக்கப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2014 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைவாக,அரச ஊதிய மென்பொருள் தொகுப்பினை பயன்படுத்தும் போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு செயற்படுதல் | **இணக்கமானது** | | |
| 4 | **வருடாந்த திட்டம் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்றிட்டம் தயாரித்தல | **இணக்கமானது** | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | **இணக்கமானது** | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | **இணக்கமானது** | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீடு தயாரித்து குறித்த தினத்தில் தேசிய வரவு செலவுத் திணைக்களத்துக்கு (NBD)சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றை குறித்த தினத்தில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துக்கு சமர்ப்பித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| 5 | **கணக்காய்வு உசாவுகை** | | | |
| 5.1 | கணக்காய்வாளரினால் குறித்துரைக்கப்பட்டுள்ள தினத்தில்,சகல கணக்காய்வு உசாவுகைகளுக்கும் பதிலளித்திருத்தல் | **இணக்கமற்றது** | **தொடர்புடைய பிரிவுகள் குறிப்பிட்ட திகதியில் பதில்களை வழங்காமை** | **குறிப்பிட்ட திகதியில் பதில்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துப் பிரிவுத் தலைவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்தல்..** |
| 6 | **உள்ளக கணக்காய்வு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **6.1** | நி.பி. 134(2) DMA/ 1-2019 இற்கமைவாக வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர், உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல் | **இணக்கமானது** | | |
| **6.2** | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| **6.3** | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் (4094) உட்பிரிவின் பிரகாரம்,சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல் பிரதிகளையும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| **6.4** | நி.பி.(3) 134 பிரகாரம், சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| 0.7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்** | | | |
| **7.1** | DMA சுற்றறிக்கை 2019 – 1 இன் படி குறித்த ஆண்டில் குறைந்த பட்சம் 04 முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக்களை பேணியிருத்தல் | **இணக்கமானது** | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| **8.1** | 01/2017 இலக்கமுடைய ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கமைவாக, ஆதனக் கொள்வனவு மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்களை கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்துக்கு சமர்ப்பித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| **8.2** | மேற்குறித்த சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம்,அச்சுற்றறிக்கையின் விதிமுறைகளை செயற்படுத்துதல் ஒரங்கிணைத்தலுக்காக பொருத்தமான இணைப்பு அலுவலர் ஒருவரை நியமித்து அவ்வலுவலர் பற்றிய தகவல்களை கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அறிக்கையிட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| **8.3** | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2016/05இற்கமைவாக, பொருள் கணக்கெடுப்பை நடாத்தி அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்திருத்தல் | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.4 | வருடாந்த பொருள் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மிகை,குறைபாடுகள் மற்றும் வேறு பரிந்துரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் மேற்கொண்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| 8.5 | பாவனைக்குதவாத பொருட்களை அகற்றுதல் நி.பி.772 இற்கமைவாக மேற்கொள்ளல் | **இணக்கமானது** | | |
| 9 | **வாகனங்கள் முகாமைத்துவம்** | | | |
| 9.1 | இருப்பிலுள்ள வாகனங்களுக்கு நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயாரித்து உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 9.2 | பாவனைக்குதவாத வாகனங்களை 06 மாதங்களை விடக் குறைவான காலத்தில் அகற்றியிருத்தல் | **இணக்கமற்றது** | **2025 ஆம் ஆண்டிற்குத் தொடர்புடையவாறு அத்தகைய வாகனங்கள் எதுவும் இல்லை** | |
| 9.3 | வாகனங்களுக்கான லொக் புத்தகங்களை புதுப்பித்த நிலையில் பேணி வருதல் | **இணக்கமானது** | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நி.பி.103,104 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | **இணக்கமானது** | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம்,வாகனங்களில் எரிபொருள் தகனத்தை மீள சோதித்தல் | **இணக்கமானது** | | |
| 9.6 | குத்தகைக் கால எல்லையின் பின்னர்,குத்தகை வாகனங்களின் லொக் புத்தகங்களின் பூரண உரிமையை பெற்றிருத்தல் | **இணக்கமற்றது** | **2025 ஆம் ஆண்டிற்குத் தொடர்புடையவாறு அத்தகைய வாகனங்கள் எதுவும் இல்லை** | |
| 10 | **வங்கிக் கணக்குகள் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | குறித்த திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்றை தயாரித்து அத்தாட்சிப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்காக சமர்ப்பித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முந்திய வருடங்களிலிருந்து முன் கொண்டு சென்ற செயலற்ற வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல | **இணக்கமானது** | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்கள் மூலம் உள்ளடக்கப்பட்ட மற்றும் சரி செய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்பட்டு அந்நிலுவைகளை ஒரு மாதத்தினுள் தீர்த்திருத்தல் | | | |
| 11 | **ஏற்பாடுகளின் பயன்பாடு** | | | |
| **11.1** | வழங்கப்பட்ட ஏற்பாடுகளை அவற்றின் எல்லையை மீறாத வகையில் செலவிடல் | **இணக்கமானது** | | |
| **11.2** | ஒ நி.பி.(1) 94 இன் பிரகாரம்,வழங்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் வருட இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளின் எல்லையை மீறாத வகையில் பொறுப்புகளை அணுகல் | **இணக்கமானது** | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்** | | | |
| **12.1** | வரையறைகளுக்கு இணங்குதல் | **இணக்கமானது** | | |
| **12.2** | நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| **12.3** | ஒரு வருடத்திற்கு மேலாக தீர்க்கப்படாதுள்ள நிலுவைக்கடன் மீதிகளை தீர்த்திருத்தல் | **இணக்கமற்றது** | **சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது** | **சட்டமா அதிபரின் ஆலோசனையின் படி எதிர்காலத்தில் செயற்படுதல்.** |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| **13.1** | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல் | **இணக்கமானது** | | |
| **13.2** | பொது வைப்புக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்த நிலையில் பேணுதல் | **இணக்கமானது** | | |
| 14 | **பணி முற்பணக் கணக்கு** | | | |
| **14.1** | மீளாய்வு வருட இறுதியில் காசேட்டு மீதியை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்க அனுப்பியிருத்தல் | **இணக்கமானது** | | |
| **14.2** | நி.பி.371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட வேளைக்கேற்ற துணை பணி முற்பணங்களை அப்பணி முடிவடைந்து ஒரு மாதத்தினுள் தீர்த்திருத்தல். | **இணக்கமானது** | | |
| **14.3** | நி.பி.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறாத வகையில் வேளைக்கெற்ற துணை பணி முற்பணம் வழங்கியிருத்தல். | **இணக்கமானது** | | |
| **14.4** | பணி முற்பணக் கணக்கின் மீதியை,திறைசேரிப் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பீடு செய்தல் | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| **15.1** | தொடர்புடைய ஒழுங்குவிதிகளுக்கமைவாக,திரட்டிய வருமானத்திலிருந்து மீள் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருத்தல் | **இணக்கமற்றது** | **மீளச் செலுத்துதலுக்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை** | |
| **15.2** | திரட்டியிருந்த வருமானம்,வைப்புக் கணக்கிற்கு வரவு வைக்காது நேரடியாக வருமானம் வரவு வைக்கப்பட்டிருத்தல | **இணக்கமானது** | | |
| **15.3** | நி.பி.176 இற்கமைவாக நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்திருத்தல். | **இணக்கமானது** | | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| **16.1** | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எல்லைக்குள் ஆளணியினரை பேணுதல் | **இணக்கமானது** | | |
| **16.2** | ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூல கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| **16.3** | 20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல் வழங்குதல்** | | | |
| **17.1** | தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல் அலுவலர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணமொன்றை புதுப்பித்த நிலையில் பேணி வருதல் | **இணக்கமானது** | | |
| **17.2** | நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் இணையத் தளத்தினூடாக வழங்கப்பட்டிருப்பதுடன்,இணையத்தளம் ஊடாக அல்லது மாற்று வழியில் நிறுவனம் பற்றிய பொது மக்கள் பாராட்டுக்கள்/குற்றச்சாட்டுகளை வெளியிடுவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது. | **இணக்கமானது** | | |
| **17.3** | தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு இரு தடவை அல்லது ஒரு தடவை அறிக்கை சமர்ப்பித்தல் | **இணக்கமானது** | | |
| 18 | **குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்தல்** | | | |
| **18.1** | 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளின் படி குடிமக்கள்/நுகர்வோர் சாசனம் ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தியிருத்தல் | **இணக்கமானது** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **18.2** | அச்சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் படி குடிமக்கள்/நுகர்வோர் சாசனத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பணிகளை மேற்பார்வை செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் நிறுவனத்தினால் ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| 19 | **மனித வளத் திட்டத்தை தயாரித்தல்** | | | |
| **19.1** | 2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இணைப்பு 02 மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| **19.2** | ஆளணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடத்திற்கு குறைந்தது 12 மணி நேரத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்பொன்று மேற்குறித்த மனித வளத்திட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருத்தல் | **இணக்கமானது** | . | |
| **19.3** | மேற்குறித்த சுற்றறிக்கையில் இணைப்பு 01 இல் தரப்பட்ட மாதிரியின் அடிப்படையில் முழு ஆளணியினருக்குமாக வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருத்தல் | **இணக்கமானது** | | |
| **19.4** | மேற்குறித்த சுற்றறிக்கையின் .6 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரித்தல்,திறன் விருத்தி திட்டங்களை அபிவிருத்தி செய்தல்,திறன் விருத்தி திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான பொறுப்பு வழங்கப்பட்ட சிரேஷ்ட அலுவலரை நியமித்திருத்தல் | **இணக்கமானது** | | |
| 20 | **கணக்காய்வு பத்திகளுக்கு பதிலளித்தல்** | | | |
| **20.1** | முன்னைய வருடங்களுக்காக கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்திருத்தல் | **இணக்கமானது** | | |